
கல்கி
KALKI 28-12-80 90 காசு
சுஜாதா
எழுதும்
வஸந்த்! வஸந்த்!
புதிய தொடர் கதை
அடுத்த இதழில்
ஆரம்பம்



சங்கராபரணத்துக்குப் பிறகும் ஏன் தைரியம் வரவில்லை?

சங்கராபரணம் சக்கைப் போடு போட்டது. கர்நாடக இசையைக் கையாண்டால் படம் வெற்றி பெறாது என்ற பிரமையைப் போக்கியது. ஆனாலும் கூட சாஸ்திரிய சங்கீதத்தைத் தமிழ் சினிமாவில் பயன்படுத்த இன்னமும் தயங்குவது ஏன்? இசை அமைப்பாளர் குமார் இந்தக் கேள்விக்குப் பதில் கூறும் முகமாக மனம் விட்டுப் பேசுகிறார்.

சங்கராபரணம் தெலுங்கு மொழிப் படம்' இனிமையான மொழி தெலுங்கு. 'சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைப்போம்' என்று சும்மாவா சொன்னார் பாரதியார்!'' — இப்படிச் சிலர் காரணம் கூறுகிறார்கள்!

''தியாகராஜர் போன்ற பல பெரிய மகான்கள் தெய்வீகக் கீர்த்தனைகளைத் தெலுங்கில்தான் எழுதியிருக்கிறார்கள்'' என்றும் சொல்கிறார்கள்.

''கர்நாடக இசையைப் பயன்படுத்திய தெலுங்குப் படங்கள் அவ்வளவாக இல்லை. ஆனால் நம்மிடமோ தியாகராஜ பாகவதர் காலத்திலிருந்தும், அதற்கு முன்பாகவும் கூட பல சங்கீதப் படங்கள் வெளிவந்துள்ளன. சமீபத்தில் பார்த்தாலும் கலைக் கோயில், கொஞ்சும் சலங்கை, தில்லானா மோகனாம்பாள் என்று பல. எனவே கர்நாடக இசையைத் தமிழ்த் திரை உலகம் பயன்படுத்தித்தான் வருகிறது'' என்று வாதாடுவோர் சிலர்.

என்றாலும் இவையெல்லாம் திருப்தி தரும் வாதங்கள் அல்ல. தமிழ் சினிமா உலகில் கர்நாடக சங்கீதத்துக்கு ஏற்பட்டிருந்த தொய்வைச் சரிசெய்து மறுமலர்ச்சியை உண்டாக்க முயன்றது சங்கராபரணம். ஆனால் அந்த முயற்சி வெற்றி பெற்றதா என்றால் இல்லை!

சங்கராபரணத்தைத் தொடர்ந்து சங்கீதப் படம் எடுக்காதது தமிழ்த் திரை உலகின் தவறுதானே ஒழிய அதற்கு வேறு யாரும் பொறுப்பல்ல.

இப்பொழுதெல்லாம் ஒரு பாட்டுக்கு மெட்டமைக்க உட்காரும்பொழுதே ''நம்ம படத்தில் ஒரு கிராமியப் பாடல் இருக்கணுங்க. அதை மறக்காம வச்சுருங்க!'' இது தயாரிப்பாளரின் கோரிக்கை. இசை அமைப்பாளர்கள் ஏன் கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட பாடல்களை உருவாக்குவதில்லை என்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

ஒரு படத்தில் தக்க இடத்தில் தேவையான பாடல் தேவையான அளவுக்கு இடம் பெறவேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு அந்தக் காட்சிக்குப் பொருத்தமான பாவம், அர்த்தம் எல்லாமே இணைந்து இருக்க வேண்டும் என்பதும் முக்கியம். 'மனோரஞ்சிதம்' படத்தில் நான் ராகமாலிகையில் ஒரு டூயட் பாடலைக் கொடுத்தேன். ரசித்தார்கள். சங்கராபரணம் வெற்றி பெற்றதற்குக் காரணமே பாடல்கள் இடம்பெற்ற இடங்களும், அவை அளவோடு நின்றதும்தான். யாரோ இயக்குனர் விசுவநாத்தைக் கேட்டார்களாம். '' 'மானஸ சஞ்சரரே' பாட்டுக்கு இன்னும் இரண்டு சரணங்கள் கொடுத்திருக்கலாமே என்று! அதற்கு இயக்குனர் விசுவநாத் இன்னொரு முறை இந்தப் பாடலை விரும்பிக் கேட்க வேண்டுமே ஒழிய பாடலா என்று பயந்து தியேட்டரை விட்டு வெளியே ஓடுமளவுக்கு இருக்கக் கூடாது என்றாராம். எவ்வளவு உண்மை அது!

ஏன் அம்மாதிரிப் பாடல்களும் படங்களும் அதற்குப் பிறகு வரவில்லையென்றால் ''சங்கராபரணம் மாதிரி எல்லாரும் படமெடுக்கமுடியாது சார்'' என்ற அவநம்பிக்கை. கர்நாடக இசை மெட்டுக்களைப் போட்டால் ''சங்கராபரணத்தைப் பார்த்துக் காப்பி அடிச்சான்'' என்று குற்றம் கூறும் மனப்பான்மை. இப்படிப்பட்ட மனிதர்கள் திரைப்பட உலகில் அதிகம்.

சங்கராபரணம் பிரமாதமாக ஓடுகிறது என்று கூறினீர்களே, அது வெளியாவதற்கு முன் பட்ட கஷ்டங்கள் யாருக்குத் தெரியும்? அப்பொழுது இதே பாட்டைக் கேட்டவர்கள் எல்லாம் பாராட்டவா செய்தார்கள்? அதுவும் 'ஒருதலை ராகம்' கேஸ்தான்! சரித்திரம் படைக்கும் இப்படங்களின் சரித்திரத்தைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும்.

மக்களைக் குறைகூறிப் பயனில்லை. தயாரிப்பாளர்களைத் திட்டியும் லாபமில்லை. இசை அமைப்பாளர்களுக்கு இசை ஞானமில்லாமலில்லை. பாடத் தெரியாமல் பின்னணிப் பாடகர்கள் வருவதில்லை.

ஆயின் என்ன காரணம்? யாருக்குமே புரியவில்லை!

பேட்டி: ''சலஞ்''





பற்றாக்குறையோடு வாழப் பழகிக் கொள்ளுங்கள்! — ஆர்.வி.



அதிகார பலம் அளிக்கும் ஆணவபோதை!

ஆனை மலைக் குன்றுகளில் கள்ளச் சாராய வேட்டை ஆடச் சென்ற போலீஸார், கானகத்து யானைகள் சில சாராயத்தைக் குடித்துவிட்டு, போதை தலைக்கேற ஆனந்தமாக ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். —செய்தி.

❋ ❋ ❋

❋ உலகத் தமிழ் மகாநாட்டுக்கு வரும் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் சங்க காலம் போலவே இன்றைக்கும் வைகையில் நீர் கரை புரண்டு ஓடுகிறது என்ற எண்ணத்துடன் திரும்ப வேண்டுமல்லவா? அப்படி ஒரு மாயையை சிருஷ்டிக்க இன்றைக்குப் பயிர்கள் வாடுகின்றன. நீர் விடப் படாமல் தேக்கி வைக்கப் படுவதால் பாதிக்கப்படுகிறவர்கள் எட்டு லட்சம் ஏழை விவசாயிகள். அவர்கள் தட்டிக் கேட்கலாமோ? கப்சிப், கபர்தார்!

❋ அரசுடைமையான பாங்குகளில் ஓவர்டைம் செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. 77ல் 9.63 கோடி; 78ல் 19.99 கோடி; 79ல் 24.41 கோடி. '''கையெழுத்துப் போட சம்பளம்; வேலை செய்ய ஓவர்டைம்' என்பது வெறும் ஜோக் அல்ல என்று நிரூபித்து வருகிறீர்களா?'' என்று பாங்கில் பணம் போடும் பாரதக் குடிமகன் கேட்கக் கூடாது. பாங்கு ஊழியர்களிடம் யூனியன் பலம் இருக்கிறது; ஜாக்கிரதை!

❋ ''பற்றாக்குறைகள் இருக்கலாம்; அதனால் விலைவாசிகளும் உயரலாம். ஆனால் பற்றாக் குறையைப் பெரிதுபடுத்திப் பீதியை வளர்ப்பானேன்? பற்றாக்குறை இருக்குமிடங்களில் மக்கள் அரசுக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். பற்றாக் குறையுடன் வாழக் கற்றுக்கொண்டு விடவேண்டும்!'' — இப்படி ஓர் அற்புதமான யோசனையை வெளியிட்டிருக்கிறார் ஆர். வ். நம் ஜனங்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை. ''லபோ. லபோ'' என்று அடித்துக் கொள்கிறார்கள். பற்றாக்குறையைப் பொறுத்துக்கொண்டு அது பற்றிப் பேசாதிருந்து விட்டால் அப்புறம் பிரச்னை ஏது?

❋ வி. வி. கிரி குடியரசு தலைவரா யிருந்தபோது அவரிடம் அனுமதி பெற்று, புதுதில்லி நகரசபை கமிட்டியின் அன்றைய தலைவர் ஒப்புதலுடன் ஓர் அழகிய பொங்குபுனல் அமைத்தார் பல்பீர். அவர் இன்று சர்வதேசப் புகழ்பெற்று விட்ட சிற்பி. நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் இந்தப் பொங்கு புனலை அமைக்க எட்டுமாத காலமும் எண்பதாயிரம் ரூபாயும் செலவாயிற்று. இன்று அதை மூன்றே நாட்களில் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டார்கள். ''ஏன்? எதற்காக?'' என்கிறீர்களா! சரிதான், அரசின் ஒவ்வொரு காரியத்துக்கும் உங்களுக்குக் காரணம் கூறிக் கொண்டிருக்க முடியுமா என்ன?

❋ ''எங்கு ஆலைகளுக்கு மின்சாரம் இல்லை; மின் நிலையங்களுக்கு நிலக்கரி இல்லை; நிலக்கரிச் சுரங்கங்களுக்கு ரயில் வாகன்கள் இல்லை. சிமெண்ட் ஆலைகளுக்கோ மின்சாரம், நிலக்கரி, ரயில் வாகன்கள் எதுவுமே இல்லை. சிமெண்ட் உற்பத்தி பாதிக்கப்படாமல் என்ன செய்யும்? சிமெண்ட்டில் கள்ளச்சந்தை பெருகாமல் எப்படி இருக்கும்?'' என்கிறார் பால்கிவாலா. அரசாங்கமோ, இருக்கிற சிமெண்ட் ஆலைகளின் சக்தி முழுமையாகப் பயன்படுத்தப்பட வழி வகுக்காமல் சிமெண்ட் பஞ்சத்தைப் போக்கப் புதிய ஆலைகளை நிறுவ முனைகிறது! ''தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிப்பதா?'' என்று பாரதக் குடிமகன் கேட்கலாமோ? அவனுக்கென்ன தெரியும் சுவாமி? பால்கிவாலாவுக்குத்தான் என்ன தெரியும்?

❋ ❋ ❋

அந்த யானைகள் பாடு தேவலாம். அவை கள்ளச் சாராயத்தை மட்டும் தான் குடித்துப் போதை ஏற ஆடின. அதிகார பலம் தரும் ஆணவ போதை தலைக்கேறும் வாய்ப்பு அவற்றுக்கு இல்லை.

1980 டிசம்பர் 28

ரௌத்திரி மார்கழி 13

மலர் 39 : இதழ் : 22



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்



மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் தாமதம் ஏன்?

'மருத்துவக் கல்லூரி அட்மிஷன் விஷயத்தில் அவசரப்படாமல் மூன்று மாதங்கள் வரை இழுக்கடித்ததற்காகத் தமிழக அரசுக்கு மதிப்பெண் வழங்கலாம்' என்று வஞ்சப் புகழ்ச்சியணியில் 14–12–80 கல்கி இதழில் ஒரு தலையங்கம் எழுதப்பட்டது.

இது சம்பந்தமாகத் தமிழக சுகாதார, பொது நல அமைச்சர் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களை அணுகி அட்மிஷன் விஷயத்தில் தாமதத்திற்குக் காரணம் கேட்ட போது அவர் அளித்த விளக்கம் :

''பி.யு.சி முடித்து சென்ற ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்த மாணவ, மாணவியர் இவ்வாண்டு இரண்டாவது ஆண்டுப் படிப்பில் Anatomy மற்றும் Physiology ஆகியவை படிப்பார்கள்.

இவ்வாண்டு முதல் மருத்துவப் படிப்பில் சேரும் மாணவ மாணவியருக்கு, படிப்பின் மொத்தக் காலத்தில் ஒரு வருடம் குறைக்கப் பட்டதால் +2 முடித்து இவ்வாண்டு சேரும் மாணவ மாணவியரும் Anatomy மற்றும் Physiology படிக்க வேண்டிய நிலை.

இம்மாதிரி இரண்டு பிரிவினருக்கும் ஒரே சமயத்தில் மிக முக்கிய மருத்துவப் பாடங்களான மேற்கூறிய பிரிவுகளைக் கற்பிக்க மருத்துவக் கல்லூரிகளில் சில நடைமுறை வசதியின்மை உள்ளன.

எங்கள் காலத்தில் 6 மருத்துவ மாணவர்கள் ஓர் உடலை Anatomy வகுப்பில் பரிசோதித்துக் கற்பார்கள். தற்போது சுமார் 15 மாணவர்கள் ஓர் உடலை வைத்து ஆராயும் நிலை உள்ளது.

இவ்வாண்டு தோன்றியுள்ள நெருக்கடியால் நான் முதலில் குறிப்பிட்ட இரு பிரிவினரும் ஒரே சமயத்தில் Anatomy வகுப்பில் படிக்க வேண்டுமானால் சுமார் 30 மாணவர்கள் ஓர் உடலை வைத்துக் கொண்டு பரிசோதித்துக் கற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கும்... இதனால் கற்பிக்கும் திறனிலும், மாணவர்கள் கற்கும் திறனிலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

இதனால் இவ்வாண்டு மருத்துவக் கல்லூரியில் சேரும் மாணவர்களின் படிப்பைச் சில மாதங்கள் 'Stagger' செய்ததன் மூலம் இரு பிரிவினரும் மாறுபட்ட கால கட்டத்தில் மேற்சொன்ன பாடப் பிரிவுகளில் கற்க ஏதுவாயிற்று...


இம்மாதிரி முக்கிய அம்சங்களை எண்ணத்தில் கொண்டே தமிழக அரசு மருத்துவக் கல்லூரி அட்மிஷனைச் சற்று காலந்தாழ்த்தியதே தவிர இதில் மெத்தனமோ, அல்லது நிர்வாகத் திறமையின்மையோ இல்லை...

அடுத்த ஆண்டு இவ்வித காலதாமதம் இல்லாமல் அட்மிஷன் முன்புபோல் குறிப்பிட்ட காலத்தில் முடிவடைந்து மருத்துவக் கல்லூரிகள் வழக்கப்படி திறக்கப்படும்...''

பேட்டி : நாயகன்

வரவேற்பும் வழியனுப்பும்!

அருகருகே உள்ள மாவட்டங்களான மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் ஒரு விசேஷம் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் ஒரு ஊரின் பெயர் வாடிப் பட்டி! கோவை மாவட்டத்தில் (உடுமலை வட்டம்) ஒரு ஊரின் பெயர் போடிப் பட்டி. மதுரை வரவேற்க, கோவை வழி யனுப்பு கிறதா?



-எஸ். முல்லை மணாளன்

''ஒரு தந்தை தனது குழந்தைகளுக்குச் செய்யக் கூடிய மிக முக்கியமானஉபகாரம், குழந்தைகளின் தாயை நேசிப்பது தான்!''

-தியோடர்ஹெஸ்பர்க்

-சம்பத் குமாரி

மோசமான மனிதர்களே இல்லாமல் போய் விட்டால், நல்ல வக்கீல்கள் உருவாகியிருக்க மாட்டார்கள்!

-சார்லஸ் டிக்கன்ஸ்

—தகவல்: இரா. கந்தையா



வீட்டில் அணைந்த விளக்கு

ஸ்ரீஜா

8

அவன் முற்றிலும் எதிர்பார்க்காத நேரத்தில் சுமங்களா அவனுடைய அறைக்குள் நுழைந்தாள்.

பெரிய மெத்தைக் கட்டிலொன்றில் படுத்தபடி நிர்வாணப் படங்கள் உள்ள தமிழ்ப் பத்திரிகையில் அவன் லயித்துக் கிடந்தபோது தான் அவள் உள்ளே நுழைந்தாள்.

''வா... சுமங்களா... நான் உன்னை எதிர்பார்க்கவே யில்லை.''

''உங்களை நான் பத்து நாட்களாகத் தேடுகிறேன். கிடைக்க மாட்டேனென்கிறீர்கள். இன்று எப்படியும் உங்களைச் சந்தித்தே தீருவது என்ற முடிவுடன்தான் வந்தேன்.

அறைக் கதவு தாளிடப்படாமல் சிறு இடைவெளியுடன் பொருந்தியும் பொருந்தாமலும் இருந்தது.

அவள் பேச்சில் வெளிப்பட்ட அசாதாரணமான கனம் பரமேசுவரனைச் சில கணங்கள் ஸ்தம்பிக்க வைத்தது.

வெறும் பனியனும் பேண்டும் அணிந்து மெத்தைக் கட்டிலில் படுத்திருந்தவன் பத்திரிகையை மெத்தையில் போட்டுவிட்டு எழுந்து நின்றான்.

''வா...வந்து இப்படி உட்கார்'' — அவளுடைய கையைப் பிடிக்க வந்தான்.

அவள் விலகி நின்றாள்.

அழுது அழுது அவள் முகம் வீங்கிப் போய் இருந்தது. நெற்றியில் கலைந்த குங்குமம், மையிடப்படாத விழிகளும்...

அவன் தோற்றத்தில் இருந்த கடினத்தைப் புரிந்து கொண்டாள்.

''பார்வதத்திடம் நம் கல்யாணத்தைப் பற்றிச் சரியாகப் பிடிகொடுத்து ஒன்றும் சொல்லாமல் நழுவி இருக்கிறீர்கள். உங்களையும் அந்தப் பக்கமே காணவில்லை...''

''சுமங்களா...'' என்று புன்சிரிப்புடன் ஏதோ பேச ஆரம்பித்தவனைக் கையைக் காட்டிப் பாதியில் நிறுத்தினாள்.

''இந்தச் சிரிப்பு, மழுப்பல் எதுவுமே வேண்டாம். தயவுசெய்து நான் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள். நம் கல்யாணம் என்று வைத்துக் கொள்ளலாம்?''

''அதைத் தெரிந்து கொண்டு போகத்தான் வந்தாயா?''

''ஆமாம். அதுவும் உடனே தெரிந்தாக வேண்டும். எங்கோ ஓர் அரச மரத்தடியில் இருக்கும் பிள்ளையார் முன்போ அல்லது எங்கேனும் வனந்தரத்தில் யாரும் கவனிப்பாரற்று மௌனமாக வீற்றிருக்கும் ஏதேனும் ஒரு தெய்வத்தின் முன்னிலையிலோ எனக்கு நீங்கள் தாலி கட்டினால்கூடப் போதுமானது...''

அவன் திடீரென்று கடினப்பட்டுப் போனான்.

''நீ விரும்புவது சாத்தியமில்லை சுமங்களா.''

''அதன் அர்த்தம்?''

''அதான் தெளிவாகச் சொல்லிவிட்டேனே!''

''இது நீங்க நினைக்கிற மாதிரி 'டீல்' இல்லே. வாழ்க்கை.''

அவன் மௌனமாக இருந்தான்.

''நீங்கள் என்னைத் தாலி கட்டியோ அல்லது ரிஜிஸ்டர் ஆபீஸிலோ உடனே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்களா அல்லது நீங்கள், பார்வதம், அருணாசலம் எல்லோருமாகச் சேர்ந்து கம்பி எண்ணும்படி செய்யட்டுமா? உடனே போவேன். போலீசிலே ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டுத் தற்கொலை செய்து கொள்வேன். என் தற்கொலைக்கு இவர்கள்தான் காரணம் என்று கடிதம் எழுதி உங்களை மாட்ட வைப்பேன். இன்னும் இரண்டு நாள் அவகாசம் தருகிறேன். இப்போ நான் நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான் போகிறேன்.''

சுமங்களா கோபத்துடன் வெளியே வந்தாள்.

பரமேஸ்வரன் அவளைப் பின் தொடர்ந்து பிடிக்க வாசல் வரை வந்தான்.

அப்போது... அங்கே...

கோமதி நின்று கொண்டிருந்தாள். அவளுடன் உயர் போலீஸ் அதிகாரி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

சுமங்களா காரில் போய் உட்கார்ந்து கொண்டாள். வெளியே வந்த பரமேஸ்வரன் வெளி வராந்தாவில் நின்றவர்களைப் பார்த்துவிட்டு, சில நிமிஷங்கள் அப்படியே நின்றான்.

''நீங்கள்?'' — பதற்றத்துடன் கேட்டான்.

''நாங்கள் சுமங்களாவின் நண்பர்கள். இவர் யார் என்று தெரிய வேண்டுமா? பெயர் திருமேனி. உதவிப் போலீஸ் அதிகாரி. இது போதுமா இன்னும் அதிகமான விவரம் ஏதாவது வேணுமா?''

கோமதி நிதானமாகப் பதில் சொன்னாள்.

போலீஸ் அதிகாரியைப் பார்த்ததும் அவன் சப்த நாடியும் அடங்கிப் போய் நின்றுவிட்டான்.

கோமதி தொடர்ந்து பேசினாள்.

''சுமங்களாவின் எச்சரிக்கை புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இதில் போலீஸ், அது இது என்றெல்லாம் தேவைப்படாமல் நீங்களே நல்ல முடிவுக்கு வர நிறைய அவகாசம் இருக்கு. உங்களை எப்படி எந்த வகையில் சிக்க வைக்க வேண்டும் என்ற வழி எங்களுக்குத் தெரியும். இப்பொழுது கூட ஒரு நண்பர் என்ற முறையில்தான் உங்களிடம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஒரு குற்றவாளி என்கிற எண்ணத்தில் அல்ல. நீங்கள்... உங்களுக்கு இருக்கிற அந்தஸ்து, பண பலம் இவைகளை வைத்துக் கொண்டு, இது என்

சொந்த விஷயம் அதில் யாரும் தலையிட முடியாது என்று சுமங்களா மாதிரி இருப்பவர்களிடம் அடாவடித்தனம் பேசலாம். பேசுவீர்கள் என்று தெரியும். சட்டத்தின் தன்மை பற்றி எங்களுக்கும் தெரியும். அவளுடைய ஒரே ஒரு வாக்குமூலத்தில்தான் இப்பொழுது எல்லாமே உங்களை விட்டு ஒதுங்கி யிருக்கின்றன. அவள் எப்படிக் கொடுக்க வேண்டுமோ அப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தால் போதும். நீங்கள், பார்வதம், அருணாசலம் மூவரும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டுத் தண்டனை அடைவது நிச்சயம். புரிகிறதா? என்ன ஸ்டேட்மெண்ட் தெரியுமா? அதை நான் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன். இண்டியன் பீனல் கோர்ட் செக்ஷன் நம்பர்375, 376... என்ன தெரியுமா?''

கோமதி படபடப்புடன் பேசிவிட்டு காருக்குள் வந்தாள். அவளைத் தொடர்ந்து திருமேனி — அவளுடைய சகோதரன் வந்தான்.

''பார்வதத்தையும் அருணாசலத்தையும் பார்த்துவிட்டு வரலாம்'' என்று பரமேஸ்வரன் காது படவே அவள் கூறினாள்.

பார்வதமும் அருணாசலமும் நடுங்கிப்போய் நின்று கொண்டிருந்தார்கள். திருமேனி அவர்களிடம் கேள்விகளைக் கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தார்.

யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. சுமங்களாவும் கோமதியும் வெளியே உட்கார்ந்திருந்தனர்.

உள்ளே அவர்களிடம் பேசிவிட்டு அறைக் கதவைத் திறந்து கொண்டு திருமேனி வெளியே வந்தான்.

''நான் இப்பொழுதும் கூடப் போலீஸ் அதிகாரி என்ற தோரணையில் பேச வரவில்லை. பரமேசுவரனிடம் நான் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. காரணம் என்ன தெரியுமா? நான் இதில் பேச ஆரம்பித்தால் அது பேச்சாக இல்லாமல் ஒரு போலீஸ் விசாரணை ஆகிவிடும். நீங்கள் ஸ்டேஷனுக்கு வந்து பதில் சொல்லும்படியாக மாறிவிடும். நான் காக்கி உடை போட்டுக் கொண்டிருக்கலாம். நரம்பும் தசையுமான இந்த உடம்பின் மேல்தான் இந்தப் போலீஸ் உடுப்பைப் போட்டுக் கொண்டிருக்கிறேன். அதனால்தான் இதையும் ஒரு மனிதாபிமானத்துடன் அணுக விரும்பி உங்களுடன் பேச வந்தேன். சட்டத்திலே எது எதுக்கு இடம் உண்டு, எது எதுக்கு இடம் இல்லை என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். யாருடைய சொந்த ஆசாபாசங்களிலும் குறுக்கிட்டு மத்தியஸ்தராகப் பணியாற்ற எங்களுக்கு அதிகாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதில் எங்கேனும் ஒழுங்கீனம் இருப்பதாக நாங்கள் சந்தேகித்தால் எங்கள் பிரவேசத்தை உங்களில் யாருமே தடுக்க முடியாது. பரமேசுவரனிடம் பேசி எப்படியாவது சுமங்களாவின் கல்யாணத்தை நடத்தி வைக்க முயற்சி செய்யுங்கள்.''

இப்படித்தான் திருமேனி எச்சரித்துவிட்டு வெளியே வந்தான்.

''நீ விரும்பினபடி இரண்டு இடத்திலும் என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லியாகி விட்டது. எங்கள் சட்டம் என்பது கடிகாரத்தில் உள்ள பெண்டுலம் போன்றது. நான் என்ன சொல்கிறேன் என்று புரிகிறதா?'' என்றான் சுமங்களாவைப் பார்த்து.

''சொல்லுங்கள்.''

''கடிகாரத்தின் பெண்டுலத்தின் இயக்கத்துக்கு ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையுண்டு. அப்படியும் இப்படியும் அது ஆடினாலும் அதற்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்கு மேல் அதனால் போக முடியாது. இப்பொழுது அதேபோலத்தான் நான் செயல்பட்டிருக்கிறேன். செயல்பட முடியும். ஒரு மனிதாபிமான அடிப்படையில் இதை அணுகியிருக்கிறேன். இதற்கு மேல் போக வேண்டு





அருள்வாக்கு

ஆனந்தத்தைப் பெருக்கவல்ல நிதி

மாலைவேளைகளில் வீட்டிலேயே ஒரு பத்து நிமிஷமாவது பகவந் நாமாக்களைப் பாடி பஜனை செய்ய வேண்டும். இதில் காரிய சாத்தியமில்லாத சிரமம் ஏதுமில்லை. குடும்பத்தினர் எல்லோரும் பூஜை அறையில் அல்லது பூஜைக்கென்று அறை இல்லாவிட்டால், ஒரு குத்து விளக்கை ஏற்றி வைத்து அதன் முன் உட்கார்ந்து கீர்த்தனங்களைப் பாடவேண்டும்; நாமாவளிகளை கானம் செய்ய வேண்டும். அவரவர்களும் தங்களுக்குரிய நித்ய கர்மானுஷ்டானங்களை விடாமல் செய்துவிட்டு அதோடு பஜனை செய்ய வேண்டும். பகவானைப் பாடுவதற்கு வெட்கமே பட வேண்டாம். கருணையே வடிவான கடவுளின் நாமத்தைச் சொல்வதில் வெட்கத்துக்கு இடம் ஏது? பெரிய சங்கீத ஞானம், ராக பாவம், சாரீர வசதி இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பக்தி பாவனைதான் முக்கியம். ஏதேதோ விளையாட்டுக்களில் திரிந்துகொண்டிருக்கிற குழந்தை அம்மாவின் நினைப்பு வந்ததும் அவளிடம் வந்து 'அம்மா அம்மா' என்று கத்துகிறதல்லவா? அதில் வெட்கமோ சங்கீத அழகோ இல்லை. லோக மாதாவான பரமாத்மாவை லௌகிக வியாபாரங்களிடையே சிறிது நேரமாவது நினைத்து இப்படியே ராமா, கிருஷ்ணா, சிவா, அம்பா என்று கத்த வேண்டும். இந்தப் பழக்கம் ரொம்பவும் நல்லது. நம் நித்திய க்ஷேமத்தையும் ஆனந்தத்தையும் பெருக்க வல்ல பெரிய நிதி இது.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

மென்று நீ விரும்பினால் அதற்கு வேறு சில நடைமுறைகள் உண்டு. அதுதான் கடைசி வழியென்றால் அதையும் பிறகு பார்த்துவிடலாம். இதற்கு அவர்களுடைய அடுத்த நடவடிக்கைகளைக் கவனிப்போம்.''

இருமேனி கோமதியைப் பார்த்தான். அவள் அவனுக்கு ஜாடை காட்டினாள். அவன் விடை பெற்றுக் கொண்டு ஜீப்பில் ஏறிப் போய்விட்டான்.

பதற்றத்துடன் வெளியே வந்தாள் பார்வதம். கூடத்தில் சுமங்களாவும் கோமதியும் இருந்தார்கள். சுமங்களாவிடம் நெருங்கி வந்து நின்று கொண்டாள்.

''ஏண்டி! எங்களை இப்படி யெல்லாம் பழிவாங்க வேண்டும் என்று எத்தனை நாளாடி இட்டம் போட்டிருந்தே, நாசமாய்ப் போறவளே! மடத்துத் திண்ணையிலே அநாதையா இருந்த உன்னைக் கூட்டிக்கிட்டு வந்து, சோறு போட்டு, படிக்க வைக்க வளர்த்து ஆளாக்கினதுக்குப் பிரதி உபகாரமாடி, அநாதை நாயே! போலீஸ்காரர்களைக் கூட்டிக்கிட்டு வந்து மிரட்டறியா?''

''இந்தா... பார்வதம், அனாவசியமா வார்த்தைகளைக் கொட்டாதே! எதைக் கொட்டினாலும் அள்ளலாம்... வார்த்தையைக் கொட்டினா அள்ள முடியாது. எதைப் பேசறதா இருந்தாலும் அளந்து பேசு. இதுவரையிலே, இதோ அவலம் கெட்டு நிற்கிற இந்த நேரத்திலே கூட உன்னை அனாவசியமா ஒரு வார்த்தை நான் பேசல்லே. அவரோட பழகறதுக்கு ஊக்க மூட்டினே! உற்சாகப்படுத்தினே! பழகினேன்; நீ எதைப் பார்த்து என்னைப் பழக விட்டியோ, அது நடந்து முடிந்த பிறகு நீங்க என்னை ஏமாத்தப் பார்க்கிறீங்க''என்று சீறினாள் சுமங்களா.

''உன்னை என்னடி ஏமாத்தினோம்?''

''பார்வதம்மா அதை நான் சொல்லட்டுமா? நீங்க பரமேசுவரன் கிட்டே பட்ட கடனைப் பத்தி நான் விஸ்தாரமாச் சொல்லட்டுமா? உங்க வியாபாரக் கூட்டாளியாகச் சேர அவரைக் கைக்குள் போட்டுக் கொள்ள நீங்க இவளை ஒரு காயாகப் பயன்படுத்தினதைப் பத்தி நான் விவரிக்கட்டுமா? இல்லே இன்னொன்று இருக்கிறதே...

''நீங்க மாதச் சீட்டு என்று சொல்லி மயிலாப்பூர் வரை போறீங்களே... அது என்னன்னு இவளுக்குத் தெரியாது. இப்ப வந்தாரே போலீஸ் அதிகாரி அவருக்குத் தெரியும்.''

பார்வதம் வாயடைத்துப் போனாள்.

''இவளை மாதிரியே அந்தப் பெண்ணையும் ஏமாற்றப் பார்த்து, பிறகு ஏமாற்றி... அவ ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே தற்கொலை பண்ணிக்கிட்டது இவளுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆமா... உண்மை அதுதான். அதிகமா ஒண்ணும் பேச விரும்பவில்லே..ஆகவேண்டிய காரியத்தைப்பாருங்க'' என்ற கோமதி, சுமங்களாவிடம் திரும்பி, ''நான் வரேன் சுமங்களா, தைரியமா இரு. எதாக இருந்தாலும் இந்த டெலிபோன் நம்பருக்கு போன் பண்ணு. இது யாருடைய நம்பர் தெரிகிறதா? இருமேனியோட நம்பர். இவங்க சொரூபம் தெரிஞ்சு போச்சல்லே.. இனிமே இவங்க கிட்ட இருக்கிற வரையிலே ஜாக்கிரதையா இருந்துக்க. பார்வதம்மா நான் போயிட்டு வரேன்.''

அவளும் வெளியேறிவிட்டாள்.

நான்கு நாட்களாக வீட்டில் மௌனம் நிலவியது. யாரும் யாருடனும் பேசவில்லை. பேசாத பொம்மைகள் போல் அவரவர் தங்கள் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். நான்காவது நாள் காலை உள் கூடத்தில் வந்து உட்கார்ந்தான் பரமேசுவரன். அவனும் ஒன்றும் பேசவில்லை.

சற்று நேர யோசனைக்குப் பிறகு ''அடுத்த வாரம் ரிஜிஸ்டர் ஆபீசிலே பதிவுத் திருமணம் வெச்சுக்கலாம். அதற்குண்டான ஏற்பாடுகளை யெல்லாம் செய்து விட்டேன். இதை அவகிட்டே நீயே சொல்லிடு பார்வதம். இதைச் சொல்லிவிட்டுப் போகத்தான் வந்

தேன். வீணு விவகாரங்களை வளர்க்க எனக்கு நேரமில்லே... இஷ்டமில்லே....

''கொம்பிலே பழுத்த பழத்துக்கும், தடியால் அடிச்சுப் பழுக்க வைத்த பழத்துக்கும் உள்ள வித்தியாசத்தைப் பத்தி அவனுக்கு ஒண்ணும் தெரியாது. இனிமே புரிஞ்சுக்கப்பா. மற்ற விரிசல்களை அதே உலோகத்தை உருக்கி வைத்து ஒட்ட வைத்து விடலாம். பொன்னை ஒட்டலாம்; மண்ணை ஒட்டலாம். வெங்கலத்தை ஒட்டலாம். அது திடமா நிக்கும். ஆனு மனங்களைப் பலவந்தப்படுத்தி ஒண்ணு சேர்க்க மனசு ஒரு உலோகமில்லே, பல வந்தத்திலேயும் மிரட்டலிலேயும் உருக வைத்து ஒட்ட வைக்க....''

அவன் எழுந்து நின்ருன்.

சுமங்களா கண்ணுடி முன் நின்றுகொண்டு நெற்றிக்குத் திலகமிட்டபடியே பரமேஸ்வரனின் பேச்சைக் கேட்டாள்.

''சட்டத்தோட உதவியை நாடுவதும், சட்டத்தை வைத்துக் கொண்டு மிரட்டிப் பணிய வைக்க நினைக்கறதும் ஒரு தற்காலிக வெற்றியைத் தேடித் தரும். ஆனல் நிரந்தர வெற்றி என்பதும், நிரந்தரமான பிணைப்பு என்பதும் கண்ணுக்கே தெரியாமப் போனலும் போயிடும்.''

அவன் தனக்குள் சிரித்துக் கொண்டே உதட்டைப் பிரித்து ஈரமாக்கிக் கொண்டான். திலகக் குப்பியில் குச்சியைப் போட்டுக் கவனமாக மூடிவிட்டு, காதில் தொங்கின வளையத்தைச் சரியாகப் பொருத்திக்கொண்டான்.

''நிரந்தரமான நேயம் என்பதும் நிரந்தரமான அன்பு என்பதும் மிரட்டிப் பெறுவதல்ல. அது தானுக வரவேண்டும்'' என்ருன், அவன் தன்னை உதாசீனம் செய்கிருன் என்பதைப் புரிந்து கொண்டு.

''அது தானுகக் கிடைக்காத சூழ்நிலை உண்டாகும்போது அதை எப்படி மிஸ்டர் பெற வேண்டும்? கொஞ்சம் விவரிக்கிறீர்களா?''

அவன் சிரித்துக் கொண்டே இதைக் கேட்டான்.

அவன் வாயடைத்துப் போனுன்.

''தட்டிப் பறிப்பது திருட்டு; இடறி விடுவது குறும்பு; முதுகில் குத்துவது கோழைத்தனம்; அன்பைப் பழிப்பது முட்டாள்தனம்; பெண்மையைப் பறிப்பது பேடித்தனம்!'' என்ருள், கண்ணுடி முன்னுல்நின்று கொண்டு மற்ருெரு காதின் வளையத்தைச் சரிசெய்து கொண்டே.

''நியாயங்கள் தோற்கும்போது சட்டம் உதவவில்லை என்ருல் அது சட்டமே இல்லை. வெறும் குப்பைத் தொட்டி போலத்தான்— இதைப் பற்றி யெல்லாம் இப்போது என்ன விவாதம்? என்ன சொன்னீர்கள்? அடுத்த வாரம் கல்யாணமா? ரொம்ப நன்றி. இவ்வளவுக்குப் பின்பாவது உங்கள் மனம் பெருந்தன்மை காட்டியதற்கு நானும் என் தோழி கோமதியும் நன்றி சொல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டுச் சுமங்களா வெளியே போய்விட்டாள்.

(தொடரும்)

ஒரு கொள்ளைக் கூட்டம், பாஸ் (அதில் ஒருத்தி பெண் பாஸ்), ஜீப்-பைக், ஜீப்-ஜீப் துரத்தல், பிரம்மாண்ட செட்டிங்ஸில் பாட்டுக்கள், டப்பாக்கள் உருள சண்டைகள். இவைகளைத் தோழர்களாகக் கொண்டு வழக்கம்போலக் கதை பண்ணியிருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ்காரர்களுக்குத் துணிவே துணை!

ஒரு கிராமமாம். கிராமத்தில் ஒரு ஸ்டார் ஹோட்டலாம். கிராம மக்கள் எப்போதும் 'குடி'மக்களாகவே இருக்கிருர்களாம். குத்தகையாய் ஜெய்சங்கர் செய்யும் வேலைகளை இங்கு சிவகுமார் செய்கிருர்.

இன்ஸ்பெக்டர் சிவகுமார் கயவர்களுடன் சண்டை போட்டு, கடத்தலை நிறுத்தி, அப்பாவைக் கொன்றவனைப் பழிவாங்கி நீதியை நிலைநாட்டுகிருர். துணிவே தோழன்.

இன்ஸ்பெக்டர் தங்கை சமூக சேவகியாம். குடிமக்களைத் திருத்தி நல்வழிப்படுத்துகிருர். ஊருக்குத்தான் உபதேசம். தான் மட்டும் 'கிக்' தரும் ஸ்பெஷல் ரோஸ் மில்க் அருந்தி விசந்திரனின் உபயத்தால் வாந்தி எடுக்கிருர். கடைசியில் உயிரையும் விடுகிருர். துணிவே தோழன்.

சத்யகலா, தங்கவேலு, கண்ணன், ஒரு விரல் எல்லோரும் துணிவுடன் நடிக்கிருர்கள். பொழுது மட்டும் போனுல் போதும் என்ருல் துணிவுடன் போகலாம்.

- நளினி சாஸ்திரி

துணிவே தோழன்



இலக்கியங்களிலே துகில் படைப்புகள்—14



சிங்கியின் சல்லாச் சேலை!



குறவன் சிங்கனும், குறத்தி சிங்கியும் காதலர்கள். குற்றால மலைச் சாரலில் அவர்கள் காதல் மலர்ந்து வளர்ந்தது. வசந்தவல்லியின் காதலைப் போல.

குறி சொல்லிப் பிழைப்பதற்காக குறத்தி சிங்கி நாடு பல சென்றிருந்ததால், சிங்கியைத் தேடித்தேடி அலைந்த சிங்கன் கடைசியில் குற்றால மலைச்சாரலுக்கு வருகிறான். அங்கு எதிர்பாராதவிதமாகச் சிங்கியைச் சந்திக்கிறான். சந்தோஷ மிகுதியால் அவன், "இத்தனை நாட்களாக என்னிடம் சொல்லாமல் எங்கே போயிருந்தாய்?"—எனத்தொடங்கி, சரமாரியாகக் கேள்விகளைத் தொடுக்கிறான். அவளது ஆடைகளிலும், அணிகளிலும் ஏற்பட்டிருந்த புதிய மாற்றங்கள், புதுப்புது வினாக்களை எழுப்புகின்றன அவனுக்கு.

சிங்கனின் அத்தனை கேள்விகளுக்கும் ஈடு கொடுக்கிறாள் சிங்கி. கொத்து மலர்க் குழல் மாதர்க்கு வித்தாரமாகக் குறி சொல்லப் போனதாகவும், அங்கங்கே அவ்வப்போது கிடைத்த பரிசுகளால் தனது ஆடை அணிகளில் மாற்றம் உண்டானதையும் அவள் முத்து முத்தாக எடுத்துச் சொல்கிறாள்.

அவளது மெல்லிய உடலிலே, வாழைக் குருத்தை விரித்துப் பின் மடித்து அணிந்தது போன்று படிந்திருந்த புதிய மேலாடை பற்றிச் சிங்கன் விவரம் கேட்க, திருநெல்வேலியிலே கிடைத்த மெல்லிய சல்லாச் சேலையை, தான் முறையாக உடுத்திய விதத்தைப் பெருமையுடன் சொல்கிறாள் சிங்கி:

"மெல்லிய பூந்தொடை வாழைக் குருத்தை
விரித்து மடித்தவர் ஆர், சிங்கி?"
"நெல்வேலியார் தந்த சல்லாச் சேலை
நெறிபிடித்து உடுத்தினேன், சிங்கா!"

—திரிகூட ராசப்ப கவிராயரின்
குற்றாலக் குறவஞ்சி.



● சென்னை பாரி முனையில் ராஜாஜி நினைவாக அவருடைய உருவச் சிலையை எந்த வேளையில் வைத்தார்களோ. இரண்டாண்டுகளாக மாற்றி மாற்றி ஏதோ ரிப்பேர் வேலை நடந்து கொண்டே இருக்கிறது.... போதாக் குறைக்குத் திடீரென்று சிலையின் அருகில் ஒரு கழிவிடம் கட்டப்பட்டது. அவ்வளவுதான். சில நாட்களிலேயே அக்கழிவிடத்தை அப்பக்கம் யாருமே போக முடியாத நிலைக்குக் கொண்டு வந்துவிட்டனர். உடனே கழிவிடத்தை இடித்து விட்டனர். அதனால் என்ன? கட்டிடம் இல்லாத கழிவிடமாக அவ்விடம் ஆகிவிட்டது. ராஜாஜி பக்தர், சுகாதார அமைச்சர் ஹாண்டே கவனத்துக்கு: ஒன்று அங்கு சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்யுங்கள். இல்லையேல் ராஜாஜி சிலையையாவது அகற்றி விட வழிகாணுங்கள். மூதறிஞருக்கு இழைக்கப்படும் அவமதிப்பைத் தாங்க முடியவில்லை.

சென்னை எல். வி. பார்த்தசாரதி

● ''லடாய்'' உப தலையங்கத்தில் முதல்வர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதை இயக்குனரால் புரிந்து கொள்ள முடியவில்லை, அல்லது புரிந்துகொள்ள முயலக்கூட இல்லை என்று புகார் கூறியிருக்கிறீர். ரொம்ப சரி! எம். ஜி. ஆர். என்ன கூறுகிறார் என்பது உமக்காவது தெரிந்திருந்தால் விளக்கம் கொடுத்து இயக்குனருக்குப் புரிய வைப்பது தானே?

குடவாசல் சுமாலி

● நியாயமான தலையங்கங்கள் இட்டும் பத்திரிகைகளில் கல்கியும் ஒன்று. 'லடாய்' தலையங்கம் இந்த உண்மையை உறுதிப்படுத்தியிருக்கிறது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் டி. வி. வாங்கினேன். சில நாட்களிலேயே அவர்கள் எம். ஜி. ஆர். விஷயத்தில் (அரசியல், திரைப்பட உலகுகள் இரண்டிலும்) காட்டிய அலட்சியப் போக்கும், வெறுப்புணர்ச்சியும் உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெரிந்தது. அவை இன்றளவும் தொடர்வதும் புரிகிறது. நான் நீண்ட காலமாகத் தனிப்பட்ட முறையில் டி. வி. நிலையத்தாருடன் கடிதம் மூலமும் நேரிலும், பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவதன் மூலமும் இது பற்றி வாதாடி, போராடி வருகிறேன்.

பிரதமர், பிரதமர் மகன்கள், மத்திய அரசு இவற்றுக்கு விளம்பரத் துறையாக இயங்கும் டி. வி. முதல்வர், மாநில சம்பந்தமான நிகழ்ச்சிகள் என்றால் ஏதோ, தர்மத்திற்கு பிரோகிராம் நடப்பதாக சால்ஜாப்புக் கூறுவது விநோதமாக இருக்கிறது.

சென்னை-33 எம். ஆர். சத்யநாராயணன்



● ''கடந்த ஒரு வருடத்துக்குள்ளாக 36 வாசகர் கடிதங்கள் எழுதியும் அதில் ஒன்றைக்கூடப் பிரசுரிக்காமல், நாங்கள் ஏமாற்றியது இவரைத்தான்'' என்ற குறிப்புடன் என் படத்தை வெளியிட உங்களுக்குத் தைரியம் இருக்கிறதா சார்?

நெய்வேலி கே. ஸ்டாலின்

● கலாசாகரம் சார்பில் செகந்திராபாத்தில் சாமியாரின் மாமியார் பொன் விழா நாடகம் நடை பெற்றது. இடைவேளையில் மெரினா மேடைக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது கலாசாகரம் காரியதரிசி ராஜகோபால் கல்கியில் குட்டி கிருஷ்ணன் எழுதிய விமரிசனத்தைக் குறிப்பிட்டு, அதில் கூறியுள்ளபடி,—விமலாவின் ஆவிக்கு மாலை போட விரும்புவதாகக் கூறினர்.

மெரினா, ''ராஜகோபால் ஒரு சிக்கலான பிரச்னையை எழுப்பி விட்டார். ஆவியைத் தேடும் பொறுப்பு என்னிடம் உள்ளது. தற்போது விமலாவின் ஆவி தங்கை ஜெயந்தியை ஆக்கிரமித்துள்ளதால் ஜெயந்தி உருவத்தில் வந்து மாலை போட்டுக் கொள்ளும்'' என்றார். ஜெயந்தியாக நடித்த விஜயப் பிரியாவுக்கு ஒரு சிறுமி மாலை அணிவிக்க ரசிகர்கள் கரகோஷம் செய்து மகிழ்ந்தனர்.

போலக்பூர் என். வெங்கடேசுவரன்

● 'இராக்கி'யின் 'மீசையோ மீசை'யில் பாட்டுக்கொரு புலவனின் பாங்கான மீசை பற்றியும் ஒரு குறிப்புப் போட்டிருந்தால் இன்னும் கம்பீரமாக இருந்திருக்கும்! போகட்டும் போங்கள்! எனக்கு மீசை (இல்லாமல் இருப்பதால்) துடிக்கவில்லை!

சென்னை பாரதிப் பித்தன் வி. ச. வாசுதேவன்

● ராஜேஷ் குமார் எழுதிய ''அலைகள் கரை மீறுவதில்லை'' என்ற கதையில் கதாநாயகன் ஜயந்தி ஜனதாவில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்கிறார். எந்த ஜெயந்தி ஜனதாவில் முதல் வகுப்பு இருக்கிறது?

ஜபல்பூர் கலாமுத்து

● ''மதிப்பெண் போடுங்கள்'' தலையங்கத்தின் மூலம் எங்கள் மதிப்பீட்டில் உயர்ந்து விட்டீர்கள். பல விஷயங்களை இணைத்து லடாயர் உணர்வுடன் எழுதும் தலையங்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

கோபிச்செட்டிபாளையம் ஆர். குழந்தைவேல்



இலங்கையில் ஓர் இனிய அனுபவம்!

'வசந்தத்தில் ஒரு வானவில்' படத்துக்காக இலங்கை போகிறோம். நீங்களும் வர வேண்டும்'' என்று அந்தப் படத்தின் இயக்குனர் அர்ஜுனு அழைத்தார்.

''எனக்கு ஏகப்பட்ட வேலை; நான் ஈழம் சென்றுவிட்டால் இங்கே தமிழ்ப் பத்திரிகை உலகம் மட்டுமின்றித் திரை உலகும் தடுமாறிப் போகும்; இருந்தாலும் உங்கள் அன்பான வற்புறுத்தலைத் தட்ட முடியாததால் வருகிறேன்'' என்றேன்!

சிலோன் விமான நிலையம். காமிராக்கள் கண் சிமிட்டின. எங்களில் நான்கு பேரைத் தவிர மற்றவர்கள் இப்பொழுதுதான், ஸ்ரீலங்கா மண்ணை முதன்முறையாக மிதிக்கிறோம். திரைப் படக் குழுவினர் மொத்தம் பன்னிரண்டு பேர். நடிப்பவர்கள்: பிரதாப், ராதிகா, ஸ்ரீகீதா, சுமதி தேவி, டெல்லி கணேஷ், ராஜாமணி. தொழில் நுட்பக் கலைஞர்கள்: தமிழன்பன், கல்பனுதாசன், கோதண்டம், சக்கரபாணி, ஜானகி, கோமஸ் இவர்களுடன் சென்ற ஒரே பத்திரிகையாளன் நான்.

சென்னை விமான நிலையத்தில் எங்களுடன் பேசிக் கொண்டிருந்த ராதிகாவின் தாயார் நாங்கள் ஸ்ரீலங்கா விமான நிலையத்தில் இறங்கியபோது எங்களை வரவேற்றார். எப்படி என்பது பின்புதான் தெரிந்தது. எங்களுக்கு முன்பு புறப்படும் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் பறந்து வந்து விட்டார்! விமான நிலையத்தில் எங்களை வரவேற்றது இயக்குனர் அர்ஜுனுவும் அந்த ஊரில் செல்வாக்கு மிகுந்த மனிதரான பாண்டியனும்.





- ''வசந்தத்தில் ஒரு வானவில்'' பிரதாப், ஸ்ரீகீதா
- கொழும்பு கட்டநாயகா விமான நிலையத்தில் ராதிகா, பிரதாப், ஸ்ரீ கீதா.
- இந்திய ஹைகமிஷனர் திரு. தாமஸ் ஆப்ரகாம் அவர்களுக்கு திரு. சுபாஷ் மாலை அணிவிக்கிறார். ஸ்ரீலங்காவின் துணை ஹைகமிஷனராக சென்னையில் பதவி ஏற்க இருக்கும் திரு. நியூட்டன் சமரசிங்க இடமிருந்து மூன்றாவதாக இருக்கிறார். இடமிருந்து இரண்டாவதாக திரு பாண்டியன்.

நேராக நாங்கள் சென்றது ஐந்து நட்சத்திர ஓட்டலான Holiday Inn.

அங்கு குழுவினருடன் அளவளாவ வந்திருந்தவர்கள் இலங்கையில் உள்ள இந்திய ஹைகமிஷனர் திரு தாமஸ் அப்ரகாம்: இலங்கையின் சார்பாகச் சென்னையில் துணை-ஹை கமிஷனராகப் பதவி ஏற்கப் போகும் திரு நியூட்டன் சமரசிங்க.

சிறப்புச் சொற்பொழிவாற்றினர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் எம். எஸ். செல்லசாமி. அவர் பேசிய தமிழ் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. மதிய உணவை முடித்துக் கொண்டு நாங்கள் சின்ன இங்கிலாந்தைப் பார்க்கக் காரில் கிளம்பினோம்.

சிலோனில் இங்கிலாந்தா? என்று ஆச்சரியப்படாதீர்கள். ஸ்ரீலங்காவிலிருந்து நூறு மைல்களுக்கு அப்பால் உள்ள நுவாரா எலியா என்ற மலைப் பிரதேசம்தான் அப்படி அழைக்கப்படுகிறது. அதன் சீதோஷ்ண நிலையும் அழகும் இங்கிலாந்தின் கிராமப் புறங்களை நினைவூட்டுவதாய் இருக்கிறதாம். காரில் ஸ்ரீகீதா, சுமதி தேவி, டெல்லி கணேஷ் ஆகியோர் பின் சீட்டில் உட்கார்ந்திருக்க, நான் முன்னால் டிரைவர் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன். பட்டணப் பிரவேசம், பசி, ஒரு வீடு ஒரு உலகம் போன்ற படங்களில் பலர் டெல்லி கணேஷின் உருக்கமான குணசித்திர நடிப்பைப் பார்த்திருக்கலாம். ஆனால் அவர் ஒரு சிறந்த நகைச்சுவை மன்னர் என்பது காரில் வரும்போதுதான் தெரிந்தது. சொல்லக் கூடாத ஜோக்ஸ் என்று ஆரம்பித்து, 'சராங்கனி' பாடலை கர்நாடக இசையில் பாடினால் எப்படி இருக்கும் என்று பாடிக் காட்டுவதில் முடித்தார். நுவாரா எலியாவை அடைந்தபோது இரவு பதினோரு மணி ஆகிவிட்டது.

''கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டால்'' என்று சொல்வார்களே அதை விட மோசம் காரில் ஏறிக்கொண்டு தங்குமிடத்தைத் தேடுவதுதான் என்று புரிந்தது. டிரைவர் இலங்கைக்குப் புதியவர் அல்ல என்றாலும் நுவாரா எலியாவுக்குப் புதியவர். தேடினோம், தேடினோம், ஒரு வழியாகக் கண்டு பிடித்தோம். Oakley Inn என்ற பெயர் கொண்ட அந்த விடுதி ஒரு சிறு பங்களா. ஒவ்வொரு அறையிலும் பல மெத்தைகள். யாருக்குமே தனி அறை கிடையாது.

நுவாரா எலியாவில் குளிரும் அதிகம், பசியும் அதிகமாக இருந்தது. ஆங்கிலப் படங்களில் பார்ப்பது போல் ஒவ்வொரு அறையிலும் ஒரு எரியடுப்பு இருந்தது. விறகு அடுக்கி எரிய வைத்துவிட்டு அதன் அருகில் நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தால் கிடைக்கும் சுகமே தனிதான். குளிருக்கு எரியடுப்பு, வயிற்றுக்கு பன் ஜாம், பிஸ்கட்ஸ்தான். காரணம் காலிஃப்ளவரையே நான் சைவ உணவாகக் கருதாதவன். இலங்கைக்கு நான் கிளம்பும்போதே ஒரு நண்பர் ''நீங்கள் சலனாகச் செல்கிறீர்கள். திரும்பி வரும்போது சாலமனாக அசைவ உணவு சாப்பிட்டுவிட்டுத் திரும்புவீர்கள்'' என்று கூறியதைப் பொய்யாக்கி விடுவதில் தீவிரமாய் இருந்தேன்.

வந்து சேர்ந்த அடுத்த நாள் 'ரெஸ்ட்' என்றார் டைரக்டர் அர்ஜுனா. 'இது தெரிந்திருந்தால் ஒரு நாள் தலைநகர் கொழும்புவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்திருக்கலாமே' என்றார் ஸ்ரீகீதா. ''அப்படிச் செய்வீர்கள் என்று தெரிந்துதான் சொல்லவில்லை'' என்றார் இயக்குனர். ''படப்பிடிப்பின்போது நீங்கள் களைத்துக் காணப்படுவதை நான் விரும்பவில்லை.''

சில சமயம் ராதிகாவும் அவரது அம்மாவும் பேசுவது அவர்களைத் தவிர எங்களில் வேறு யாருக்கும் புரியாது. காரணம் சிங்கள மொழியில் அவர்கள் பேசுவதுதான். டைரக்டர் அர்ஜுனா, மற்றும் அவரது குழுவினருடனும் அவர் சரளமாக அதே சிங்கள மொழியில் பேசும்போது ராதிகா நாம் முன் பின் அறியாத வேறு ஒரு ராதிகாவாகத் தோன்றுகிறார்.

முதல் நாள் படப்பிடிப்பு. நடிப்பவர்கள்: பிரதாப், ஸ்ரீகீதா, ராஜாமணி. ராஜாமணி நடந்து வர ஸ்ரீகீதா உட்கார்ந்து கொண்டு துணியில் பூ வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார். ''எனக்கு எம்ப்ராய்டரி போடத் தெரியாதே சார்'' என்று ஸ்ரீகீதா கெஞ்ச, ''நான் போட்டுத் தரேன்'' என்று பிரதாப் அதை வாங்க இதற்குள் ஆர்ட் டைரக்டராகவும், உதவி இயக்குனராகவும் பணியாற்றி வரும் 'ஹேமா' (இவர் ஆண்தான்). அவர் கையிலிருந்து நூலையும் துணியையும் பறித்துக் கொண்டார். எம்ராய்டரி தப்பிப் பிழைத்தது!

எங்கு நோக்கினாலும் பச்சைப் பசேல் என்ற புல்வெளி. ஆங்காங்கே சில கட்டிடங்கள். ஒரு பக்கத்தில் ஒரு பெரிய குளம். மறு பக்கம் திரும்பினால் அழகான அருவி. அதற்குப் பெயர் காதலர்கள் அருவி! இந்தச் சூழ்நிலையில் நடந்தது படப் பிடிப்பு. கலைஞர்களின் உற்சாகத்துக்குக் கேட்பானேன்!

— சலன்

படங்கள்: கின்ஸ்லி செல்லையா

அவன்: ''நேத்து என் மனைவிக்குக் குறைப் பிரசவம் ஆயிடுச்சு...''

இவன்: ''அடடா... ஆபத்து ஒண்ணு மில்லியே...?''



அவன்: ''எப்பவும் ஒரு பிரசவத்தில் ரெண்டு குழந்தை பெறுவாள். இந்தத் தடவை ஒண்ணு தான் பெத்தாள்...!'' -கொத்துக்கடவுரான்

கருகு பதில்கள்!





⌘ ப. மூர்த்தி, பெங்களூர்-21

கே. தற்போதைய திரையுலக நகைச் சுவையைப்பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

ப: கலைவாணரும் தங்கவேலு வும்தான் நினைவுக்கு வரு கிறார்கள் திரை உலக நகைச் சுவை என்றவுடன். அவர் களுடையது சுத்தமான ஹாஸ்யம். இப்போது தமிழ் சினிமாவில் சிரிப்புக் காட்சி களில் வரும் வசனங்கள் ஆபாசமாக உள்ளன. கொச்சையாகவும் பச்சை யாகவும் இருக்கின்றன.

⌘ திருமதி விமலா மார்க்கண்டே, ஹைதராபாத்-29

கே. 'முதல்வருடன் சில மணி நேரங்கள்' படித்ததும் வந்த ஐடியா இது. '''கருகு'டன் சில மணி நேரங்கள்'' முடியுமா?

ப: முடியுமா என்பது உங்கள் பொறுமையின் அளவைப் பொறுத்திருக்கிறது சிஸ்டர். நீங்கள் 'அறுவை-புரூஃப்'பாக இருந்தால் கூடச் சில நிமிடங்கள் தாக்குப்பிடிக்க முடியாது.

⌘ என். ராமகிருஷ்ணன், திம்ம ராஜபுரம்

கே. கஞ்சனாக இருக்க ஆசைப்பட்டது உண்டா?

ப: அந்த மாதிரி யெல்லாம் ஆசைப்படஎனக்கு சான்ஸே கிடையாது. நான்தான் பிறவியிலேயே கஞ்சனாயிற்றே!

⌘ ரேணுகா நாராயணன், அம்பாசமுத்திரம்

கே. கணவன் செவிடாக இருப்பது நல்லதா? ஊமை யாக இருப்பது நல்லதா?

ப: செவிடாகவும் ஊமையாகவும் இருப்பது மட்டுமல்ல; குருடாகவும் இருப்பது நல் லது. அதாவது அவள் திட்டும்போது செவி டாகவும், அவளைத் திட்டுவதற்கு ஆத் திரம் ஏற்படும்போது ஊமையாகவும், அவள் செய்யும் தவறுகள் கண்ணில் படும்போது குருடாகவும் இருந்தால்— இதே மாதிரி மனைவியும் சமயத்துக்கு ஏற்ற படி செவிடு, ஊமை, குருடு என்று இருந் தால் — தாம்பத்திய வாழ்க்கையில் தக ராறு வராது; சாந்தியும் மகிழ்ச்சியும் இருக்கும். (ஆமாம், உங்கள் முழு விலா சம் என்ன? பரிசு கிடைக்க வேண்டாமா?)

⌘ சரஸ், தண்டிக்குடி

கே. ஆவி உலகதொடர்பு (ஈ.எஸ்.பி) பற்றிய விவரங் களைக் கூறமுடியுமா?

ப: கடந்த ஒரு வருஷமாகப் பலர் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஏதோ ஈ. எஸ். பி.க்கு நான் ஒரு அதாரிட்டி என்று நினைத்துக் கொண்டு. இது மிகப்பெரிய, பல புரியாத விஷயங்கள் நிறைந்த சமாசாரம். இது பற்றி நிறைய புஸ்தகங்கள் வெளிவந் துள்ளன. நீங்கள் வாங்கிப் படித்துப் புரிந்து (அல்லது குழம்பிக்) கொள் ளுங்கள். என் ''உயிரை'' வாங்காதீர்கள்!

⌘ மதுரைக் கண்ணன், அம்பாலா

கே. ஒரு சில பெண்கள் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள ஆர்வம் காட்டுவதில்லையே?

ப: தங்கள் கணவரின் மணி பர்ஸைச் சுத்தம் செய் வதற்கே அவர்களுக்கு நேரம் போதவில்லையோ என்னவோ!

⌘ ரெ. செழியன், டோம்பிவிலி மேற்கு (பம்பாய்)

கே. உம்மால் மறக்க முடியாத பத் திரிகை செய்தி...?

ப: சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு நியூயார்க் ஹெரால்ட் ட்ரிப்யூன் இதழில் வந்த சுவையான செய்திதான். விவரம் இதோ: அமெரிக்க பிங்பாங் குழு, சைனாவுக்குப் போய்விட்டுவிளையாடிவிட்டு வந்தது. அவர்கள் சைனாவி லிருந்து ஹாங்காங்வருகை யில் அங்குள்ள மாதா கோவி லில் மணியடித்து அவர்களை வரவேற்கச் செய்ய வேண் டும் என்பதற்காக அமெரிக்க செனட்டில் ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டது. முன்மொழிந்தவர்கள் வில்லி யம் ஸ்பாங், ஹிரம் ஃபாங். தீர்மானம் தோல்வியுற்றது. இந்தத் தீர்மானத்துக்கு அவர்கள் என்ன பெயர் கொடுத்திருந்தார்கள் தெரியுமா? தி ஸ்பாங் ஃபாங் பிங் பாங் ஹாங்காங் டிங் டாங் பெல் பில் (The Spong-Fong Ping Pong Hongkong Ding-Dong Bell Bill!)

⌘ டி. எல். ரெட்டி, வேலிடிப்பட்டி

கே. தங்கள் வெற்றியின் பின்னணி என்ன?

ப: நான்மட்டும் ஒரு சினிமா நடிகனாகவோ ஒரு நடிகையாகவோ இருந்திருந்தால், கீழ்க்கண்ட பதிலைத்தான் கூறியிருப்பேன்: ''எனக்குக் குழந்தைப் பருவம் முதலே பதில்கள் சொல்வதில் ஓர் அடங்காத ஆசை. எனக்குப் பேச வருவதற்கு முன்பே நான் கேள்விகளுக்குப் பதில் சொல்லி விடுவேனாம். (என்னைவிட பத்து வயது குறைந்த தம்பி கூறியிருக்கிறான்.) வினாடி வினா நிகழ்ச்சிகளில் வரும் பதில்களை யெல்லாம் வீட்டில் எல்லார் முன்னிலை யிலும் அப்படியே சொல்லிக் காட்டுவே னாம். (காது கேட்கா என் பாட்டி சொல்லி யிருக்கிறாள்) பாபுராவ் பட்டேல், தமிழ் வாணன், படங்களை ஆல்பத்தில் ஒட்டி வைத்துக் கொள்வேன். அதனால்தான் இன்று பதில்கள் கூறுவதில் இவ்வளவு வெற்றி பெற்றுள்ளேன்!

பரிசு பெறுபவர் :

திருமதி ரேணுகா நாராயணன்
அம்பா சமுத்திரம் - 627 401

கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்

கல்கி, சென்னை - 600 032

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 46	ரூ. 23
இலங்கை (இந்திய நாணயப்படி)	ரூ. 64	ரூ. 32
இதர வெளிநாடுகள்	ரூ. 100	ரூ. 50

முன் குறிப்பு: பிராமண முன்னேற்ற சங்கம் தங்கள் இனத்தைக் களங்கப்படுத்துவதால் இப்படத்தைத் தடை செய்ய வேண்டுமென்று மாநில,மத்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளது.

சாவித்திரியோட கதையைக் கவிதையாட்டமாச் சொல்லியிருக்கா. ஏழை சங்கர சாஸ்திரியோட மூத்த பொண்ணு சாவித்திரி. ஒரு தத்துப் பித்து அண்ணன், வஞ்சனையத்த உடம்போட ரெண்டு தங்கைகள் வேற. சங்கர சாஸ்திரியோட சிஷ்யர், கோவில் குருக்கள், சாவித்திரிய ரெண்டாந்தாரமாப் பண்ணிண்டு தன் கிராமத்துக்கு வண்டில அழைச்சிண்டு போறச்சேயே கவிதை ஆரம்பம்.

தங்கை இட்ட செயினைக் கொடுத்தனுப்பும் போதும் சரி, மூத்தா பையன் அப்புவோட பாண்டி ஆடும்போதும் சரி, கொட்டும் மழைல நனையறப்பவும் சரி, வினோத மனம் கொண்ட வினோத்தை பார்க்கும்போதும் சரி, சாவித்தியாவே வாழுறு மேனகா. மேனகா நடிப்பு வயசுக்கு வந்துடுத்து.

அம்மா, அப்பா, காதலி எல்லோரும் தனியா உட்டுட்டு ஓடிப்போனதாலே அன்பைத் தேடிக் கிராமத்துக்கு வந்த வித்தியாசமான, பரிதாபத்துக்குறிய வினோத்துக்கு சாவித்திரியின் அன்பு கெடைக்கிறது. குருக்களோ சாவித்திரியைத் தொடறப்போ அவளைக் குழந்தையாகவும் சாமி நினைப்பும் வந்து அவளைக் கண்டுக்காம விட்டுடறார்.

குருக்கள் நல்ல கம்பீரம். சோமயாஜுலு பாணி. உருவத்திலேயே கண்டிப்பு இழையறது. விஷயம் தெரிஞ்ச குருக்கள் சாவித்திரியப் பிறந்தகத்தில்விட்டு, பிறகு அவ திரும்பி வந்து ஆம்படையானுக்கு உண்மையா இருக்கறதாச்சொன்னதும் ஏத்துக்கறார். ஆனா திரும்பவும் வினோத்தைப் பார்த்ததும் சாவித்திரி உருகி அவனோட ஒன்னாயிடறா.


ஒரு பக்கம் 'காத்தால வா ஊரை விட்டே ஓடிடலாம்' கறான் வினோத். ஆத்துக்காரரும் அப்புவும் மறு பக்கம். சாவித்திரி ஓடிப் போவாளா, கிராமத்திலேயே வாழ்வாளான்னுநாம குழம்பறச்சே அவா குளத்தில விழுந்து தற்கொலை பண்ணிக்கிறா. துணிச்சலில்லாத முடிவு.

அப்புவா வர சுரேஷ் தூள் கிளிக்கறான். மிக ரம்மியமான பச்சைக் கிராமம். எம். எஸ். விசுவநாதனின் இனிமையான இசையும் அழகான ஒளிப் பதிவும், குறைவான தீர்க்கமான வசனங்களும் சுகமான சூழ்நிலையை உண்டாக்கறது.

சிக்கலில்லாம கொண்டு போற டைரக்டர் பரதன் முடிக்க மட்டும் பயந்து தப்பிச்சிண்டார்.

— நளினி சாஸ்திரி

சாவித்திரி





உறவுக்குத் துணை

லட்சுமிராஜரத்னம்

சைகையைப் பிரித்ததும் பொருள் தெரிவது போல இளங் காலைப் பொழுது இருளிலிருந்து பிரிந்து வந்து கொண்டிருந்தது. கண்கள் உறக்கத்தில் தவித்தாலும் கண்டிப்பாக எழ வேண்டிய நிர்ப்பந்தம் சாந்தாவுக்கு. இப்பொழுது எழுந்தால்தான் சரியாக இருக்கும் என்ற தவிப்புடன் எழுந்து கொண்டாள். எழுந்த பிறகு எவ்வளவு வேலைகள்!

தலைக்குக் குளித்து மொர மொரவென்று தலையைத் துவட்டிக் கொண்டு நின்றபோது கூட ராம் எழுந்திருக்கவில்லை. குக்கர் இசை பாடியது. ராம் எழுந்துவிட்டால் ஒரே அமர்க்களம்தான். டென்ஷன்தான்! மனைவியின் மலர்ந்த முகத்தைப் பார்த்துக் களிக்கவோ, கொஞ்சிப் பேசவோ, பின்னால் வந்து நின்று குறும்புத்தனம் செய்து இடுக்கிட வைக்கவோ, வாசல்வரை வந்து வழியனுப்பும் அவளுக்கு டாட்டா காண்பிக்கவோ அவன் துடித்ததே இல்லை.

இருவருமே மாறுபட்ட ருசியை உடையவர்கள். அவளுக்குப் பிடித்தது அவனுக்குப் பிடிக்காது. அவளுக்கு எதை எடுத்தாலும் சிரிப்புத்தான் கேலிதான்.

அவன் எழுந்துவிட்டால் காற்றில் படபடக்கும் பேப்பரைப் போல மனம் அடித்துக் கொள்ளும். சாப்பிடும் நேரம் கூட புத்தகம் கையில்! அந்த மௌனம் சகிக்க முடியாததாக இருக்கும்.

'ராம், எல்லோரையும் போல கலகலவென்று நீங்களும் பேசக் கூடாதா?'

—இந்த பாஸிடிவ் — நெகடிவ் சிஸ்டத்தில்தான் ஜலா பிறந்தாள். அவனுடைய நிறைவான மனத்தை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. உறக்கத்தின் நடுவே உள்ளப் பெட்டகம் விழிப்புற்றுக் கனவாகத் தோற்றம் கொடுப்பது போலத்தான் இருந்தது அவனது உறவும். அந்த உறவுக்குத் துணையாக நிற்பது அவளுடைய கடமை!

'இது எப்படி இருக்கிறது?'

இழை இழையாகப் பிரித்த கூந்தலைப் பல பகுதிகளாக்கிப் போட்ட கொண்டை அதன் மீது வரி வரியான பூச்சரங்கள்... ஓர் அஜந்தா ஓவியமாக, எல்லோராவின் எழிற் களஞ்சியமாகத் தன்னை வர்ணிக்க மாட்டானா?

''நன்றாக இருக்கிறது'' — ஒற்றை வரிப் பதில்! இதற்காகவா அவள் காத்துக்கொண்டிருந்தாள்?

ஜலாவின் மழலை மட்டும் இல்லாவிட்டால் அவள் பைத்தியம் பிடித்துத்தான் அலைவாள்.

அவன் ஒரு கல்லூரியின் ஆங்கிலப் பேராசிரியர். ஒன்று விட்டு ஒரு நாள் என்று மாணவ — மாணவிகள் காலை நேரத்தில் டியூஷன் சொல்லிக் கொள்ள வருவார்கள். குரல் ஒரே சீராக — தாலாட்டு பாடுவது போல ஒலிக்கும். அவள் மனத்துக்குள் ஒரு இரக்கம். கை வேலைகள் அப்படியே நின்று விடும். மறைந்து நின்று கேட்பாள்.

'இந்தக் கவிதைகளின் நயத்தின் பொருளாக நான் இருக்கக் கூடாதா, ராம்?'

மின் விசிறியின் சுழற்சியில் பறக்கும் அவனது சுருள் கேசங்கள். அவனையே கண் கொட்டாது பார்க்கும் மாணவிகள். பளார் பளார் என்று அறைந்தால் என்ன? சே! இதென்ன பொறாமை? காதல் கவிதைகளைப் பிழிந்து தர வல்லவனுக்குத் தன் வாழ்க்கையில் ஏன் ருசி இல்லை? மூளையை ஏதோ ஒன்று குடைந்தது.

ராம் வேறு யாரையாவது காதலித்திருப்பானா? யாரையாவது என்ன? சுநீதாவைத்தான்! அதனால்தான் தன்னுடன் பிடித்தமில்லையோ? இனிய பரிமாறல்கள், அந்தரங்க அன்பின் கனவுக் கண்ணசைவுகள், பார்வைகளின் மோதல் — ஊஹூம். ஒன்றுமே இல்லையே!

அவர்களுக்குத் திருமணம் ஆன புதிதில் சுநீதா வந்திருந்தாள். ராமின் அத்தை பெண், ஜாதகங்கள் பொருந்தவில்லை என்பதால் கல்யாணம் நடக்கவில்லை என்று சொன்னார்கள். சுநீதா டெல்லி சர்வ கலாசாலையில் வேலையில் இருந்தாள். ராம் திடீரென்று எப்பொழு

தாவது சுந்தாவைப் பற்றி — அவள் புத்தி சாலித்தனத்தைப் பற்றிப் பேசுவான்.

சுந்தாவின் குழைவுகள் — ராம் சுந்தாவைப் பரிந்து உபசரித்த உபசரிப்புகள் —அந்த ஒரு வாரமும் டியூஷன் வகுப்புகள் இல்லை.

''சாந்தா, வெண்டைக்காய் சுந்தாவுக்குப் பிடிக்காது'' — அப்பப்பா என்ன கரிசனம்?

சுந்தா ஊருக்குக் கிளம்பும் தினம், ராம் ஒரு புடவை வாங்கிக் கொண்டு வந்தான்.

''பரவாயில்லை. உங்களுக்கு இவ்வளவு தெரிந்திருக்கிறதே?'' என்றாள் சாந்தா.

''அத்தை, அத்தை பெண் எல்லாம் வீட்டு பெண்கள் என்பாள் என் அம்மா. முதன் முதலாக நம் வீட்டுக்கு வந்திருக்கிறாள்.''

சாந்தா பதில் பேசவில்லை. அடி மனத்தில் கலக்கல்.

ஒரு நாள் கான்வென்டுக்குக் குழந்தையை கொண்டு விடும்பொழுது அவனையும் அழைத்தாள். அன்று அவனுக்கு விடுமுறை.

''குழந்தை பியானோவுக்கு இசைவாக என்னமாய் ஆடுகிறாள் தெரியுமா?''

விடைத் தாள்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்தவன், ''நோ, நோ. நான்தான் தினமும் கல்லூரிக்குப் போகிறேன். உனக்குத் தான் ஆங்கிலம் மறந்து போயிருக்கும். ஜலாவுடன் நீ போய்க் கற்றுக்கொள்.''

அவன் சொன்னதென்னவோ வேடிக்கைக்குத்தான். அவளுக்குச் சுரீரென்று பட்டது. தப்பாகவே எடுத்துக் கொண்டாள்.

''நான் கற்றுக்கொண்ட காலத்தில் எந்தப் பேராசிரியர் வீட்டுக்கும் டியூஷனுக்குப் போனதில்லை'' என்று வெடுக்கென்று சொல்லி விட்டுப் போய்விட்டாள்.

அவன் அதை 'ஸ்போர்ட்டி'வாகவே எடுத்துக்கொண்டான்.

•

சூலகலப்பை யெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டு ஒரு நாள் காலையில் வந்திறங்கினான் சுரேஷ்—சாந்தாவின் தூரத்து உறவினன். பம்பாய் பகுதி மில் ஓனரான அவனுக்குப் பணம் தண்ணீர் பட்ட பாடு. மில்லியனர்! சாந்தா வீட்டினர் அவர்கள் அருகே நெருங்கவே பயப்படுவார்கள். அப்படிப்பட்டவன் இன்று சாந்தா வீட்டில் வந்து இறங்கி இருக்கிறான். சாந்தாவுக்குத் தலைகால் புரியவில்லை.

அவனை ஓடி ஓடி உபசரித்தாள். அவன் பம்பாயிலிருந்து புடவைகளையும், சாமான்களையும் கொண்டு நிரப்பி விட்டான். சாந்தாவின் கண்கள் விரிந்தன.

''சுரேஷ், உங்கள் மனைவி நலம்தானே? நீங்கள் அமெரிக்கா போனதாகக் கேள்விப்பட்டேன்.''

சுரேஷின் முகம் வாடியது. ''என் மனைவி என்னைத் தனியாக விட்டு விட்டாள்.''

'ஓ... மேனாட்டுப் பழக்க வழக்கப்படி 'டைவோர்ஸ்' கேஸாக இருக்குமோ?'

''தனியாக என்றால்?''

''இறந்து விட்டாள்.''

பரிதாபம் சுரந்தது சாந்திக்கு.

சாந்தி சமையல் செய்யும்பொழுது சமையல் அறைக்குள் நிற்பான் சுரேஷ். பிரட் சாண்ட்விச் செய்து அவளைச் 'சாப்பிட்டுப் பார்' என்று வற்புறுத்துவான். ராம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுவான். நிதானமாக ரசித்துச் சாப்பிடச் சாந்தாவுடன் உட்காருவான் சுரேஷ். அவள் தட்டைப் பார்த்து இடது கையால் அவன் எடுத்துப் போடுவான்.

''வெங்காய சாம்பார் ஏ ஒன். இப்படி ஹோம்லியாகச் சாப்பிட்டு எவ்வளவோ காலம் ஆகிவிட்டது சாந்தி.''

வந்த இரண்டொரு தினங்களிலேயே ராமின் குணத்தைப் புரிந்து கொண்டுவிட்டான் சுரேஷ். சட்டென்று ஒதுங்கிக்கொண்டான். அன்று ராம் சாப்பிட உட்கார்ந்த சமயம் சுரேஷ் ஜலாவுடன் ஹாலில் உட்கார்ந்திருந்தான்.

''சுரேஷ் மகாபலிபுரம் போகலாம் என்கிறான். ஒரு நாள் லீவு எடுத்துக் கொள்ளுங்களேன். இன்றைக்கே திரும்பி வந்துவிடலாம்.''



ராம் சாந்தியின் முகத்தைப் பார்த்தான்.

''என்னால் வர முடியாது.''

சாந்திக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

''அப்படியானால் நான் போகிறேன்.''

சாதத்தைக் குழம்பில் கலந்தவன் ''அவசியம் போகத்தான் வேண்டுமா?'' கேட்டு விட்டு வாயில் போட்டுக் கொண்டான்.

'இவர் சுநீதாவுடன் அவள் நண்பர் வீட்டுக்குப் போய்விட்டு வரலாம். நான் சுரேஷுடன் போகக் கூடாதா?'

''ஜலாவைக் கூட்டிக் கொண்டு போக வேண்டாம். என் ஃப்ரெண்ட் வீட்டில் விட்டு விடு. நான் சீக்கிரம் வந்து பார்த்துக்கொள்கிறேன்.''

நண்பரின் காரை எடுத்துக் கொண்டு வந்தான் சுரேஷ். தானே டிரைவ் பண்ணினான். அவன் அருகில் சாந்தா.

''உன் போன்ற அழகியுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க ராமுக்குக் கொடுத்து வைக்கவில்லை பார். எனக்குக் கொடுத்து வைத்திருக்கிறது.'' செல்லமாகத் தோளில் தட்டினான்.

ஃபாரின் ரிட்டர்ன். அதனால் தொட்டுப் பேசுகிறான் என்று நினைத்தாள் சாந்தா. இரவு திரும்பும் எண்ணத்தில்தான் கிளம்பினார்கள். புறப்படும்பொழுதே நேரமாகி விட்டது. போனதுமே சற்று ஓய்வெடுக்க ஓர் அறையை எடுத்தான் சுரேஷ்.

நல்ல பௌர்ணமி. சுற்றிவிட்டு விடுதிக்கு வரும்பொழுது இரவு ஒன்பது மணியாகி விட்டது.

அவள் விடுதிக்குத் திரும்பும்பொழுது சொன்னாள்: ''அறையைக் காலி செய்து விட்டு வாருங்கள். இப்படியே திரும்பலாம் ஜலா அழுவாள்.''

சுரேஷ் சிரித்தான். ''என் விருந்தே இனிமேல்தானே சாந்தா. இன்றிரவை நாம் இங்கேயே கழிக்கப் போகிறோம்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

அவள் உடம்பு நடுங்கியது.

''ஹோட்டல் லெட்ஜரைப் பாரேன். மிஸ்டர் அண்ட் மிஸஸ் சுரேஷ்னுதானே அறையை எடுத்திருக்கிறேன்.''

அவள் வாயடைத்துப் போனாள். நாகப் பாம்பைத் தெய்வம் என்று வழிபடுவதானால் புற்றில் கையை விடலாமா?

விடுதியின் முன்பு கார் நின்றது. ஸ்கூட்டருடன் ராம் நின்றிருந்தான். கதவைத் திறந்து கொண்டு பாய்ந்து இறங்கினான். சுரேஷைக் காட்டித் தருவதா வேண்டாமா? தோளில் கரத்தைப் போட்டு வளைத்துக் கொண்டான். சுரேஷின் முகம் கறுத்தது.

''நீங்கள் எங்கே இங்கேயென்று?'' சாந்தா குழறினாள்.

''என் அம்மா — உன் மாமியார் வந்திருக்கிறாள். வா, ஸ்கூட்டரில் போய்விடலாம்.''

அவள் நிம்மதி அடைந்தாள்.

''காரில் போய்விடலாமே?'', என்றான் சுரேஷ் சற்றுத் துணிவுடன்.

''ஷட் அப்! என் மனைவியை எப்படி அழைத்துக் கொண்டு போவது என்று எனக்குத் தெரியும்'' என்று சீறினான் ராம்.

சாந்தா புல்லரித்துப் போனாள்.

சுரேஷ் அறைக்குத் திரும்பி விட்டான்.

''அம்மா வந்திருக்கிறார் என்றீர்களே?''

அம்மா வரவில்லை. ஜலா கணேஷ் வீட்டில் தான் இருக்கிறாள்.''

''நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?''

''வாழ்க்கையில் சில நகாசுப் பூச்சுக்கள் தேவைன்னு எனக்குத் தெரியவில்லை. வெறும் காய்லே உப்புப் போட்டால் உறைக்குமா? வேகவைத்தால்தானே உப்பு காயில் கலக்கும்! காலேஜ் வாழ்க்கையிலேயே இருந்து விட்டேன். சாந்தா என்னை மன்னித்துவிடு.''

''என்ன திடீர்னு?'' சாந்தா தடுமாறினாள்.

''இன்று நேரே வீட்டுக்கு வந்தேன். ஜலாவை அழைத்துக் கொண்டு வரக் கிளம்பினேன். பூட்டை எடுக்கும்பொழுது சுரேஷின் டைரி கீழே கவிழ்ந்து விழுந்தது. அந்தப் பக்கம் என் கண்களில் பட்டது.''

பாக்கெட்டினுள் வைத்திருந்த டைரியைப் பிரித்துப் பென்சில் டார்ச்சைப் பாய்ச்சினான். ரூபாய் வட்டமாய்த் தங்க வட்டம் விழுந்தது.

'ராமுக்கும் — சாந்தாவுக்கும் ஒற்றுமை இல்லை. சாந்தாவின் இளமைத் தேட்டைகளுக்கு ராம் இடம் தருவதில்லை. இது யாருடைய குற்றமானாலும் லாபம் எனக்கு இருக்கட்டும்! மகாபலிபுரத்தில் சாந்தாவை எப்படியாவது என் வசமாக்கிக் கொள்ள வேண்டும்.''

படிக்கப் படிக்கச் சாந்தாவின் கண்கள் கலங்கின. அவன் ராமையும் சுநீதாவையும் பற்றி எப்படியெல்லாம் எண்ணினான்? ராம் அப்படி இருந்தால் மனைவியைக் காப்பாற்ற ஓடி வருவானா?

''ராம்'' என்று கேவினாள் சாந்தா.

''உஷ்... எதுக்காக அழுகிறாய்? புருவம் எப்படி வேண்டுமானாலும் வளரலாம். கண்ணுக்குள் அது வியர்வையைப் புக விடுவதில்லை. அடி விழும் என்று புரிந்து கொண்டு இமைகள் கண்களை மூடிக் கொள்வதில்லையா? கணவனும் அது போலத்தான் சாந்தா. பரஸ்பர உணர்ச்சிப் பரிமாறல்கள் தேவை என்பதைப் புரிந்து கொண்டு விட்டேன்.''

ஸ்கூட்டர் கிளம்பியது.

''தோளை நன்றாகப் பற்றிக்கொள்'' என்றான் ராம்.

அவள் இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள்.



நோயாளி: தெர்மாமீட்டர் வாயிலிருக்கும்போது 'ஜோக்' சொல்லாதீர்கள் என்றேனே, கேட்டீர்களா?

டாக்டர்: ஏன், என்ன ஆனது?

நோயாளி: சிரித்த சிரிப்பில் தெர்மாமீட்டர் வயிற்றுக்குள் போய் விட்டது!

-இரா. இராஜாமணி



ஒரு மங்கையின்
வாழ்வில் மிக
இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது
கட்டாவ்.

கட்டாவின் பெர்கேலா வகைகள்.

Rediffusion/K/1222c TM

அத்தியாயம் 22

ஜெயாவுக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் அவள் ஏற்கனவே ஒரு பைத்தியக்காரியாக இருந்தது தான். அவளுடைய பிள்ளை ஏதோ ஒரு பிணத்தை வாரிப் போட்டுக் கொண்டு வருகிறான். அவசர அவசரமாக டெலிபோன் செய்கிறான். ஒரு 'வேன்' வருகிறது. வேம்புவும் மல்லிகாவும் மாறி மாறிக் கொண்டு வந்த குடங்களைத் தன் கையால் வாங்கிப் பிணத்தைக் குளிப்பாட்டுகிறான். புது வேட்டியைக் கட்டுகிறான். திருநீறு பூசுகிறான். குங்குமம் இடுகிறான். அவன், வேம்பு, மல்லிகா, வேன் டிரைவர் நால்வருமாகச் சேர்ந்து பிணத்தை வண்டியில்ஏற்றுகிறார்கள். வேம்புவும் மல்லிகாவும் வாசலில் நின்று விடை கொடுக்க, சவ வண்டி நகர்கிறது. முன் சீட்டில் டிரைவர் அருகே அவளுடைய பிள்ளை அமர்ந்திருக்கிறான்.

ஒரு அனாதைப் பிணத்துக்கு இவ்வளவு மரியாதையா?

கடிகாரத்தைப் பார்த்தாள்.

சரியாக ஏழு.

ஜெயா இன்னும் காப்பி குடிக்கவில்லை. பிணத்துடன் வந்து பிணத்தை வழி அனுப்பியவர்களுக்குக் காப்பியின் சிந்தனை இல்லாமலிருக்கலாம். ஆனால் அவளால் எப்படிக் காப்பியை மறக்க முடியும்?



தன் அறையிலிருந்து நேரே குளியலறைக்குச் சென்றாள். ஷவரைத் திருப்பி விட்டுக் கொண்டாள். வழக்கமாகத் தினந்தோறும் அவள் தலைக்கு நீர் ஊற்றிக் கொள்ள மாட்டாள். ஜலதோஷம் வந்துவிடும் என்ற பயம். அன்று ஊற்றிக் கொண்டாள். அதிகாலையில் சவ தரிசனம். என்ன நடக்குமோ?

அவள் பாத்ரூமிலிருந்து வெளியேறுவதற்கும் கிணற்றடியில் குளித்துவிட்டு ஈரப் புடவையுடன் வேம்பு வருவதற்கும் சரியாக இருந்தது. நேற்று இவள் என்ன சொன்னாள்? 'நாளைக்கு நான் வெளியேறுகிறேன்' என்று. இன்னும் வெளியேறவில்லை. இப்போது வேம்பு இருக்கிறாள். சமையல் வேலையைப் பற்றிப் பேசினால் என்ன? நிச்சயமாக அர்ஜுனன் சாப்பிட்டாக வேண்டும். மாப்பிள்ளைக்கு சுக்கா ரொட்டியும் கூட்டு வகையறாக்களும் தயார் செய்தாக வேண்டும். ஆனால் ஜெயா கேட்டுவிட்டு அதற்கு வேம்பு ஏதேனும் ஏடாகூடமாகப் பதில் சொல்லி விட்டால்?

புடவையை மாற்றிக்கொண்டு அவள் சமையல் அறையில் பிரவேசித்தபோது, அங்கே வேம்பு இருந்தாள். ஜெயாவுக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. உள்ளூற நிம்மதி. அவள் சமையல் செய்ய வேண்டாம். அடுப்பில் தண்ணீர் சூடேறிக் கொண்டிருந்தது. அருகே ஃபில்டர்.

மௌனமாக அவள் திரும்ப யத்தனித்த போது—

''ஜெயா'' என்ற குரல் வந்தது.

''உம்.''

''இரு. காப்பி தரேன்.''

''ஹாலில் இருக்கேன்.''

''நான் இப்ப ஒரு சமையல்காரியாப் பேசலே. அதனாலே ஹாலுக்கு ஏந்திண்டு வர முடியாது.''

''யஜமானிக்கு இணையா நின்னு பேசறதா என்னமோ?''

''அப்படி இல்லே!'' என்ற வேம்பு, ''அர்ஜுனன் சொன்னான். இன்னிக்கு ஒரு நாள் 'ஹெல்ப் பண்ணு வேம்பு'ன்னு. வெறும் ஹெல்ப்தான். அப்புறம் போயிடுவேன்.... இதோ தண்ணி கொதிச்சாச்சு... கொஞ்சமா பால் வைச்சு உனக்கு மட்டும் தனியா கலந்து தரேன் இரு'' என்றாள்.

ஜெயாவால் எதுவுமே பேச முடியவில்லை.

வேம்பு தந்த காப்பியைக் குடிக்க ஆரம்பித்ததுமே புது உற்சாகமும் ரோஷமும் முளைத்தன.

''தெரியாமத்தான் கேட்கிறேன், வேம்பு.. ஒரு அனாதைப் பிணத்துக்கு இங்கே என்ன வேலை?'' என்று கேட்டாள் ஜெயா.

''என்னிடம் கேட்டால்? அது புறப்படறதுக்கு முன்னாடி அதுகிட்டயே நீ கேட்டிருக்கணும், ஜெயா!'' என்றாள் வேம்பு.

''ரொம்பச் சாமர்த்தியமாப் பேசிட்டதாக நினைப்போ?''

''நீ என்ன வேணாலும் நினைச்சுக்கோ, ஜெயா... உன் பிள்ளை அர்ஜுனன் உன்னை மாதிரி இல்லே. அவனுக்கு உடம்பு நிறைய மனிதாபிமானம்... அவனுடைய அப்பா வழியிலே யாருக்கும் இவ்வளவு இருந்ததில்லே... அவன் மாப்பிள்ளையின் பூரண சம்மதத்துடன் எல்லாம் செய்திருக்கிறான். பணக்காரன் காசை வீசி ஏழைக்கு உதவி செய்யறது பெரிசில்லே, ஜெயா... தன் உடம்பாலே தன் வியர்வையாலே உதவி செய்யறான் பாரு. அதுதான் மகா பெரிசு. உன் பிள்ளை— நீ பெருமைப்படணும். மூஞ்சியைச் சுளிக்கப் படாது. — எப்படி மகத்தான காரியம் செய்திருக்கிறான் தெரியுமா!''

''நீ அஷ்டோத்திரம் பண்ணிண்டே இரு. வேம்பு... நீங்களெல்லாம் இப்ப ஒரு கட்சியாயிட்டீங்க. பரவாயில்லே. என் பிள்ளை ஒரு பிணத்தை எரிக்கிறதோடு நிற்கமாட்டான் போலிருக்கு. பிணத்தோட பெண்ணையும் கரையேத்தி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான் போலிருக்கு'' என்றாள் ஜெயா.

''அதில் உனக்கு இன்னும் சந்தேகம் இருக்கா... மல்லிகா மாதிரி அழகும் குணமும் உள்ள மருமகள் வர நீ கூடக் கொடுத்து வைச்சிருக்கே.''

''சீ!'' என்ற ஜெயா டம்ளரை 'டக்'கென்று வைத்து விட்டு நகர்ந்தாள்.

ஜெயா ஹாலுக்கு வந்தாள். மல்லிகா, ஈரம் தலையிலிருந்து சொட்டச் சொட்ட போர்ட்டிகோ படியில் உட்கார்ந்திருந்தாள். அவளைக் கூப்பிட்டு ஏதேனும் பேசலாம் என்று யோசித்த ஜெயா மனத்தை மாற்றிக் கொண்டாள்.





பட்டு உடுத்திய
மகிழ்ச்சிப் பொங்கல்!
ரூ. 130 முதல் உள்ள
வண்ணப் பட்டுப்புடவைகள்!
20%
சிறப்புத் தள்ளுபடி
டிசம்பர் 17 முதல்.
மற்றும் கலைநயமிக்க பனாரஸ்
பட்டுப்புடவை ரகங்கள் பல.
நாட்டின் பல பாகங்களிலிருந்து
தருவிக்கப்பட்ட கைத்தறி
வகைகள் எங்களிடம் உள்ளன.
தவிர அலங்காரத் துணி வகை
களும் உண்டு.
ரெடிமேட் ஆடைகளுக்கு 10%
இன்முக சேவை எங்களின்
பண்பாடு. இன்றே வாங்குங்கள்!
ஹேண்ட்லூம் ஹவுஸ்
7, ரத்தன் பஜார், சென்னை 600 003.
• ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை உண்டு.

ADWAVE/HH/1530

திடீரென்று தாவோசை.

வேம்பு டபரா தம்ளருடன் போர்ட்டிகோவை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

வேம்பு ஜெயாவைத் தாண்டிக் கொண்டு போனாளே தவிர, திரும்பியும் பார்க்கவில்லை.

ஒரு அனாதைப் பிணத்தின் பெண்ணுக்குக் காப்பி போகிறது!

தனக்கு ஹாலில் கொண்டுவர மறுத்த வேம்பு முன்பின் தெரியாத ஒரு பெண்ணுக்கு நடையாய் நடந்து ஆவி பறக்கும் காப்பியுடன் செல்லுகிறாள்! இது என்ன அக்கிரமம்!

ஜெயா எழுந்தாள்.

ஹால் ஜன்னல் அருகே நின்று கவனித்தாள்.

''மல்லிகா!''

மல்லிகா மௌனமாகத் திரும்பி ஏறிட்டுப் பார்த்தாள். எல்லா அப்பன்கள் செத்த உடன் எல்லாப் பெண்கள் முகங்களில் இருக்கும் களை மல்லிகா முகத்திலும் இருப்பதாக ஜெயாவுக்குப் பட்டது.

''இந்தா....''

''வேண்டாம் வேம்பு.''

''அசடு மாதிரி நடந்து கொள்ளாதே மல்லிகா. காப்பியைக் குடி.''

''வேண்டியிருக்கலே....''

''துக்கப்படறபோது வயத்தைக் காயப் போடக் கூடாது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அர்ஜுன் வந்து விடுவான். அதற்குள் உப்புமா கிளறிவைக்கிறேன்.''

உப்புமா! வேம்பு நிச்சயமாக அவளுடைய பிள்ளையின் பக்கம். இந்தப் பெண்ணின் பக்கம்தான்! மாப்பிள்ளையின் பக்க பலம் வேறு இருக்கிறது!

ஜெயா பொருமினாள்.

''நான் இப்ப நீ தர்ற காப்பியை வாங்கிக்கறேன். ஆனா நீ எனக்கு ஒரு உதவி செய்யணும் வேம்பு.''

''என்ன வேணும். சொல்லு குழந்தே.''

''நான் இன்னும் பத்து நிமிஷத்திலே புறப்பட்டுப் போறேன். அப்புறம் என்னை யாரும் முக்கியமாக அர்ஜுன் சந்திக்கக்கூடாது.''

''இது என்னடி ஒரு பெரிய குண்டாத் தூக்கிப் போடறே...''

''இல்லே வேம்பு... மாப்பிள்ளை, நீ, அர்ஜுன் எல்லாரும் என்கிட்ட எவ்வளவு பிரியமா நடந்துகொள்றீங்கன்னு எனக்குத் தெரியும்... இதை நினைச்சுப் பார்க்கறப்போ கண்லே கட்டிக்கிற கண்ணீர் என் அப்பா உயிரை விட்டப்போ வழிஞ்ச கண்ணீரை விடப் பத்தாயிரம் மடங்கு அதிகம்....''

''உளறாதே மல்லிகா.''

''ஆனா இனிமே நான் இங்கே யாருக்குமே ஒரு சுமையா, ஒரு பாரமா இருக்கப்படாது. மாப்பிள்ளையின் வாஞ்சையையோ, அர்ஜுனின் அன்பையோ எனக்குச் சாதகமா இனிமே பயன்படுத்திக்கிட்டா, அது நன்றி கெட்டத் தன்மையாயிடும். ஏன், எனக்கு நானே செஞ்கக்கிற துரோகமாயிடும். அதனாலே....,அதனாலே.... நான்...''

''போயிடறேன் என்கிறாயாக்கும்!''

மல்லிகா தலை ஆட்டினாள்.

ஜெயாவுக்குத் தலை சுற்றியது.

''இப்படியும் ஒரு பெண்ணா?''

''போ... உன் இஷ்டம் போலப் போ... ஆனா அர்ஜுன் கிட்டே சொல்லிண்டு போ... அவன் சம்மதம் கொடுத்தாப் போ!''

''இல்லே, வேம்பு, சொல்லிக்காமப் போறது தான் அழகு. எனக்கு இனிமே யாரும் இல்லே. கோயமுத்தூர்லே அர்ஜுன் அண்ணா ஃபாக்டரியிலேதான் நான் குமாஸ்தா வேலை பார்க்கிறேன். நான் அங்கே போய் என் காலத்தை ஓட்டிக்கிறேன்...!''

''மாப்பிள்ளையும் அர்ஜுனனும் உன்னைப் பத்தி என்ன நினைக்கிறார்கள் தெரியுமா மல்லிகா!''

''தெரியும். ஏன், அர்ஜுனன் கூட தன் வாயாலேயே சொல்லிட்டார். அதுவும் தன் தாயாரிடம். என் காதில் அது விழுந்த போது ரொம்ப மகிழ்ச்சியாத்தான் இருந்தது. ஆனா இப்ப அதை நினைச்சுப் பார்க்கிறது அசம்பாவிதம். அர்ஜுன் மாதிரி ஒரு வாழ்க்கைத் துணைக்கு நான் அருகதை இல்லாதவள். ஒரு சின்ன உதவி மட்டும் செய் வேம்பு.''

''என்ன?''

''என் அம்மாவின் மூணு விலாசம் பெட்டியில் இருக்கு. எடுத்துத் தரேன். மூணு லெட்டர் எழுதிப் போட்டுவிடு. நான் கோயம்புத்தூர் போய்விட்டதாகவும் எழுது.''

''ஏன் இந்தக் காரியத்தை நீயே செய்யறது?''

''செய்யலாம். ஆனா மாட்டேன். என் அப்பா நல்லவர். வெகுளி. சாது. சில சமயங்களிலே படபடன்னுபேசுவார். ஒண்ணு விட்ட அண்ணா கிட்டே ஒரே அடியாய்ப் பசி தெரியாம சாப்பிடப் போறேன்னு கிளம்பினவள் என் அம்மா. அப்பவெல்லாம் என் அப்பாவுக்குக் காவனா சம்பாத்தியம் கிடையாது. ஒரு கை வளையலை வித்திருந்தாக்கூடப் போதும் ஒரு மாசம் சாப்பிடலாம். ஆனா அப்பாவைத் துச்சமாப் பேசி அம்மா புறப்பட்டுப் போனா. இப்பேர்ப்பட்டவள் என் தாயார்ன்னு நினைக்கவும் மனசு கூசுகிறது. தயை செய்து நீ லெட்டர் எழுது.''

வேம்பு மௌனமானாள்.

ஹாலில் ஜன்னல் அருகே நின்றிருந்த ஜெயா சிலையானாள்.

பங்குதாரர்கள்

மனைவி செய்யும் புண்ணியத்தில்
கணவருக்கும் பங்கு இல்லை.
கணவர் செய்யும் புண்ணியத்தில்
மனைவிக்கும் பங்கு உண்டு.
மனைவி செய்யும் பாவத்தில்
கணவருக்கும் பங்கு உண்டு
கணவர் செய்யும் பாவத்தில்
மனைவிக்கும் பங்கு இல்லை.

- வாரியார் விரிவுரையிலிருந்து
தேன் வள்ளியம்மை



இப்படி ஒரு பெண்ணு?

வேம்பு காலி டபரா டம்ளருடன் திரும்பிய பிறகு, அடிமேல் அடி வைத்து ஜெயா திண்ணைக்கு வந்தாள். அவளைக் கண்டதும் மல்லிகா எழுந்து நின்றாள்.

''உன் பேர் என்ன சொன்னே?''

மல்லிகா ஒரு கணம் மௌனம் சாதித்தாள். ஒரு பெரிய பணக்காரி என்றால் அவ்வளவு சீக்கிரமா ஒரு பெயரை மறக்க முடியும்?

''மல்லிகா.''

''உன் அப்பாவின் காலமும் முடிந்துவிட்டது.''

''அதான் பார்த்தீர்களே!''

''இனிமே என்ன செய்வதா உத்தேசம்?''

''புறப்பட்டுப் போக வேண்டியதுதான்.''

''எந்த ஊருக்கு?''

மல்லிகா சொன்னாள்.

''உனக்குப் பண உதவி வேணும்னு தயங்காமக் கேளு.''

''தாங்க்ஸ்.''

''நான்தான் உனக்கு தாங்க்ஸ் சொல்லணும்.''

''அப்படியா?''

''ஆமாம். உனக்கு அட்வகேட் குஞ்சிதபாதத்தைத் தெரியாது. பெரிய அட்வகேட். லட்சாதிபதி. அவருக்கு ஒரு பெண். பாமா. அவ அமெரிக்காவுக்குப் போய்ப் படிச்சிருக்கா....''

''நான் வரேன் ஜெயா மாமி.''

''ஏன்... என் பேச்சப் பிடிக்கலையா?''

''என் அப்பா பிணம் அங்கே எரிஞ்சுண்டிருக்கிறப்போ, நான் இங்கே வெட்டிப் பேச்சுப் பேசறது அநாகரிகம் மட்டும் இல்லே, அரக்கத்தனம் கூட....''

''மனுஷன்னு இருந்தா ஒரு நாள் போய்த்தான் ஆகணும் மல்லிகா!''

''உண்மைதான் மாமி. அது எனக்கும் சரி, உங்களுக்கும் சரி பொருந்தும்... ஆனா அப்படிப் போறவாளுக்கு ஒரு சொட்டுக் கண்ணீர் விடறது மனித தர்மம். யாராக இருந்தாலும், பிணத்தைப் பார்க்கறப்போ யார் கண்ணும் கலங்கத்தான் கலங்கும். ஆனா உங்க கண் விதிவிலக்கு. அது கலங்கவே இல்லே. ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். உங்களுக்கும் என் அப்பா கதி ஒரு நாள் இல்லாட்டா ஒரு நாள் ஏற்படும். அன்னிக்குப் பல பேர் உங்க சடலத்தைப் பார்ப்பா, கண் கலங்குவா. ஜெயா மாமிங்கறதுக்காக இல்லாவிட்டாலும் ஒரு மனித ஜீவன் என்பதற்காக.''

''நீ ரொம்பப் பேசறே!''

''என்னை மன்னிக்கணும். நான் வரேன்.''

அவள் சென்றுவிட்டாள்.

சரியாகப் பதினொரு மணிக்கு அர்ஜுன் ஒரு சிறு பையுடன் திரும்பி வந்தான்.

ஜெயா வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள்.

''வாசலிலேயே காலை அலம்பிண்டு வீட்டைச் சுத்தி நடந்து கிணத்தடிக்குப் போய் அங்கே குளி.''

''ஏம்மா?''

''ஒரு பொணத்துக்குக் கொள்ளி போட்டுட்டு வந்திருக்கே.''

''அதிலே என்ன தப்பு? ஆனா நான் கொள்ளின்னு போடலே. மின்சாரம்தான் நடேசனை எரிச்சது.''

''நான் சொன்னபடி செய். சுடுகாட்டிலிருந்து வரவா முதலிலே குளிக்கணும்.''

''உன் மனசு சுத்தமாகணும்னு நீ எங்கே எவ்வளவு தடவை குளிக்கணும் அம்மா.... சரி சரி இந்தப்பையை எடுத்து உள்ளே வை.''

''உள்ளே துணி ஏதேனும் இருக்கா?''

''கர்சீப் கூட இல்லே.''

அந்தத் தோல் பையை அவன் வைக்க, அவள் எடுத்துக் கையில் வைத்துக் கொண்டாள்.

''பேக்லிருக்கிற கரென்ஸி நோட்டுகளை எடுத்துத் தனியா வை. எல்லாம் சிதறிக் கிடக்கு.''

''சரி.''

ஜெயா திறந்தாள்.

நூறு, பத்து, இரண்டு, ஒன்று என்று நோட்டுக்கள் கிடந்தன. அள்ளி எடுத்தாள்.

''இது என்னடா—பிளாஸ்டிக் பை. என்னமோ பழுப்பா....''

''ஓ, சொல்ல மறந்துட்டேன். அது அஸ்தி அம்மா. எலக்ட்ரிக் கிரமடோரியமோ இல்லையோ... அஸ்தியை ரெண்டு மணி நேரத்துக்குள்ளே நம்ம கிட்டே கொடுத்திடுவா... அதை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ... மல்லிகா கிட்டக் கொடுக்கணும்!''

''அடப் பாவி!''


அலறிய ஜெயா பையைத் தொப்பென்று கீழே போட்டாள்.

''நீ அஸ்தியைத் தொட்டுட்டே. பரவாயில்லே...அஸ்திக்கு அப்படி ஒண்ணும் பெரிய களங்கம் வரலே....'' அர்ஜுன் சிரித்தான்.

சிதறி விழுந்த கரன்ஸி நோட்டுக்களை எடுத்துக்கொண்டு பையுடன், ''மல்லிகா! மல்லிகா!'' என்று அழைத்துக் கொண்டே படி ஏறினான் அர்ஜுன். (தொடரும்)

ஒரே கட்டிடம் - மூன்று கல்லூரிகள்

கல்கத்தாவில் ஸிட்டி காலேஜ் என்ற கல்லூரிக்குக் காலை, பகல், மாலை நேரங்களில் மூன்று பெயர்கள் உண்டு. காலையில் அது சிவநாத் சாஸ்திரி கல்லூரி என்று பெண்களுக்காக நடக்கிறது. பகலில் ஹேரம்பா சந்திரா கல்லூரி



என்றும் மாலையில் பிரஃபுல் சந்திர கல்லூரி என்றும் ஆண்களுக்காகச் செயல்படுகிறது. மூன்று கல்லூரிகளுக்கும் தனித் தனியாக முதல்வர்கள்; தனி காரியாலய அறைகள். மூன்று கல்லூரிகளின் நோட்டீஸ்களையும் அடுத்தடுத்துக் காணலாம். எல்லாம் ஒரே கட்டிடத்தில்.

- எஸ். முரளிதரன்



எம்.எஸ்.பெருமாள்

“கல்யாணராமா...''

''வந்துட்டேன் மாமா!''

''இதுல ஒரு கையெழுத்துப் போடு.''

''எத்தனை எடத்துல கையெழுத்து மாமா?''

''படிச்சவன்தானே நீ... ரெண்டு எடத்துலயும் போடு.''

''சரி மாமா.''

''படிக்கப் பார்க்காமப் போடு.''

''போட்டுட்டேன் மாமா.''

''ஃபாரத்தை வச்சுட்டுப் போ.''

ஃபாரத்தைக் கீழே வைத்த கல்யாணராமன் ஒரு வினாடி தயங்குகிறான். கையெழுத்துப் போட்டுக் கொடுத்தது எதற்காக என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தினால் அல்ல. மாமாவிடம் ஒரு உதவி கேட்டு. அதுவும் அவரை இப்போது விட்டுவிட்டால் மறுபடியும் நாளை இரவு எட்டு மணிக்கு மேல்தானே பார்க்க முடியும் என்ற பயத்தினால்.


மறுநாள் மத்தியானம் கல்யாணராமனுக்கு ஒரு வேலைக்கான இன்டர்வ்யூ. கமிட்டியில் மாமாவுக்குத் தெரிந்த நண்பர் (அவர் எப்படி அறிமுகம் என்பதை அலசிப் புண்ணியமில்லை. நதிமூலம் — ரிஷிமூலம் — நட்பு மூலம்) இருப்பதாகக் கேள்வி. மாமா பன்னிரண்டு மணிக்குக்கூட ஃபோன் மூலம் சிபாரிசு செய்யலாம் — நினைவு தெளிந்திருந்தால்!

''கையெழுத்துத்தான் போட்டாச்சே.... போயேன்.''

மாமா தூரத்துகிறார். பக்கத்திலே பாலன். எல்லாத் துறைகளிலும் எம்டன். மாமாவின் அந்தஸ்துக்கு இப்படி ஒரு அடியாளின் நட்பு (அல்லது தயவு) தேவைதானு?

கல்யாணராமனுக்குச் சொல்லப் பயம். வாரச் சாப்பாடும் கைச் செலவுக்குச் சில்லறையும், மாதத்தில் ஒரு சினிமாவுக்கான காசும் தந்து கொண்டிருக்கிற மாமாவைப் பகைத்துக் கொண்டு — அதுவும் அவர் பலவீனத்தைத் தாக்கிப் பகையைத் தேடிக்கொண்டு வாழ வேண்டிய கட்டாயம் என்ன? வேலைப் பொறியைச் சுமப்பது ஒரு பக்கம் இருக்கட்டும்...

கடவுளே... நாளைய இன்டர்வ்யூவில் தேறிவிட்டால் நானூறு ரூபாய் சம்பளம் — சிக்கனமாக இரண்டு வேளை சாப்பாடு 'கணபதி மெஸ்ஸில்' ஊருக்கு அம்மாவுக்கு ஐம்பது ரூபாய் மணியார்டர்.. இருக்கிற இரண்டு சட்டைகளோடு இன்னும் ஒரே ஒரு சட்டை நல்லதாக—முதல் மாதச் சம்பளத்தில்...



ஓர் இருபத்தி ஐந்து வயது இளைஞனுக்குரிய ஆசாபாசங்கள்... அபிலாஷைகள் நெஞ்சு நிறைய... ஆனால் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ண வேண்டிய பொறுப்பைச் சுமக்கிற மாதிரி நெஞ்சு நிறைய கனம்... பயம்....

பாலன் பிளாஸ்டிக் பையிலிருந்து ஒரு ஃபாரின் ஷர்ட்டை வெளியே எடுக்கிறான். இரண்டு கைகளாலும் மாமாவிடம் ஏந்துகிறான் — அதிவிநயன்! மாமா இடது கையால் வாங்கி அலட்சியமாக வீசுகிறார். இவன் தோளுக்கு அளவெடுக்கிற மாதிரி கச்சிதமாக விழுகிறது.

''வெச்சுக்கோ... கையெழுத்துப் போட்டுக் குடுத்ததுக்கு...''

கல்யாணராமன் அறையைக் கடக்கிறான்.

மாமா அலட்சியமாகச் சிறுகிறார்: ''நாய்க்கு ஊத்தற மாதிரி நாலு யூனிட் என்னடா கணக்கு...''

''தம்பி பர்மிட்டும் சேர்ந்து எட்டு யூனிட் ஆச்சுங்களே...'' — பாலனின் தொழில் குழைவு.

கல்யாணராமனுக்கு உடம்பு பதறுகிறது. 'தப்புப் பண்ணி விட்டோமோ' என்ற உதறல்.

மறு கணமே சமாதானம்.

''குடிக்கிறது வேணும்னு பாவமா இருக்கலாம். குடிக்க ஒத்தாசையா இருக்கிறது எப்படிப் பாவமாகும்?'

மனசைக் கல்லாக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறுகிறான்.

டெலிபோனை டயல் செய்யும் ஒலி.

''வஸந்த்.... பட்டாபிராமன் ஹியர்... இனிமே எட்டு யூனிட் சட்டப்படி... ரொம்பக் கிராக்கி பண்ணிக்காதே. தாசில்தார் கையெழுத்தோட நாளைக்கு வந்து சேரும். பாலன்தான் கொண்டு வருவான்.''

பாலன் பவ்யத்தோடு குறுக்கிடுகிறான்.

''தம்பியோட டேட் ஆஃப் பர்த்...''

''இது என்பதா? அம்பதுக்கு முன்னாலே எந்தத் தேதியை வேணும்னாலும் போடு.'' என்று உத்தரவிடுகிறார் மாமா. இப்போதே போதையின் வசம்.

''உனக்கு பர்மிட் இருக்கா?''

—இன்டர்வ்யூவில் இந்தக் கேள்வியைக் கல்யாணராமன் எதிர்பார்க்கவில்லை.

''மிஸ்டர் உனக்கு பர்மிட் இருக்கா?''

சமாளிக்க வேண்டும். மதுவிலக்கு பற்றி காந்திஜியின் தீவிரம்.

''ஏம்பா... உனக்குப் பர்மிட் இருக்கா?''

''சார் குடிக்கிற பழக்கம்...''

''நல்லதா கெட்டதாங்கிற பட்டி மன்றம் நடத்தப் போறதில்லே.'' — பிறவிப் பணக்கார நெடி அவர் பேச்சில்... தோரணையில்.

''மிஸ்டர் வஸந்த்....'' என்று இன்னொரு மெம்பர் குறுக்கிடுகிறார். நடுவர் வஸந்த் அவரைக் கையமர்த்துகிறார்.

''ஏம்பா... நீ பட்டாபிராமனோட நெவ்யூ தானே?''

''ஆமா சார்.''

''உன் வயசு இருபத்தி ஏழுன்னு கொடுத்திருக்கே.''

''இருபத்தி ஏழு கம்ப்ளீட்டட் சார்.''

''நோ... உன் வயசு முப்பத்தி ஒண்ணு.''

''இல்லே சார்....''

''காலையிலதான் உன் பர்மிட்டைப் பார்த்தேன். தாசில்தார் பொய் சொல்வாரா?''


பொய் சொல்ல மாட்டாரா?

கல்யாணராமனுக்குப் பொறி கலங்குகிறது.

''தம்பீ... எங்க கம்பெனிக்கு முப்பது வயதுக்குக் குறைவா உள்ள யங் எனர்ஜடிக் அன்ட் எஜுகேடட் கான்டிடேட்ஸ்தான் வேணும். பொய் வயசு சொல்லி வேலைக்குச் சேர நினைச்சதுக்கே உன்னை போலீஸ்லே ஒப்படைக்கலாம். உங்க மாமா முகத்துக்காகப் பார்க்கிறேன். உனக்கு ஓவர்-ஏஜ்.... நீ போகலாம்.''

மறுபடியும் மாமா வீட்டு வாரச் சாப்பாடும் வசவுத் தோரணமும் பொதியாய்க் கனக்கும் வீட்டு வேலைகளும்... நித்திய தண்டனைகள். இனி மாமா குடித்து விட்டு வந்து வழங்கும் உபசாரங்கள் அதிகப்படி... அதுவும் இவனுடைய பர்மிட்டில் வாங்கிக் குடித்துவிட்டு இன்னும் அதிக ஆவேசமாய் இவனையே அடித்து நொறுக்கப் போகும் புதிய சம்மட்டிகள்....

வேடிக்கையான தவறு!



ஐஸ்லாந்து நாட்டு அரசாங்கம் ஒரு கம்ப்யூட்டரைப் பயன் படுத்தி வருகிறது இந்தக் கம்ப்யூட்டர் ஒரு மாதிரி ரகம்! இதற்கு 100க்கு மேல் எண்ணத் தெரியாது. நூற்றுக்குமேல் 101, 102 என்று எண்ணு வதற்குப் பதிலாக ஒன்று, இரண்டு என்றுதான் இது எண்ணுகிறதாம். எனவே 106 வயது நிரம் பிய ''அல் டோரா'' என்ற கிழவியின் வயதை இது ஆறு என்று தவறுதலாகக் கணக்கிட்டு விட்டது. இதனால் ஒரு விபரீதம்! அந்த நாட்டுச் சட்டப்படி ஆறுவயது நிரம்பிய குழந்தையைக் கட்டாயமாகப் பள்ளியில் சேர்த்து விடவேண்டும். அடுத்தமாதம் தனது 107வது பிறந்தநாளைக் கொண்டாடப்போகும் கிழவிக்கு அந்த கம்ப்யூட்டர் உடனடியாகப் பள்ளியில் சேர்ந்துவிடுமாறு நோட்டீஸ் அனுப்பி விட்டது.

-கடல் ராஜன்

புதிய கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனுமல் எளிதில் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராகப் பாதுகாப்பு தேவை. புதிய ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்தினருக்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனுமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்எஃப்பி ஃப்ளோரைட் அதில் உள்ளது. கோல்கேட் ஃப்ளோரி கார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.




உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி சாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்ஃப்பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிருபணமாகியுள்ளது. கோல்கேட்டின் தீவிர ஆராய்ச்சி மட்டுமே இந்த தனிப்பட்ட எம்ஃப்பி பாதுகாப்பை உங்களுக்கு வழங்க முடியும்.

ஃப்ளோரிகார்டில் உள்ள எம்எஃப்பி ஃப்ளோரைட் எனுமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.


இப்பொழுது தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே கிடைக்கும்.

FT-G-2 TM





தரகர்: ஐம்பதாயிரம் ரூபாய் பணம், மூப்ப
ஒரு கார், ஒரு பங்களா, இவ்வ
பெண்ணுடன் கிடைக்கும்.
பையன்: இத்தனையும் கிடைக்கும் என்று
சொன்னது வேண்டும் என்ற கட



சிறப்பிதழ் மானியா!

'விஜய்'


க்யூ வரிசைச் சிறப்பிதழ்

பஸ்ஸுக்கா— அட்மிஷனுக்கா—
ரேஷனுக்கா— லைசென்சுக்கா—
தற்கொலைக்கா—

எதற்குத்தான் க்யூ இல்லை? நமது அடுத்த இதழ் க்யூ வரிசைச் சிறப்பிதழ்!

உங்கள் பிரதிக்கு முன் கூட்டியே சொல்லி வையுங்கள்

அப்புறம் நீங்களும் க்யூவில் நிற்க நேரிடும்!



(வாசகர்களிடையே பரபரப்பை உண்டாக்க, பத்திரிகைகள் திடீர் திடீரென்று சிறப்பிதழ்களை வெளியிடுகின்றன. இனி வரப்போகும் சிறப்பிதழ்கள் என்னென்ன?)

சர்க்கரைச் சிறப்பிதழ்

நமது அடுத்த இதழ் சர்க்கரைச் சிறப்பிதழாக மலர்ந்தருளப் போகிறது. வாசகர்கள் இனிப்பான செய்திகளையும், துணுக்குகளையும் எழுதி அனுப்பலாம். சுவையான துணுக்குகளுக்கு 2 கிலோ சீனி அன்பளிப்பு!

ஒரு சின்ன அதிர்ச்சி! சர்க்கரை விலை உயர்வு காரணமாக நமது சர்க்கரைச் சிறப்பிதழ் விலையை ரூ. 2 ஆக உயர்த்தியுள்ளோம் — அதே பக்கங்கள்!







சிரிக்கச் சிரிக்க..



அறுவைச் சிறப்பிதழ்

இந்தச் சிறப்பிதழில் முழுக்க முழுக்க அறுவை ஜோக்குகளாகவே வெளியிடுவோம்.

இந்த மாதிரி ஒரு அறுவை இதழ் வந்ததில்லை என்று வாசகர்களைக் கூத்தாட வைக்கப் போகிறோம்!

வாசகர்கள் பலதரம் கேட்ட ஜோக்குகளையும் கேட்டாலே அழுகை வரும் துணுக்குகளையும் எழுதி அனுப்பலாம்.

காப்பியடித்து எழுதுபவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு! தயாரா?



மாவாட்டுச் சிறப்பிதழ்


'ஆட்டுக்கல் இல்லா ஓட்டலில் ஓசிச் சாப்பாடு சாப்பிட வேண்டா' என்பது மரபு.

இப்போதெல்லாம் அநேக ஹோட்டல்களிலும் யந்திரத்தை நிறுவி விட்டார்கள். இதனால் கஷ்டப்படுவது யார்? — ஓசியில் சாப்பிட்டு மாவாட்டிச் செல்பவர்கள்தாம்! அவர்களைக் கௌரவிக்கும் வகையில் வெளியிடப்படுகிறது மாவாட்டுச் சிறப்பிதழ்.

'நான் மாவாட்டினேன்' என்ற தலைப்பில் வாசகர்கள் தங்கள் அனுபவங்களை எழுதி அனுப்பலாம். சன்மானம் உண்டு.

இந்தச் சிறப்பிதழைத் தயாரிப்பவர்: ''உசிலைமணி'' என்று கூறவும் வேண்டுமா?





பாக்கு பறி நேரத்திலே

உமாசந்திரன்

களைப்பு மிகுதியால் கண்களுக்கெதிரே பூச்சி பறப்பது போலிருந்தது செங்கோடனுக்கு. கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டான். கீழே இறங்கிப் போய்க் கஞ்சிக் கலயத்தைக் காலி செய்துவிட்டு மறுபடியும் வேலையைத் தொடர்ந்தால் என்ன? அந்த எண்ணம் தோன்றிய மறு கணமே அதை அழித்தும் விட்டான். என்ன பிரமாதம்? மிஞ்சிப் போனால் இன்னும் இருபது மரங்களே பாக்கி இருந்தன. ஒரு வழியாக எல்லாவற்றையும் பறித்து முடித்துவிட்டுக் கீழே இறங்கினால் போதாதா? இப்போதைக்குச் சில நிமிஷங்கள் மரத்தின் மேலேயே இருந்து களைப்பாற்றிக் கொண்டால் போயிற்று.

காத்தாயி கொடுத்த கஞ்சிக் கலயத்துடன் அதிகாலையிலேயே பாக்குத் தோப்புக்கு வந்துவிட்டிருந்தான் செங்கோடன். மருதக் கவுண்டரின் தோப்பு. பாக்கு பறிக் குத்தகையைச் செங்கோடனிடமே விட்டிருந்தார் கவுண்டர். அன்று நூறு மரங்களையாவது பறித்து முடித்த பிறகுதான் பசியாறுவதென்ற குறிக்கோளுடன் தோப்புக்கு வந்திருந்தான் செங்கோடன். முக்கால் கிணறு தாண்டுவதற்குள் மனத்தை மாற்றிக் கொண்டால் எப்படி?

பாக்கு பறி வேலையைக் கைவந்ததோர் கலையாகப் பயின்றிருந்தான் செங்கோடன். இத்தனை மரங்களில் பாக்குக் குலைகள் பழுத்திருக்கின்றன என்று நிர்ணயம் செய்து கொண்ட பிறகு முதல் மரத்தில் ஏறுவான். பவழச் சரங்களாகத் தொங்கிய பாக்குப் பழங்களைப் பறித்து முதுகில் மாட்டிய கோணிப் பையில் போட்டுக் கொண்ட பிறகு அடுத்த மரத்தை நோக்கி லாகவமாக ஆடி ஆடிச் சாய்வான். அடுத்த மரம் கைக்கெட்டும் தூரம் வந்ததும் சட்டென்று அந்த மரத்துக்குத் தாவி அதிலுள்ள பழங்களைப் பறிக்க ஆரம்பிப்பான்.

முதுகில் தொங்கிய கோணியின் கனம் தான் கணக்கு. இனி கனம் தாங்காதென்ற உணர்வு ஏற்பட்டதும் கீழே இறங்கிச் சேர்ந்த பாக்குப் பழங்களைக் குவியலாகக் குவித்து விட்டுக் காலி கோணியுடன் அடுத்த மரத்தில் ஏறுவான். பிறகு மரத்துக்கு மரம் தாவியவாறு பாக்கு பறி வேலை தொடரும்.

இப்போது கோணிக் கனம் இன்னும் இருபது மரங்களுக்குத் தாங்குமென்று தோன்றியது. அதன் பிறகே கீழே இறங்கிப் பசியாறிக் கொள்ளலாம் என்ற உறுதியுடன் அடுத்த மரத்துக்குத் தாவினான் செங்கோடன். அநேகமாகத் தோப்பின் விளிம்பில் இருந்தது அந்த மரம். ஏழெட்டுப் பழங்களே தேறின அதில். அவற்றைப் பறித்துக் கோணியில் போட்டுக் கொண்டு அடுத்த மரத்துக்குத் தாவுவதற்கு முன்னேற்பாடாக ஊஞ்சலாடுவது போல் சாயப் போன செங்கோடன் சட்டென்று அப்படியே நிலைத்து விட்டான். நெடுந் தூரத்தில் ஒரு குன்றையொட்டினாற் போலிருந்த ஏரிக் கரையில் அவன் கண்ட காட்சி அவனை அப்படிக் கட்டிப் போட்டு விட்டது.

பாக்கு மரத்தின் உயரத்திலிருந்து பார்க்கும்போது அந்தத் தூரத்தில் தெரிந்த அந்த உருவம் நிழல் வடிவமாகத்தான் அவன் கண்களுக்குப் புலனாயிற்று. ஆண் பிள்ளைதான். ஆனால் யாரென்று அடையாளம்கண்டு கொள்ள முடியவில்லை. இளைஞனா, நடுத்தர வயதுடையவனா என்பதும் தெரியவில்லை. என்ன செய்து கொண்டிருக்கிறான் அவன்? குழி பறித்துக் கொண்டிருக்கிறானா? எதற்காக?

குழியைத் தோண்டி முடித்ததும் அந்த உருவம் குன்றின் அடிவாரத்தில் புதர்களிடையே மறைத்து வைத்திருந்த ஏதோ கனமான பொருளைச் சிரமத்துடன் தூக்கி வந்து குழிக்குள் இறக்கியது. பின்பு பறித்த மண்ணைக் குழியில் தள்ளிச் சமப்படுத்தியது. இந்த வேலை யெல்லாம் முடிந்த பிறகு மண் வெட்டியை ஏரித் தண்ணீரில் ஆழமான பகுதியில் சென்று விழும்படியாக வீசிப் போட்டுவிட்டு அங்கிருந்து குன்றின் மறு பக்கத்துக்கு நடந்து சென்று மறைந்தது.

குன்றின் மறு பக்கத்தை யொட்டினாற் போல் அதிக உபயோகத்தில் இல்லாத கப்பிச் சாலை யொன்று வளைந்து சென்ற

தென்று செங்கோடனுக்குத் தெரியும். அந்த உருவம் கண்களுக்கு மறைந்த சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்தத் திசையிலிருந்து செம்புழுதி பறந்ததைச் செங்கோடன் பார்த்தான். காரிலோ ஜீப்பிலோ தான் அந்த மனிதன் அங்கே வந்திருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை அவனுக்கு.

மரத்திலிருந்து பரபரவென்று இறங்கினான் அவன். ஏரியை நோக்கி வேகமாக நடை போட்டான் செங்கோடன். மரத்தின் உச்சியிலிருந்து பார்த்தபோது கூப்பிடு தூரத்தில் உள்ளதைப்போல் தோன்றிய ஏரி இப்போது அவன் நடக்க நடக்க எட்டப் போய்க் கொண்டிருந்தது போல் அவனுக்குத் தோன்றியது. நேர் வழியும் இல்லை. நடுநடுவே எதிர்ப்பட்ட வயல்களையும் தோப்புக்களையும் பொட்டல் சரளைத் திடல்களையும் எப்படியோ கடந்து ஏரிக் கரையை ஒரு மட்டுக்கும் எட்டி விட்டான்.

ஏரியை ஒட்டினாற்போல் மூன்று குன்றுகள் இருந்தன. அந்த மூன்று குன்றுகளிலிருந்து வடிந்து வந்த மழைத் தண்ணீரைத் தேக்கிக் கொண்டுதான் அந்த ஏரி உருவாகியிருந்தது. எந்தக் குன்றை அடுத்த ஏரிக்கரையில் அந்த மனிதன் குழி தோண்டினான்? செங்கோடனுக்கு அதைக் கண்டறிவது சுலபமாக இல்லை. நடந்த களைப்பும் பசிக் கிறுகிறுப்பும் சேர்ந்து அவனுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வருவது போலிருந்தது. ஒவ்வொரு குன்றின் அடிவாரத்திலும் நடந்து நடந்து ஆராய்வது அப்போது சாத்தியமாகத் தோன்றவில்லை. அவசரத்துக்கு இடம் கொடாமல் ஆற அமரக் கஞ்சியைக் குடித்துப் பசியாறிவிட்டே வந்திருக்கலாம்.

மறுபடியும் ஒரு தரம் அதே பாக்கு மரத்தின்மேலிருந்து பார்த்தால்தான் அந்த இடத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியுமென்று தோன்றியது. மறுநாளைப் பொழுதை இதற்கென்றே ஒதுக்கி அந்த மனிதன் மறைத்து வைத்த பொருள் என்னவென்று கண்டு பிடித்தே ஆக வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான்

மாலையில் வழக்கம் போல் அவன் நாயர் கடையில் டீ அருந்தச் சென்றிருந்தபோது அங்கிருந்த மற்றவர்கள் பரபரப்புடன் பேசிக்கொண்டிருந்த செய்தி அவன் காதில் விழுந்தது. மாலைப் பேப்பரில் கொட்டை எழுத்தில் பிரசுரமாகியிருந்த ஒரு கார் விபத்தைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். குன்றை அடுத்த கப்பிச் சாலையில் வேகமாகச் சென்ற கார்ஒன்று செங்குத்தான ஒரு திருப்பத்தில் தடம் புரண்டு விபத்துக்கு உள்ளாகி விட்டதென்றும், அதை ஓட்டிச் சென்ற ஒரே ஆள் அந்த இடத்திலேயே பலியாகி விட்டான் என்றும் அவர்கள் பேசிக்கொண்டபோது செங்கோடனும் பரபரப் படைந்தான். மாலைப் பத்திரிகையின் பிரதி ஒன்றை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான் அவன்.

''காத்தாயி,—சேதி தெரியுமா? ஒரு கார் விபத்தைப் பத்திப் பேப்பர்லே போட்டிருக்காங்க, காரே திருட்டுக் காராம். ஓட்டிக்கிட்டுப் போனவன் போலீஸ் தேடிக்கிட்டிருந்த கடத்தல் பேர்வழியாம். ஆள் குளோஸாயிட்டான். ஆனா அவன் கடத்திக்கிட்டுப் போன தங்கம் என்ன ஆச்சுன்னு புரியலியாம்!'' — செங்கோடன் எழுத்துக் கூட்டிக் கூட்டி எப்போதாவது பத்திரிகை படிப்பது உண்டுதான். ஆனால் பத்திரிகைச் செய்தியை வைத்துக் கொண்டு அவன் இவ்வளவு பரபரப்படைந்ததுதான் காத்தாயிக்குப் புதுமையாக இருந்தது.

''கடத்தல்காரன் செத்துபீ போனான். கட்டித் தங்கம் எங்கே போச்சுன்னு தெரியல. இதுக்கு நீ ஏன் இப்படிக் குதிக்கிறே?'' என்று கேட்டாள் அலட்சியமாக.

''காரணமாத்தான் காத்தாயி, அவ்வளவு தங்கமும் எங்கே இருக்குன்னு எனக்குத் தெரியும்!'' என்று கூறிய செங்கோடன் பாக்குப் பறி நேரத்தில் தான் கண்ட காட்சியைப் பற்றி விவரித்தான்.

''ஏன் இப்படிப் பேராசைப் படறே? நமக்கு இப்ப என்ன குறைச்சல்? நம்ம மாரி அக்கரைச் சீமையிலிருந்து காலாகாலத்தில திரும்பி வந்துட்டா அதுவே நமக்குத் தங்கச் சுரங்கம் கிடைச்ச மாதிரி!'' என்றாள் காத்தாயி.

ஒரே மகன் மாரி வீட்டை விட்டுப் போய் ஐந்து வருஷங்களாகி விட்டன. அக்கரைச்



சீமைக்குப் போய் லட்சம் லட்சமாகச் சம்பாதித்து வரப் போவதாகச் சூளுரைத்து விட்டுப் புறப்பட்டுப் போனான். அவன் திரும்பி வந்து விட்டால் அப்புறம் அவர்களுக்கு என்ன குறை இருக்க முடியும்?

''இத பாரம்மே. மாரி தங்கச் சுரங்கம் கொண்டு வரபோது வரட்டும். அதுக்காவ இப்பக் கைக்கெட்டறாப் போல இருக்கிற தங்கச் சுரங்கத்தை விடச் சொல்லறியா?'' என்றான் செங்கோடன்.

அவன் பேசப் பேசக் காத்தாயிக்கும் நப்பாசை தலை தூக்கியது. அந்தத் தங்கம் கைக்கு வந்து விட்டால் லட்சாதிகாரி ஆகி விடலாமே! செங்கோடன் பாக்கு பறி வேலைக்கு முழுக்குப் போட்டு விடலாம், அவளும் அன்றாடக் கூலிக்கு வயல் வேலை கிடைக்காதா என்று அலையத் தேவையில்லை.

மறுநாள் செங்கோடனும் காத்தாயியும் கையில் மண்வெட்டி சகிதமாகச் சென்றனர். பாக்குத் தோப்புக்கு முதலில் சென்று குறிப்பிட்ட பாக்கு மரத்தில் ஏறி அந்த இடத்தை நன்றாகப் பார்த்துக் கொண்ட பிறகு செங்கோடன் கீழே இறங்கி அந்தத் திசையில் நடக்க ஆரம்பித்தான், கையில் மண் வெட்டியுடன் காத்தாயியும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

தேடிச் சென்ற இடத்தைக் கண்டு பிடிப்பதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. புறட்டப்பட்டிருந்த மண்ணே அடையாளம் காட்டி விட்டது.

காத்தாயியின் கையிலிருந்த மண் வெட்டியை வாங்கிப் பரபரவென்று தோண்டினான் செங்கோடன். ஓரடி ஆழத்துக்குத் தோண்டி முடிப்பதற்குள்ளேயே 'ணங்' என்ற ஓசையுடன் மண் வெட்டி எதிலேயோ மோதியது. செங்கோடனுக்கு ஒரே உற்சாகம். கையாலேயே மண்ணைப் பறிக்க ஆரம்பித்தான்.

கையில் தென்பட்டது ஓர் இரும்புப் பெட்டி. பரபரப்புடன் கையாலும் மண் வெட்டியாலும் அதைச் சுற்றிலுமிருந்த மண்ணைத் தோண்டிப் போட்டனர். இருவரும். பின்பு ஆளுக்கொரு பக்கமாகப் பெட்டியைப் பிடித்து மூச்சைப் பிடித்துக் கொண்டு அதை மேலே தூக்கி வைத்தனர்.

''எம்மாம் கனமிருக்கு! அவ்வளவும் தங்கம்னு பத்து லட்சம் பெறுமே!'' என்றாள் காத்தாயி களிப்புடன்.

பெட்டி பூட்டப்பட்டிருந்தது. செங்கோடன் மண் வெட்டியாலேயே ஓங்கி ஓங்கிப் போட்டுத் தாக்கிய தாக்கலில் மூடி கழன்று கொண்டது. மனத்தில் ஆவல் கொப்பளிக்க மூடியை அகற்றினான் செங்கோடன்.

இதென்ன! உள்ளே கண்ட துண்டமாக வெட்டப்பட்ட மனித உடல்! நிமிர்த்தி வைக்கப்பட்ட தலை! மரண விகாரத்துடன் வானை நோக்கிச் சிரிப்பது போல் வக்கரித்த முகம்!—

''ஐயோ! மாரி! நீயா! என் மகனே! மகனே!'' என்று அலறினாள் காத்தாயி.



ஒரு கையில் விளக்குடனும், மறு கையில் சங்குடனும் கடற்கரையில் சிலையாகி நின்று விட்ட செல்வியின் கதையை பிளாஷ் பேக்கில் சொல்கிறார்கள். குயவர் இன செல்வி மீனவர் இனப் பொன்னனைக் காதலித்து. அவன் இறந்துவிட்டதாக நினைத்து முறை மாமன் மாரியை மணக்கிறாள். பிறந்த குழந்தை பேரில் சந்தேகப்பட்ட மாரி அதை ஒரு மந்திரவாதியிடம் கொண்டு போக அவன் மாரியைக் கொன்று, குழந்தையைக் காப்பாற்றிய பொன்னனையும் கொல்கிறான். உடனே செல்வி சிலை போல் நின்று மந்திரவாதி பில்லி கோடனைக் கொல்ல இயற்கையை அழைக்கிறாள். தூரத்தில் இடி முழக்கம் கேட்கிறது. மின்னல் வந்து கொல்கிறது. என்ன இருக்கிறதென்று இந்தப் படம் டெல்லி திரைப்பட விழாவுக்கு செலக்டானதோ?

போட்டோகிராஃபி கடற் கரை அழகை வர்ணிக்கிறது. சலீல் சௌத்ரி இசை இனிமை தான். ஆனால் பொருத்தம் குறைவு. விஜயகாந்த், பீலி சிவம், பூர்ணிமா மூவரும் இயற்கையாக நடித்திருக்கிறார்கள். விஜயகாந்துக்கு நல்ல எதிர்காலம் தூரத்தில் தெரிகிறது.

இயல்பான கருனி. (இனிமேல் இவர் இல்லையென்று நினைக்கையில் மனம் வருந்துகிறது) செல்வி 'தாத்தா தாத்தா' என்று தொண தொணக்கும் இடம் இனிமை. செல்வியின் கதையை பிளாஷ் பேக்கில் சொல்லும்போது கருனி கதை எப்படி அதில் வரும்? தமிழ் சினிமாவில் இதெல்லாம் கேட்கக்கூடாது.

- நளினி சாஸ்திரி



College Campus
இசைக் கல்லூரி. அடையாறு

✕ பார்வையாளர்களில் ஒரு பகுதி

இசை விழா தொடங்கி ரசிகர்கள் இசை வெள்ளத்தில் மூழ்கி இருக்கும் சமயம் சென்னை அடையாறில் உள்ள இசைக் கல்லூரி மாணவர், மாணவியரிடையே கர்நாடக இசையின் சில நுணுக்கமான விஷயங்களை வெளி படுத்தும் விதமாக ஓர் Quiz contest நடத்தினால் என்ன என்று ஒரு யோசனை பிறந்தது. இசைக் கல்லூரியின் முதல்வர் திரு டி. என் கிருஷ்ணன் மிகுந்த உற்சாகத்துடன் நிகழ்ச்சியை நடத்திக் கொடுக்க முன்வந்தார். பிரபல சங்கீத மேதை டாக்டர் எஸ். ராமநாதன் க்விஸ் நிகழ்ச்சிக்கான கேள்விகளைத் தயாரித்து, தாமே 'க்விஸ் மாஸ்டராக போட்டியை நிகழ்த்த இசைக் கல்லூரி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் முன்னிலையில் போட்டி நடந்தது.

போட்டியில் பங்கேற்ற இசைக் கல்லூரி மாணவ, மாணவியர் பின்வருமாறு:

1. எஸ். பூர்ண பிரக்ஞ ராவ்
2. என். பெரியசாமி
3. பிரேமா ஸ்ரீனிவாசன்
4. என். பத்மா
5. வி. என். விஜயா

கேள்விகள்:

1. அருணகிரிநாதர் எந்த ஊரில் வாழ்ந்தார்?
(போட்டியில் பங்கேற்றவர்களில் எவரும் பதில் சொல்ல முடியாத நிலையில் பார்வையாளரில் முத்துக்குமார் என்ற மாணவர் சரியான பதிலைக் கூறினார்.)
2. அருணகிரிநாதரின் காலத்தில் வாழ்ந்த அரசன் யார்?
(இக் கேள்விக்கான சரியான விடையை விஜயா கூறினார்.)
3. முத்துசாமி தீக்ஷிதர் பாடிய முதல் கீர்த்தனம் எது? எந்த ஊரில் பாடினார்?
(சரியான விடையை பத்மா கூறினார்.)
4. சியாமா சாஸ்திரிகள் மட்டும் பயன் படுத்திய ராகம் எது?
(ஆனந்தபைரவி என்று ஒரு போட்டியாளர் கூற சரியான விடையை பார்வையாளரில் இருந்து கிருஷ்ணகுமாரி கூறினார்.)
5. ஒரு ராகத்தின் எந்த ஸ்வரத்தை கிரகம் செய்தாலும் அதுவே மீண்டும் வரும். என்ன ராகம் அது?
(பார்வையாளரில் கல்யாணி என்ற மாணவி சரியான விடையைக்கூறினார்.)
6. பைரவி ராகத்துக்கு நேரான பண் எது?
(சரியான விடையைப் பெரியசாமி கூறினார்.)
7. அழகர் குறவஞ்சியை இயற்றியது யார்?
(பிரேமா ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறினார்.)
8. சியாமா சாஸ்திரிகள் இயற்றிய தமிழ்ப் பாடல் எது?
(பூர்ண பிரக்ஞ ராவ் சரியான விடையைக் கூறினார்.)
9. வீணையில் எத்தனை மெட்டுக்கள்உள்ளன?
(சரியான விடையைக் கூறியவர் பத்மா)
10. 'பனியின் வந்துனி' என்ற பாட்டைத் தாளத்தோடு பாடிக் காட்டிய திரு ராமநாதன் இது என்ன தாளம் என்று கேட்க சரியான விடையை பூரண பிரக்ஞ ராவ் கூறினார்.
11. மோகனத்தின் அந்தர காந்தாரத்துக்குப் பதில் சாதாரண காந்தாரம் பிடித்தால் அது என்ன ராகம்?
(சரியான விடையைக் கூறி பெரியசாமி பலமான கைத்தட்டலைப் பார்வையாளரிடமிருந்து பெற்றார்.)
12. ஹம்சத்வனியை எத்தெந்த மேளங்களில் ஜன்யமாகக் கொள்ளலாம்?
(பாதி விடையைச் சரியாகக் கூறியவர் பெரியசாமி.)

13. 'வருகலாமோ' என்ற பாடல் என்ன ராகம்? இயற்றியது யார்?
(பிரேமா ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறினர்.)

14. தியாகராஜர் முன்னிலையில் கோபால கிருஷ்ண பாரதி பாடிக் காட்டிய பாடல் எது?
(சரியான விடையைக் கூறியவர் பத்மா)

15. 'தூது நீ சொல்லி வாராய்' எதில் உள்ளது? இயற்றியது யார்?
(பிரேமா ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறினர்.)

16. 'போதும் போதும் ஐயா' என்ற பாடலின் இராகம் எது?
(பாடலைப் பாடிக் காட்டினர்.)
(சரியான விடையைக் கூறியவர் பத்மா)

17. சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய முதல் பாடல் எது?
(சரியான விடையை பெரியசாமி கூறினர்.)

18. ஆபோகி ஆரோகணம் போலும் ஸ்ரீரஞ்சனி அவரோகணம் போலும் உள்ள ராகம் எது?
(பத்மா சரியான விடையைக் கூறிப் பலத்த கரவொலிகளைப் பெற்ருர்.)

19. சாரங்கியைத் தேவாரத்துக்குப் பக்க வாத்தியமாகத் தமிழ்நாட்டில் இன்னும் எந்த ஊரில் வாசிக்கிருர்கள்?
(பார்வையாளரில் டி. ராதா என்ற மாணவி சரியான விடையைக் கூறினர்.)

20. வாடிய பயிர்களைப் பார்த்து 'இரங்கி முத்துசாமி தீக்ஷிதர் பாடிய கீர்த்தனம் எது?
(விஜயா சரியான விடையைக் கூறினர்.)

அதிக மதிப்பெண்களைப் பெற்ற என். பத்மாவுக்கு 'கல்கி' சார்பாக ரூ. 50 பரிசாக அளிக்கப்பட்டது. போட்டியில் பங்கேற்ற மற்ற நால்வருக்கும் 'புத்தகங்கள் அளிக்கப்பட்டன. கண் பார்வை இல்லாவிடினும் சங்கீத ஞானத்தில் சிறந்து விளங்கிய பெரியசாமியின் திறமை குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஓரிரு கேள்விகள் தவிர மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் மாணவ மாணவியர் பதில் அளித்தது இசைக் கல்லூரியின் திறமைக்குச் சான்ருனது.

தலைமை வகித்த கல்லூரி முதல்வர் திரு டி. என். கிருஷ்ணனது ஒத்துழைப்பும், க்விஸ் நிகழ்ச்சியைத் தயாரித்து அற்புதமாக நடத்திக் கொடுக்க திரு எஸ். ராமநாதன் எடுத்துக் கொண்ட முயற்சியும் என்றும் மறக்க முடியாதவை.

விடைகள்

1. திருவண்ணமலை 2.பிரவுடதேவராயன் 3. ஸ்ரீநாதாதி குருகுஹோ - திருத்தணியில் பாடினர் 4. சிந்தாமணி 5. கோப்ரியா 6. கௌசிகம் 7. கன்குஞ்சர பாரதி 8. தருணம் ஈதம்மா 9. 24 10. கண்டதுருவம் 11. சிவரஞ்சனி 12. சங்கராபரணம், ஹரி காம்போதி, கல்யாணி, ஸாரஸாங்கி, சித்ராம்பரி, நாகா நந்தினி 13. மாஞ்சி, கோபால கிருஷ்ணபாரதி 14. சபாபதிக்கு 15. குற்றாலக் குறவஞ்சி; திரிகூட ராசப்பர் 16. பவானி 17. பித்தா பிறை சூடி 18. ஜய மனோஹரி 19. திருநெல்வேலி 20. ஆனந்தாமிருத கர்ஷிணி.

தொகுப்பு : நாயகன்
புகைப்படம் : சிம்லா







✖ திரு ராமநாதனிடமிருந்து பத்மா பரிசு பெறுகிருர்.
✖ இசைக் கல்லூரி முதல்வர் திரு T.N. கிருஷ்ணன், திரு S. ராமநாதன் மற்றும் போட்டியில் பங்கேற்றவர்கள்.
✖ N. பத்மா

வெந்து தணிந்த காடுகள்



இந்திரா பார்த்தசாரதி

8

டெலிஃபோன் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் எடுப்பவரைத்தான் காணோம். அருண் மணியைப் பார்த்தான். பத்தரை. சாதாரணமாக விம்மி நேரம் கழித்துத்தான் உறங்குவது வழக்கம். ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருப்பாள். எட்டு மணிக்கு ஃபோன் செய்தபோதும் ஒருவரும் எடுக்கவில்லை. டெலிஃபோனில் ஏதாவது கோளாறு இருக்குமோ?

சிறிது நேரம் கழித்து டெலிஃபோனை எடுக்கும் சப்தம் கேட்டது.

''விம்மி... அருண் ஹியர்....''

''மெம் சா(ஹ)ப் இன்னும் வரவில்லை.... பூர்ணிமா பேசறேன்.''

அருணுக்கு இச் செய்தி அதிர்ச்சியைத் தந்தது.

''வீட்டில் இல்லையா? எங்கே போனாள்?''

''ஏழு மணிக்கு ஒருவருடன் வந்தார். அவருடன்தான் போயிருக்கிறார் என்று நினைக்கிறேன்.''

''யார் அவர்?''

''எனக்குத் தெரியாது.''

''வந்தவுடன் போன் பண்ணச் சொல்... என் நம்பர்....''

அவன் தான் தங்கியிருந்த ஹோட்டல் நம்பரைச் சொன்னான்.

''இன்னொரு விஷயம். நான் நாளைக் காலை அங்கே வருகிறேன். சாப்பிட வந்துவிடுவேன்.''

எங்கே போயிருப்பாள்?.... யாருடன் போயிருப்பாள்? அவன் ஒரு மணி நேரம் தன் அலுவலக வேலைகளில் மும்முரமாக இருந்தான். விம்மியிடமிருந்து ஃபோன் வரவில்லை.

மறுபடியும் ஃபோன் செய்தான். பூர்ணிமாதான் எடுத்தாள்.

''இன்னும் வரவில்லை.''

''யாருடன் போனாள்?''

''அவர் ஓர் ஓவியர் என்று நினைக்கிறேன். அவரிடம் தம் படங்களைக் காட்டிக்கொண்டிருந்தார்.''

அருண் ஃபோனைக் கீழே வைத்தான்.

ஓவியன்!... ஹூ ஈஸ் தட் பாஸ்டர்ட்? விம்மியா இப்படிச் செய்கிறாள்? அவளுக்கு என்ன வந்து விட்டது? அன்று அவன் தன்னுடன் வழக்காடியதெல்லாம் இட்டமிட்டுச் செய்த முன்னேற்பாடா? நோ... நோ... இதை அவனால் நம்ப முடியவில்லை.

விம்மி அவனுக்கு ஏன் துரோகம் செய்ய வேண்டும்? அவன், அன்று அவள் அப்படிப் பேசியதிலிருந்து அலட்சியமாக இருந்தது வாஸ்தவம்தான். தானாகவே தன் செய்கைக்கு வருந்தி அவள் மன்னிப்புக் கேட்பாள் என்றுதான் அவன் எதிர்பார்த்தான்.

அவள் பொறுமையைத் தூண்டுவதற்காகத்தான் அவன் ராதிகாவுடன் பம்பாய் செல்ல இருப்பதாகச் சொன்னான். ஆனால்... அவள் அவனைப் பற்றிக் கவலைப்படவேயில்லை என்று இப்பொழுது புரிகிறது. அவன் அறையை விட்டு வெளியே வந்தான். ராதிகாவின் அறையில் விளக்கில்லை. தூங்கிவிட்டாள் போலிருக்கிறது. சிறிது நேரம் அங்கேயே நின்றான். யாருடனாவது இப்பொழுது பேச வேண்டும் போல் அவனுக்குத் தோன்றியது.

ராதிகா தப்பாக நினைத்துக் கொள்ள மாட்டாள். அவன் 'காலிங் பெல்'லை அழுத்தினான்.

விளக்கு எரிந்தது. ராதிகா கதவைத் திறந்தாள். உடம்பெல்லாம் தெரியும் மிக மென்மையான 'நைட் கவுன்'. அவனுக்கு உடம்பு வியர்த்தது.

''வாட் ஹாஸ் ஹாப்பண்ட், அருண்?''

''டெல்லிக்கு ஃபோன் பண்ணினேன். விம்மி வீட்டிலில்லே...''

''வாட் டு யு மீன்?''

''யாரோ ஆர்ட்டிஸ்ட் சாயந்திரம் வந்தானாம். அவனோடே போனாளாம். இன்னும் வரல்லே....''

ராதிகா அவனையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றாள்.

''கம் இன்...''

அவன் உள்ளே போய் நாற்காலியில் அமர்ந்து கொண்டான். சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

ராதிகா கட்டிலில் உட்கார்ந்தாள்.

''நீங்கள் சொல்லாவிட்டாலும் நான் யூகித்தேன். கொஞ்ச நாட்களாக உங்களுக்குள்ளே ஏதாவது மனஸ்தாபமா?'' என்று கேட்டாள் ராதிகா.

அருண் பேசாமல் இருந்தான்.

''சொல்லுங்களேன் அருண்....''

''அன்னிக்கு உன் வீட்டுக்கு வந்தேன் பாரு... ரமேஷ் வரலேன்னு ஃபோன் பண்ணியே.... அன்னிலேந்துதான் ஆரம்பிச்சது. எஸ்... யூ வேர் ரைட்... இந்த விம்மியை எனக்குத் தெரியலே தெரியாது. 'ஆல் எஞ்சல்ஸ் ஆர் மேட் ஆஃப் கிளே... இது எனக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சி தெரியுமா? நான் அவளுக்குத் துரோகமே பண்ணலே... ஐ லவ் ஹர்...பட் அவ ஏன் இந்த மாதிரி செய்யணும்? எனக்கு ஒண்ணுமே புரியலே.''

''யார் அவன்?''

''ஐ டோண்ட் நோ...'' என்று குரலைச் சற்று எழுப்பிக் கூறினான் அருண்.

''ப்ளீஸ்... மெல்லப் பேசுங்க... மத்தவங்க தூங்க வேண்டாமா? நத்திங் ஹாஸ் ஹாப்பெண்ட்....''

'' 'நத்திங் ஹாஸ் ஹாப்பெண்ட்?''

''என்ன நடந்துடுத்து? ரமேஷ் என்னை விட்டுப் போயிட்டான். நான் செத்தாப் போயிட்டேன்?''

''உன் கேஸ் 'டிஃபரெண்ட்' யூ ஆர் நாட் சென்டிமெண்டல், பட் ஐ ஆம்....''

''இப்போ என்ன செய்யப் போறீங்க? உலகத்திலே யாருக்கும் யாரும் பொறுப்பில்லே. ஒவ்வொருத்தர் வாழ்க்கையும் அவரவருக்குத்தான் சொந்தம். நீங்கதான், குடும்பம், பாசம், வீடுன்னு அது ஒரு புனிதமான விஷயம் அப்படி இப்படின்னு பத்தாம் பசலித்தனமான கொள்கைகளோட இருந்து வந்திருக்கீங்க. உங்களோட கற்பனைக்கெல்லாம் விம்மியா காரணம்?''

''உலகத்திலே எதற்குமே அர்த்தமில்லேயா?''

''எதுக்கு அர்த்தமுண்டு? அப்பப்போ வாழ்ந்துண்டிருக்கிற அந்த நிமிஷத்துக்குத்தான் அர்த்தமுண்டு. அதை அர்த்தமாக்கிறதும், நம்ம கையிலேதான் இருக்கு.''

''நீ இதை நம்பறியா?''

''யூ நோ...எனக்கு நம்பிக்கைஇல்லேன்னு, அதைப் பத்தி நான் பேச மாட்டேன்.''

''நான் இப்போ நீ சொன்னதை நம்பறயான்னு கேக்கலே. விம்மி இப்படிப் போயிருப்பான்னு நீ நம்பறயா?''

''ஹௌ டு ஐ நோ? கல்யாணமாகிப் பதினைந்து வருஷம் கூட இருந்த ரமேஷை என்னாலே புரிஞ்சுக்க முடியலே... விம்மியைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? நீங்கதான் சொல்லணும்.''

''விம்மிக்குள்ளே இன்னொரு விம்மி இருக்கலாம்னு நீதானே சொன்னே? அப்போ நான் நம்பலே. பட்....'' மேலே ஒன்றும் சொல்லாமல் அவன் நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.

ராதிகா சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டாள். சற்று நேரம் அங்கு அமைதி நிலவியது.

''ஆமாம், விம்மி இப்படிப் போயிருப்பான்னு நீ நம்பறியா'ன்னு கேட்டா இதுக்கு என்ன அர்த்தம்? நான் எதுக்கு நம்பணும்? அது எனக்கு அனுகூலமா இருக்கும்னு?''

அருண் சற்றுத் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.


''வாட் டு யூ மீன்? நான் அந்த அர்த்தத்திலே கேட்கவே யில்லே... 'நீ நம்பறயா'ன்னு 'டு யூ ஹோப் ஸோ'ன்னு அர்த்தமில்லே. 'டு யூ பிலீவ் ஸோ?'ன்னு அர்த்தம். நான் தமிழ்லே சொன்னதை நீ ஏன் இங்கிலீஷ்லே மொழிபெயர்த்துண்டு கஷ்டப்படறே?'' என்றான் அருண்.

''உங்கள் அடி மன நினைவின் விளைவாக இப்படி நீங்கள் சொல்லியிருக்கக் கூடுமென்று நான் நினைத்தேன்'' என்றாள் ராதிகா ஆங்கிலத்தில்.

''என் அடி மனம் ஏன் இவ்வாறு நினைக்க வேண்டும்?''

''நான் இவ்வாறு நம்பக் கூடுமென்று நீங்கள் நம்பலாம் அல்லவா?''

அவளைப் பார்த்துக் கொண்டே அவள் சொன்னதைச் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தான் அருண். அவன் தலையணையில் சாய்ந்தவாறு கைகளைத் தலைக்குப் பின்னால் கட்டிக் கொண்டு இவ்வாறு கூறினான்.



''உன் அடி மனம் என்ன நினைவில் ஆழ்ந்திருக்கிறது?'' என்றான் அருண்.

''நிறைய மனத் தடைகள்உள்ளவர்களுக்குத்தான் அடி மனம் சுறுசுறுப்பாக இருக்கும். எனக்கு எந்த விதமான மனத் தடைகளும் இல்லை. வாழ்ந்து கொண்டிருக்கிற நிமிஷத்தை அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ள நான் தயங்கியதே கிடையாது'' என்றாள் ராதிகா புன்னகையுடன்.

''விம்மி இப்பொழுது அவளுடைய இந்த நிமிஷ வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டிருக்கிறாள் என்று நீ நினைக்கிறாயா?''

ராதிகா சிரித்துக் கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

''விம்மி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவள் இந்த நிமிஷ வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டிருப்பதாக நீங்கள் நினைத்தால்தான் — அல்லது, உங்கள் மொழியில் சொல்லப் போனால், உங்களுக்குத் துரோகம் செய்வதாக நீங்கள் உறுதியாக நம்பினால்தான் — அவளுடைய இந்தச் செய்கை, நீங்கள் உங்களுடைய இந்த நிமிஷ வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளுவதை நியாயப்படுத்தும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தொழில் துறையில் லாபமே எல்லாவற்றையும் நியாயப்படுத்தும் என்ற முறையில் எந்த விதமான மனத் தடையுமின்றிச் செயல்படும் நீங்கள், தனிப்பட்ட உங்கள் சொந்த வாழ்க்கையில் இத்தனை மனச்சாட்சித் தொந்தரவுகளுடன் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.''

''விம்மி வந்துவிட்டாளா என்று ஃபோன் செய்து பார்க்கலாமா?''

''தயவு செய்து உங்கள் அறைக்குச் சென்று ஃபோன் செய்யுங்கள்.... எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்றாள் ராதிகா.

• அருணுக்கு அவள் இவ்வாறு தன்னை அவனிடமிருந்து வெட்டிக் கொள்வதுபோல் பேசியது அசாத்திய எரிச்சலைத் தந்தது.

''வொய் டோண்ட் யு அன்டெர்ஸ்டாண்ட் மீ?'' என்று குரலைச் சற்று எழுப்பி நாற்காலியின் கையைத் தன் முஷ்டியினால் குத்தியவாறு கேட்டான்.

''நான் என்ன புரிந்து கொள்ள வேண்டும்? உங்களுக்கு உங்கள் மனைவி மீதுள்ள பாசத்தையா? அதை உங்கள் அறைக்குச் சென்று டெல்லிக்குப் போன் செய்து இந்த ஹோட்டல் அதிரும்படியாக அறிவியுங்கள், யார் வேண்டாமென்கிறார்கள்? என் அறையில் வேண்டாம். அதுதான் என் வேண்டுகோள். உங்களை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும், மற்றவர்களை நீங்கள் புரிந்து கொள்ளக் கூடாதா?''

அருண் கண்களை மூடிக் கொண்டான். அவன் சிந்திக்கிறானா, தூங்குகிறானா என்று அவளுக்குப் புரியவில்லை. அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. விம்மியை அந்த அளவுக்கு அவன் விரும்புகிறானா?... அவன் அவளிடம் இதைப் பற்றி விவாதிக்க எதற்காக வந்தான்? 'விம்மியைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாம், அவள் உங்களுடைய அன்புக்குத் தகுதியான பெண்தான்' என்று அவன் விரும்பிக் கேட்க நினைத்ததை அவள் சொல்வாள் என்று எதிர்பார்த்தானா அல்லது விம்மி தனக்கு இப்படி — அவன் பாஷையில் சொல்லப் போனால் — 'துரோகம்' செய்து விட்டாளே, தான் மட்டும் அவளிடம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியது அவசியம் தானா என்ற மன உந்துதலில் அவளை இதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தானா? இல்லாவிட்டால்.... அவனுக்கு அவளிடம் அடி மனத்தில் எப்பொழுதுமே ஒரு ஈடுபாடு இருந்து, விம்மி இவ்வாறு செய்து விட்டாளே என்று அவன் நினைப்பது ஒரு வியாஜந்தானா? அவனுக்கே இது பற்றிப் புரியாமல் இருக்கக் கூடும்.

இவளா இன்று மத்தியானம் தொழில் துறை ரீதியாக மனிதர்களின் அந்தரங்க பலங்களையும் பலவீனங்களையும் புரிந்து கொண்டு பிரமிக்கத் தக்க சாமர்த்தியத்தை வெளிப்படுத்தி, கம்பெனிக்கு லட்சக் கணக்கில் லாபம் வருவதற்கான ஏற்பாடுகள் செய்தாள்? அவளுடைய வேகத்துக்கு மற்றவர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை. சாதாரணமாக உணர்ச்சிவயப்படாத அவனே இன்று மத்தியானம் அவளுடைய ஆற்றலையும், திறமையையும் கண்டு வியந்து, அவள்பால் மனம் நெகிழ்ந்திருக்கிறான். .

அவன் கண்களைத் திறக்காமலே உட்கார்ந்திருந்தான்.

அவள் அவனருகே சென்று அவன் தலைமயிரைக் கோதினாள்.

அவன் மெதுவாகக் கண்களைத் திறந்து அவளைப் பார்த்தான்.

''வொய் ஷுட் விம்மி டூ திஸ் டு மீ?'' என்றான் ஈனஸ்வரத்தில்.

''அவள் என்ன செய்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை'' என்றாள் ராதிகா.

''இது தப்பாகவே உனக்குப் படவில்லையா?''

''எது?''

''ஸம் பாஸ்டர்ட், ஆர்டிஸ்ட்...'' என்று அவன் ஆரம்பிப்பதற்குள் அவள் இடைமறித்தாள். ''ப்ளீஸ்.. நீங்கள் விம்மியை விரும்பின அளவு அவ உங்களை விரும்பினதா என்னிக்காவது உங்க கிட்டச் சொல்லியிருக்



'உங்க நாடகத்திலே ரயில்வே ஸ்டேஷனிலே பேசுவதாக வரும் சம்பாஷணை மிகவும் பெரிதாக இருக்கும் போலிருக்கிறதே?'

'என்னசெய்வது? ரயில் வரவரைக்கும் பேசியாக வேண்டும் இல்லையா!'

- பிரியா பாலு



1 ரூபாய்க்கு 10*

* அதிகபட்ச விலை. தலவரிகளைப் பொறுத்தது.

சட்டபூர்வமான எச்சரிக்கை **சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது**

STATUTORY WARNING **CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH**

CASVS-238-203 TAM

பிரதான விற்பனையாளர்: மெஸர்ஸ் A. ஆறுமுக முதலியார் ஏஜென்ஸீஸ், திருவண்ணாமலை-606 601

காளா? யு டுக் எவ்ரிதிங் ஃபார் கிராண்டட்... அழகான பொண்ணு பார்த்தீங்க, கல்யாணம் பண்ணின்டீங்க... அவ விருப்பு, வெறுப்பைப் பத்தி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

''நான் பார்ப்பதற்கு அவ்வளவு ஒண்ணும் மோசமா யில்லே.... ஃபாமிலி பாக்ரவுண்ட், படிப்பு... உத்தியோகம் எந்த விதத்தில் நான் குறைச்சல்? ஒரு மத்தியதரக் குடும்பப் பெண்ணுக்கு வேறென்ன வேணும்?''

''உங்களுடைய இந்த 'ஆட்டிட்யூட்' தான் அவளுக்குப் பிடிக்காம இருக்கலாம்.''

''வாட் 'ஆட்டிட்யூட்? ஆம் ஐ நாட் எ ஸக்ஸஸ்ஃபுல் மான்?''

''நீங்க வாழ்க்கையிலே எது வெற்றின்னு நினைக்கிறீங்களோ, அது அவளை 'இம்ப்ரெஸ்' பண்ணணும்னு என்ன அவசியம்? ஒவ்வொருத்தருக்கும் எது முக்கியமாப் படற துங்கிறதைப் பொறுத்த விஷயம் இது... நீங்க இன்னி மத்தியானம் எல்லோரையும் சமாளிக்க அவுங்களை நீங்க சொன்ன இடத்திலே கையெழுத்துப் போட வெச்சது... ரியலி ஐ வாஸ் ஸ்வெப்ட் ஆஃப் மை ஃபீட்... பட்... விம்மி இன்னிக்கு உங்களோட இருந்திருந்தா, அவளை நீங்க இம்ப்ரஸ் பண்ணிருப்பீங்கன்னு எப்படிச் சொல்ல முடியும்? அவளுடைய அளவுகோலே வேற இருக்கலாம்.''

அருண் எழுந்திருந்தான்.

''டு யூ ஹாவ் எ ட்ரிங்?'' என்று அவன் கேட்டதும், அவள் ஆச்சரியமடைந்தாள்.

''இல்லே... என்ன இந்த நேரத்திலே திடீர்னு?''

''கிழே போய்ப் பார்க்கிறேன்.''

''மணி என்ன தெரியுமா? ஒண்ணு. கிழேயும் கிடைக்காது.''

''பாட்டில் கிடைச்சதுன்னு வாங்கிண்டு வரேன். வாட் அபௌட் யூ?''

''பாட்டில் கிடைக்காது இந்த நேரத்திலே!''

''நான் வாங்கிண்டு வந்தேன்னு, இட் சஸ் ஆன் யு... ஆல்ரைட்?''

''ஓ. கே.''

அருண் தன் அறைக்குச் சென்று பர்ஸை எடுத்துக் கொண்டு கிழே சென்றான்.

'பார்' மூடியிருக்கும் என்பது அவனுக்குத் தெரிந்ததுதான். ஆனால் எப்படியாவது ஒரு பாட்டில் வாங்கியாக வேண்டும். இது அவனுடைய திறமைக்கு ஒரு சவால்.

'லாபி'க்குச் சென்றபோது 'டியூட்டி' முடிந்து உடை மாற்றியிருந்த பார் ரூம் காப்டன், ''குட் நைட் சார்'' என்றான்.

'' 'ஸ்காட்ச்' ஒரு பாட்டில் வேண்டும்.'' என்று புன்னகையுடன் கூறியவாறு அவன் தோளில் கை வைத்தான்.

''ஐ ஆம் ஸாரி சார்...திறந்து கொடுப்பது என்பது மிகவும் கஷ்டம்'' என்றான் கிஷன்.

அருண் அவனிடம் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்தான்.

''உங்கள் அறைக்குச் செல்லுங்கள். கொண்டு வருகிறேன்... 139தானே?''

தன் அறைக்குச் சென்ற அருணுக்கு மறுபடியும் விம்மிக்கு ஃபோன் செய்து பார்க்கலாமா என்று தோன்றிற்று.

'ஆபரேட்டர்' குரலில் சிறிது எரிச்சல் தெரிந்தது. அவன் ஒரு முக்கியமான புள்ளி என்பதும் ஆபரேட்டருக்குத் தெரிந்த விஷயம்தான். தட்டிக் கழிக்க முடியாத நிர்ப்பந்தத்தில் அவன், ''லைன் கிடைத்ததும் உங்களைக் கூப்பிடுகிறேன்'' என்றான்.

'லைன்' கிடைத்து விட்டது. டெலிஃபோன் ஒலித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து 'ஹலோ' என்ற குரல் கேட்டது. விம்மிதான்.

''எங்கே போயிருந்தே நீ?''

''தாமோதரன்னு ஒரு 'ஆர்ட்டிஸ்ட்'. அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். அரை மணி நேரத்துக்கு முன்னாலேதான் வந்தேன்.''

''அங்கே என்ன பண்ணிண்டிருந்தே? ஏன் இத்தனை நேரம்?''

''இந்தக் கேள்வியை நான் எப்பொழுதாவது உங்களைக் கேட்டிருக்கிறேனா மிஸ்டர் அருண்...'' என்று சொல்லிக் கொண்டே ஃபோனைக் கிழே வைத்துவிட்டாள் விம்மி.

அருணுக்கு அடக்க முடியாத சினம்.

'பெல்' ஒலித்தது. அவன் கதவைத் திறந்தான். கிஷன் புன்னகையுடன் பழுப்பு நிறக் காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த பாட்டிலை அவனிடம் கொடுத்தான்.

''தாங்க் யு... கிஷன்.''

தன் கதவைப் பூட்டிக் கொண்டு ராதிகா அறைக்குச் சென்றபோது அவள் ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் அவள் கவனம் அவன் கையிலிருந்த பாட்டிலில் சென்றது.

''யு ஆர் ரியலி க்ரேட், அருண்.''

''அண்ட் இட் சஸ் ஆன் யு...''

''அஃப் கோர்ஸ்'' என்றாள் ராதிகா.

அவள் கண்ணாடித் தம்ளர்களையும், தண்ணீர் வைத்திருந்த 'கோல்ட்'ஃப்ளாஸ்கையும் அவனெதிரே மேஜை மீது வைத்தாள்.

அவன் வாசற் கதவைத் தாளிடும்போது, அருண் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

அவள் புன்னகை செய்தவாறே அவனருகில் வந்து உட்கார்ந்தாள். (தொடரும்)




நடிகர்: நம் நாட்டு மக்கள் முன்னேறாததற்குக் காரணம் விழிப்புணர்ச்சி இல்லாதது தான்...!

நடிகரின் மனைவி: திடீர்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க?


நடிகர்: என் நாடக அரங்கேற்றத்தன்று கண்கூடாகப் பார்த்தேன்...!

- கோவி. பரஞ்ஜோதி

MCA-NTC-66-TAM



உங்கள் எதிர்காலத்தைப் பற்றி கவலைப் படுகிறீர்களா?



எண்ணிப் பாருங்கள் எதிர்காலம் பற்றி. சரியாக திட்டமிட்டால் உங்கள் வயதான காலம் உங்களுக்கு வசந்தமாக இருக்கும். சரியாகத் தயார் படுத்திக் கொள்ளாவிட்டால் நீங்கள் பெரிதும் கவலைப்பட்டு நிம்மதி இழக்க நேரிடும். ஓய்வு பெற்ற பின் போதுமான பணம் இல்லாவிட்டால் வாழ்க்கை கடினமாகிவிடும். உங்கள் திட்டங்களை செயல் படுத்துவதற்கு இதுதான் நேரம்.

ரிட்டயர்மெண்ட் (ஓய்வுகால) சேமிப்பு நிதி திட்டத்தை இன்றே துவங்குங்கள்.

ஒரு நாள், நீங்கள் வேலையிலிருந்து ஓய்வு பெறத்தான் போகிறீர்கள். பின்புவேலை செய்ய முடியாதபோது, உங்கள் பணம்தான் உங்கள் மீதிவாழ்க்கைக்கு வேலை செய்யும். எனவே இப்போதே சேமிப்பீர் ஒரு பப்ளிக் செக்டர் பாங்கில்—30,000-த்திற்கும் மேற்பட்ட கிளைகள் ஏதாவதொன்றில். நீங்கள் விரும்பியபடியே உங்கள் ஓய்வு காலத்தை மகிழ்ச்சியோடு கழிக்கலாம்.

ஜாயின்ட்
பப்ளிசிட்டி
கமிட்டி
பப்ளிக் செக்டர்
பாங்குகள்

உறுப்பினர் பாங்குகள்

அலகாபாத் பாங்க் • ஆந்திரா பாங்க் • பாங்க் ஆப் பரோடா • பாங்க் ஆப் இந்தியா • பாங்க் ஆப் மகாராஷ்டிரா
• கனரா பாங்க் • சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா • கார்ப்பரேஷன் பாங்க் • தேனா பாங்க் • இந்தியன் பாங்க் • இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்
• நியூ பாங்க் ஆப் இந்தியா • ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் • பஞ்சாப் நேஷனல் பாங்க் • பஞ்சாப் & சிந்து பாங்க்
• ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா • ஸ்டேட் பாங்க் ஆப் பிக்கானர் & ஜெய்ப்பூர் • ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத்
• ஸ்டேட் பாங்க் ஆப் இந்தோர் • ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் • ஸ்டேட் பாங்க் ஆப் பாட்டியாலா
• ஸ்டேட் பாங்க் ஆப் சௌராஷ்டிரா • ஸ்டேட் பாங்க் ஆப் திருவாங்கூர் • சிண்டிகேட் பாங்க்
• யூனியன் பாங்க் ஆப் இந்தியா • யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா • யுனைடெட் கமர்ஷியல் பாங்க் • விஜயா பாங்க்.

பப்ளிக் செக்டர் பாங்குகள்—
எங்கிருந்தாலும் என்றும் உங்கள் வாழ்வோடு இணைந்தவை.



கண்ணன் கருணை

திருமுருக கிருபானந்தவாரியார்

குருக்ஷேத்திரத்தில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் கடும் போர் நடந்து கொண்டிருந்தது. அது அறத்துக்கும் மறத்துக்கும் போர் நிகழ்வது போலிருந்தது.

13வது நாள் போரில் பருவம் முதிராத பாலகனாகிய அபிமன்யுவை ஜெயத்ரதன், கர்ணன் முதலியோர் முன்னும் பின்னுமாக இருந்து வஞ்சனை செய்து சிவபெருமானுடைய கொன்றை மாலையை வளைத்துப் போட்டு அபிமன்யுவைக் கொன்றுவிட்டார்கள்.

இதனால் அர்ஜுனன் ஆறாத் துயரம் அடைந்து மிகவும் புலம்பி அழுதான். ஜெயத்ரதனுடைய கொடுமையை எண்ணிக் கொதித்து "நாளை கதிரவன் மேற்கடலில் விழுவதற்குள் ஜெயத்ரதனுடைய தலையை நிலத்தில் வீழ்த்துவேன். இல்லையேல் நான் மாண்டு ஒழிவேன் என்றான்."

"சிந்துபதி தன்னைசிதைத்திடுவன் இன்றேல் வெந்தழலில் வீழ்வன் இது வேதமொழி" என்றான்.

14வது நாள் அர்ச்சுனன் காண்டீபத்தை ஏந்தி கண்ணபிரான் தேர் ஓட்ட கௌரவ சேனைகளைக் கொன்று குவித்தான். அர்ச்சுனனுடைய கடும் கணைகளால் துரியோதனனுடைய சேனைகளின் தலைகள் மலைகளாகக் குவிந்தன. உதிர வெள்ளம் ஓடியது. அர்ச்சுனன் உச்சிக் காலத்துச் சூரியனைப் போல் பகைவர்களால் அணுக முடியாதபடி உக்கிரமுடன் காட்சியளித்தான்.

ஒரு அட்சரோணிக்கு 2,18,700 (இரண்டு லட்சத்துப் பதினெட்டாயிரத்து எழுநூறு) இத்தகைய பதினொரு அட்சரோணி சேனைகள் துரியோதனனுக்கு இருந்தன. இவற்றுள் அந்த ஒரு நாளில் ஏழு அட்சரோணி சேனைகளை அர்ச்சுனன்ஒருவனேகொன்றுவிட்டான்.

அப்பொழுது துரியோதனனுக்குத் தோழனும், வருண பகவானுக்குப் பர்ணசை என்ற மகா நதியிடம் பிறந்தவனுமாகிய சுருதாயுதன் என்ற வீரன் வந்து அர்ச்சுனனைத் தடுத்துப் போர் செய்தான்.

சுருதாயுதன் க்ஷுரப்ரம் என்ற ஆயுதத்தால் தனஞ்செயனுடைய கொடியை அறுத்தான். தெய்வப் படைகளால் அருச்சுனனையும் வாசுதேவரையும் அடித்தான்.

அர்ச்சுனன் புன்னகை புரிந்து கொண்டே தெய்வப் படைகளை ஏவி சுருதாயுதனுடைய தேரையும் வில்லையும் அழித்தான். சுருதாயுதன் மனம் தளர்ந்து தன் தந்தை தனக்குத் தந்த வஜ்ஜிர கதையை எடுத்து அபிமந்திரித்து அர்ச்சுனன் மீது விடுத்தான். அந்தக் கதாயுதம் அர்ச்சுனன் விடுகின்ற கணைகள் அனைத்தையும் பொடி செய்து கொண்டு, அர்ச்சுனன் மீது, ராம பாணம் போல் நெருங்கியது. அர்ச்சுனன் சிறிது அயர்ந்து நின்றான்.

துரியோதனன் இதனைக் கண்டு அர்ச்சுனன் மாண்டான் என்று எண்ணி மகிழ்ந்தான். இதைக் கண்ட வானவர்களும் மருண்டு வருந்தினர். அர்ச்சுனனுடைய தேரில் சாரதியாக அமர்ந்து தேர் விடுகின்ற கருணைக் கடலாகிய கண்ணபிரான் சாட்டைக் குச்சியைக் கீழே வைத்துவிட்டு, அந்தக் கதாயுதத்தைத் தமது திருமார்பில் ஏற்றார். கதாயுதம் மேரு கிரியில் இடி விழுந்தது போல் கண்ணபிரானுடைய மார்பில் வீழ்ந்தது.

கதையை விடுத்த சுருதாயுதன் மார்பு பிளந்து கொண்டு ஒழிந்தான். தேவர்கள் அர்ச்சுனன் மீதும் அச்சுதன் மீதும் மலர் மழை பொழிந்தார்கள்.

இதனைக் கண்ட துரியோதனன் திகைத்துத் திடுக்கிட்டான். "இது என்ன விந்தை! பட்டவன் மாளவில்லை, விட்டவன் மாண்டானே! தென்னை மரத்தில் தேள் கொட்டுவது பனை மரத்தில் நெறி கட்டுவதா? இந்த இடையன் மீது கதாயுதம் விழ, அந்த மடையன் மாண்டானே? இது ஒன்றும் விளங்கவில்லையே!" என்றான்.

அர்ச்சுனன் கண்ணபிரானைத் தொழுது: "ஐயனே! உம்மீது கதை பட்டது. விட்டவன் மாண்டானே? காரணம் யாது?" என்று கேட்டான்.

மாதவர், ''நண்பா! இவன் வருண தேவகுமாரன். இவனது தாய் பர்ணாசை என்ற நதி தேவி. தாயின் வேண்டுகோளுக்காகப் ''போரில், ஆபத்து வந்தபோது இந்த கதையை விடு. யாரை நோக்கி விட்டாலும் பகைவனைக் கொல்லும்'' என்று கூறிக் கொடுத்தான் வருணன். இந்த கதாயுதம் உன் மேல் பட்டால் உன்னைக் கொல்லும். இந்திரன் மீது பட்டால் இந்திரனையும் கொல்லும். என் மீது பட்டால் என்னையும் கொல்லும். அத்தகைய வர பலத்தை உடைய கதாயுதம்.

''ஆனால் ஆயுதம் இல்லாதவன் மீது இக் கதாயுதத்தை விட்டால் உன்னையே கொல்லும்'' என்று வருணன் சொல்லியிருந்தான். அதனால் சாட்டையையும் கீழே போட்டுவிட்டு மார்பில் ஏற்றேன். நிராயுதனாகிய என்மீது பட்டதனால் விட்டவன் மாண்டான். இது தேவ ரகசியம். இனி நீ வேகமாகப் போர் செய்'' என்று எம் பெருமான் கூறியருளினார். இதனைக் கேட்ட அர்ச்சுனனுடைய கண்கள் குளமாயின. ''எம்பெருமானே! என்னுடைய காண்டீபமா வென்றது? தேவரீருடைய கருணை வென்றது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார். என்னைக் காத்தருளிய கருணைக் கடலே! உமது கருணைக்குப் பல கோடி வணக்கங்கள்'' என்று துதி செய்தான்.

ஆதலால் யாருக்கும் கடவுள் கருணை செய்தாலன்றி வெற்றி உண்டாகாது என்பது தேற்றம்.

திருஷ்டி நம்பர்—1

இது கேமிரா மேன் அசோக்குமாருக்கு. பாலு மகேந்திராவின் கேமராவை ஓவர்டேக் செய்யப்போகிறவர். கவிதையைப் படிக்கத்தான் முடியும். இவரோ கவிதையைக் குளிர்ச்சியாய்க் காட்டுகிறார். சுஹாசினியைக் கேமராவுக்காகவே ஓடவிட்டு மூடுபனியையும், சூர்யோதயத்தையும், இயற்கையின் ஜாலங்களையும் அள்ளித் தெளிக்கிறார்.... மனம் சொக்குகிறது.



திருஷ்டி நம்பர்—2

இது டைரக்டர் மகேந்திரனுக்கு. பல்வேறுபட்ட உணர்ச்சிப் போராட்டங்களின் அணிவகுப்பு. அவற்றின் நளினமான நிர்வாகம். தமிழ்ப்பட விதிகளில் இருந்து விலக முயற்சி.

எரிந்து விழும் மன்னி, பாசமான அண்ணன், குழந்தைத்தனம் தங்கை, சந்தேக புத்தி ராம், பரந்தமன பிரதாப் இவர்களை வைத்து இவர்களின் நெஞ்சத்தைக் கிள்ளி விடுகிறார். நம் நெஞ்சமோ கடப்பாறையால் தோண்டப்படுகிறது. ஒவ்வொன்றும்அழுத்தமான படைப்புகள்,

சரத்பாபு தங்கை சுஹாசினியிடம் திருமணம் பற்றி யதார்த்தமாய்ப் பேசுமிடங்கள் இயற்கை. எதற்கெடுத்தாலும் இடிந்துபோய் அழும் மெக்கானிக் மோகன் கேட்பார் பேச்சைக் கேட்டு சுஹாசினியின் காதலை இழக்கிறார். எல்லாவற்றையும் புரிந்து கொண்ட பிரதாப் குழந்தை போன்ற சுஹாசினியை மணந்து அவளை சந்தோஷிக்க முயன்று ஏமாந்து கடைசியில் – சுபமாய் முடிகிறது.

திருஷ்டி நம்பர்—3

இது அறிமுகமாகும் சுஹாசினிக்கு. 'ஆமா எனக்கு மூணு வயசிலே ஒரு குழந்தை இருக்கே அது பத்தி யாரும் சொல்லலையா' என மோகனிடம் வெடிக்குமிடமும், மோகனைப்பார்க்கக் கூடாது என்று கண்ணில் சோப் விழுந்ததாக பாவிக்குமிடமும், ஹேமமாலினிக்கு கைரேகை பார்க்கப் போவதாக மூர்த்தியிடம் ரீல் விடுமிடமும், கல்யாணம் முடிந்ததும் சோகமாய் இடிந்து போவதும்— சுஹாசினி அறிமுகமாகும் போதே பண்பட்ட நடிகையாகத் தோன்றுகிறார்.

ஒட்டு மொத்த திருஷ்டி

ஒருத்தரை ஒருத்தர் மிஞ்சப் பார்க்கும் பிரதாப், மோகன், சிறுவன் மனோகர் (கிச்), சரத் பாபு ஆகியோருக்கும், ராஜாவாகி விட்ட இளையராஜாவுக்கும்.

திருஷ்டி பரிகாரம்

கன்னியமாகவே வாழும் ரம்யா பாத்திரம். சுஹாசினி – மோகன் ஓட்டத்துக்குப் பொருந்தாத வேகம்.

- ஜனனி சாஸ்திரி

உயர்ந்தவர்கள்!

அன்னம்

போட்டிக் கதை – 16



"இன்றைக்கு உங்களுக்கு ஒரு நல்ல சேதி வைத்திருக்கிறேன்!'' என்று கீதா என்னிடம் சொன்ன போது நான் எப்போதும் பயப்படுவதுபோல் அஞ்சவில்லை. காரணம் எந்தப் பெரிய செலவிற்கும் அவள் அடிபோட முடியாது. பாங்கில் என் கையிருப்பு 'மினிமம்!'

ஆகவே அவளைத் தைரியமாக நிமிர்ந்து பார்த்தேன்!

''நம் 'குரு நகரில்' லேடீஸ் கிளப்தொடங்கியிருக்கிறார்கள்!'' என்றாள்.

''அது ஒன்று தனியாக எதற்கு?... அப்படி ஒரு பெயர் வைக்காமல் பிள்ளையார்கோவிலில் நீங்கள்நடத்தும் சங்கங்கள் போதாதா?'' என்று கேட்டேன்.

''உம்.... இது உங்களிடம் வழக்கமான பல்லவி.... இதைக் கேளுங்கள்... பத்மா ராஜன், சாவித்திரி, சுகவனம், வனஜா பஞ்சாபகேசன் லலிதா கிருஷ்ணன் எல்லோருமாக என்னைப் பார்க்க வந்தார்கள்....''

''அப்புறம் என்ன?... இந்தக் கீதா ராகவனும் உடனே சேர்ந்தாக வேண்டும்.... இல்லையா?....''

''அத்தனை பெரிய மனிதர்கள் நம் வீடு தேடி வந்த போது நான் இல்லை என்று எப்படி சொல்வதாம்?....''

''சரி, சரி... தண்டம் எவ்வளவு?'' என்று கேட்டேன்.

''பேச்சைப் பார்! தண்டமாம் தண்டம்! உங்கள் இரண்டு நாள் சிகரெட் செலவுகூட இல்லை... மாதம் ஐந்தே ரூபாய்தான்... நம் வீட்டு வேலைக்காரிக்குக் கூட முப்பது ரூபாய் தருகிறோம்.... எத்தனை எத்தனை புரோகிராம் வைத்திருக்கிறார்கள் தெரியுமா? விமலா சுப்ரமணியன் அடுக்கிக் கொண்டே போனாள். நானும் சும்மா வீட்டில் எத்தனை நேரம் அடைந்து கிடப்பது? நீங்கள் ஆபீஸ் போய் விடுகிறீர்கள்...''

''வேண்டுமானால் நீ ஆபீஸ் போ! நான் வீட்டில் இருக்கிறேன்.''

''என்ன பேச்சு இது? சேரட்டுமா?... வேண்டாமா?...''

''பிரதம மந்திரி ஜனாதிபதியிடம் கேட்பது போல் கேட்கிறாயா?... நீயே ஒரு முடிவுக்கு வந்திருப்பாய்.... சரி.... இந்தக் கிளப் ஆரம்பித்தால் தினம் சாயங்காலம் நீ வீட்டில் இருக்க மாட்டாய் என்று சொல்....''

''தினம் அங்கே என்ன வேலை?... திங்கள், புதன், வெள்ளி, தையல் கிளாஸ், செவ்வாய், வியாழன், சனி அபிராமி அந்தாதி, ஸௌந்தர்யலஹரி வகுப்பு....''

''அப்பாடி.... வாரத்தில் ஒரு நாள்... ஞாயிறாவது மிஞ்சியதே....''

''ஹாம் ஹாம்.... ஞாயிற்றுக் கிழமைதான் நாங்கள் ரொம்ப 'பிஸி'...காலையில் சமூகசேவை... மாலையில் 'எண்டர்டெயின் மெண்ட்.''

''யாருக்கு? எனக்கா?''...

''உங்களுக்கு எதற்கு? சொல்லாமல் பாதிநாள்—சொல்லி விட்டுப் பாதி நாள் சினிமா போய் விடுகிறீர்கள்! எங்களுக்கு ஒரு மாறுதல், பொழுது போக்கு வேண்டாமா? நான் தான் போகப் போகிறேன். கிளப்பில் ஏற்பாடு செய்வார்கள்.''

நான் சில கணங்கள் யோசனையில் ஆழ்ந்தேன். என்னசெய்வது?

''வேண்டாம் என்று சொல்லாதீர்கள்... எனக்கு அப்புறம் வெளியே தலைகாட்ட முடியாது... நம்மை ரொம்பப் பெரியவர்களாக எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்!''

''நீ லேடீஸ் கிளப்பில் மெம்பராகச்

சேர்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால்...'' என்று இழுத்தேன்.

''ஆனாலும் இல்லை. ஈனாலும் இல்லை... ஆனால் என்றாலே எனக்குப் பயம். அது கடைசியில் இல்லைப்பாட்டில் முடியும்!'' என்று சிணுங்க ஆரம்பித்தாள்.

''உனக்கு என்ன பயம்? லேடீஸ் கிளப்பில் சேருவதற்கு முன்பே இத்தனை பேச்சு பேசுகிறாயே! சேர்ந்து விட்டால் அப்புறம்...'' —தலையை ஆட்டிக் கைகளை விரித்தேன்.

''ஒன்றும் ஆகாது. உங்கள் பெண்டாட்டி எப்படிப்பட்டவள்— எத்தனை சாமர்த்தியசாலி என்று புரிய வரும்... அடுத்த வருஷம் நான் தான் காரியதரசி, பாருங்கள்!''

''போச்சுடா! கட்சிக்குள் நுழைந்தவுடன் மந்திரி பதவிக்கு ஆசைப்படுவதாகச் சொல்வார்கள். நீ என்ன இப்போதே அந்த செகரடரிக்கு விமலாவா, கமலாவா, வேட்டு வைக்கப் பார்க்கிறாய்?...'' எனச் சிரித்தேன்..

மறுநாள் கீதா என்னிடம் பத்து ரூபாய்க்கான ஓர் அச்சிட்ட ரசீதை நீட்டினாள்.

''என்ன?... இரண்டு மாதத்துக்குச் சேர்த்துக் கட்டிவிட்டாயா!'' என்று கேட்டேன்.

''இல்லை. ஒரு மாதம்தான். மெம்பர்ஷிப் ஐந்து ரூபாய்.. அனுமதிக் கட்டணம் ஒரு ரூபாய்.... தையல் வகுப்பு இரண்டு ரூபாய்... அந்தாதி வகுப்பு இரண்டு ரூபாய்!''

'பாவம், வீட்டோடு அடைந்து கிடக்கிறாள்... போய் வரட்டும்' என்று இரக்கப்பட்டேன். எங்கள் காலனி 'குருநகர்' மதுரையிலிருந்து ஆறு மைல் தூரம். ஞாயிற்றுக் கிழமை ஒரு நாள்தான் வெளியே புறப்படமுடியும். முதல் வாரத்தில் கூட்டம் அதிகம் என எங்கும் போவதில்லை. இரண்டாவது வாரம் விருந்தினர்கள் வருவார்கள். மூன்றாவது வாரம் யாருக்காவது சௌகரியப்படாது. நாலாவது வாரம் எல்லாம் சரியாக இருக்கும் — பர்ஸ் மட்டும் காலி.

முதல் பத்து நாட்கள் எனக்கு ஒன்றும் மாறுதல் தெரியவில்லை.

'' 'லேடீஸ் கிளப்' போய் வருகிறாயா?'' என்று கேட்டேன்.

''உம்!'' என்றாள் உற்சாகத்துடன்.

முன்பெல்லாம் சமையலறையில் சாதம் கொதிக்கும்போது இளமை ஊஞ்சலாடும். என்னடி மீனாட்சி என்று அதட்டல் கேட்கும். ஆட்டுக்குட்டி முட்டையிடும். பூவரசம்பூ பூக்கும். இப்போது 'தார் அமர் கொன்றையும், சண்பக மாலையும்' மணத்தன. வரவேற்கத் தக்க மாறுதல்கள் எனப் பூரித்துப் போனேன்.

நான் எப்போதும் துணி வாங்கித் தைத்த பனியன்தான் அணிவது. நாலு மீட்டர் மல் வாங்கி உள்ளே வைத்திருந்தேன். தையற்காரனுக்குக் கொடுப்பதற்காகத் தேடினேன். கிடைக்காதபடியால் கீதாவைக் கேட்டேன்.

''தையல் பிராக்டீஸ் பண்ணத் துணி கேட்டார்கள். கொண்டு போனேன். சில பேர் கொண்டு வரவில்லை. நான் கிழித்துக் கொடுத்தேன். அவர்கள் பணம் தரேன்னு சொன்னார்கள். நான்தான் வேண்டாம் என்றேன். அரையும் காலும் வாங்கினால் நமக்குத்தானே அவமானம்?... ஒரு போஸ்டல் சூபரிண்டெண்டின் வீட்டில்....''

''போதும்.... போதும்!... ஐஸ் வைக்காதே!'' என்றேன் எரிச்சலுடன்.

இப்போதைக்கு இந்தக் கிழிசல் பனியனைப் போட்டுக் காலம் தள்ள வேண்டியதுதான். நாளைக்கே இவள் தையல் கற்றுக்கொண்டு எனக்குப் பனியன் தைத்துத் தரும்போது கூலி மிச்சம்தானே என்று கணக்குப் போட்டு மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஒரு சனிக் கிழமை மாலை கீதாவின் புன்னகை காதுகளைத் தொட்டது. அத்தனை சந்தோஷம். ''நாளைக்கு நாங்கள் எங்கே போகிறோம் தெரியுமா?.... 'சிவம்' தியேட்டரில் மாட்னி ஷோ!''

''உன் செகரட்டரி கெட்டிக்காரப் பெண்தான்.... புதுத் தியேட்டர்... புதுப் படம்.. எப்படி டிக்கெட் கிடைத்தது?'' என்று கேட்டேன். க்யூவில் நின்று ஏமாந்த அனுபவஸ்தன் நான்.

''அதெல்லாம் 'ரிசர்வ்'செய்தாகிவிட்டது. ரூபாய் நாலு தொண்ணூறு.''

நான் வாயைப் பிளந்தேன். பக்கத்தில் உள்ள திருப்பரங்குன்றம் தியேட்டருக்கு அடுத்த மாதம் இந்தப் படம் வரப்போகிறது. அங்கு முதல் வகுப்பே தொண்ணூறு பைசா தான்.

''இது 'கிளப்' ஸப்ஸ்கிரிப்ஷனிலிருந்து தானே கொடுக்கிறார்கள்?'' எனக் கேட்டேன் சந்தேகப்பட்டு.

''என்ன நீங்கள்?.... சந்தா கேவலம், ஐந்து ரூபாய். கிளப் வாடகை என்ன? லைட் சார்ஜ் என்ன? தையல் டீச்சர் சம்பளம் என்ன? எப்படியோ சமாளிக்கிறோம்'' என்றாள். நிச்சயம் அடுத்த வருஷம் இவள் காரியதரிசி ஆகிவிடுவாள். அந்தச் சாமர்த்தியம்-அடித்து பேசும் திறமை-வந்து விட்டது.

அதற்கு அடுத்த வாரம் லட்சுமி சுந்தரம் ஹாலில் நாடகம். அதற்கு மறு வாரம் காந்தி மியூஸியத்தில் பரத நாட்டியம்.



மாலை நாலரை மணிக்குப் புறப்பட்டு விடுவாள். புதுப் புடவை சரசரக்கும். ''பாலை வாங்கி வையுங்கள். காய்ச்சும் போது அடிப்பிடிக்க விடாதீர்கள். விஜயா வுக்கு நாளைக்கு 'டெஸ்ட்'. ரேடியோ கேட்கப் போகிறாள். கண்டியுங்கள். ரவி 'மாட்ச'க் குப் போய்விட்டு ஏழு மணிக்கு வருவான். சூடாக போர்ன்விட்டா கொடுங்கள். பிரபு வுக்கு எட்டு மணிக்குத் தூக்கம் வந்துவிடும். சாப்பாடு போடுங்கள். ஜன்னல் கதவை யெல்லாம் மூடி, எலி வராமல் சாக்கடையில் ஞாபகமாகக் கல்லை வையுங்கள்!'' என்று ஒரு பிரசங்கம் செய்துவிட்டு அவள் புறப் பட்டுப் போய்விடுவாள்.

நான் வாசற் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு போகிற வருகிறவர்களை எண்ணிக் கொண்டிருப்பேன்.

ஒரு நாள் இரவு மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும். குழந்தைகள் எல்லோரும் தூங்கி விட்டார்கள். ஒரு மூலையில் துணி மூட்டை சேர்ந்து கொண்டு வந்தது.

''லாண்டரியில் போட வேண்டுமா?...''

''இல்லை. நாளைக்குக் கிராமத்துக்குப் போகி றோம்.... பழைய சட்டைத் துணிகளை யெல் லாம் ஏழைகளுக்குக் கொடுக்கலாம் என்று.''

''இத்தனையுமா?''

''ஏன் இப்படிப் பொருமுகிறீர்கள்? நாம் உபயோகப்படுத்தவும் மாட்டோம்.... இன் னொருத்தருக்குத் தரவும் மாட்டோம். அத் தனை தாராளம் நமக்கு'' என்று சாடினாள்.

நான் வாயடைத்துப் போனேன். என் பார்வை அந்தக் குவியலில் மேலாகக் கிடந்த ஒரு ஜாக்கெட் மேல் விழுந்தது. இவள் ஆசைப்பட்டாள் என்பதற்காக மீட்டர் முப்பது ரூபாய் கொடுத்து வாங்கி நாலு மாதம் கூட ஆகவில்லை. தையற்கூலி பத்து ரூபாய்.

''இதுகூடப் பழசாப் போச்சா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

''பழசாப் போகவில்லை.... சின்னதாப் போச்சு.... இதுக்கு 'மாட்சா' இருந்த புடவையும் கிழிஞ்சு போச்சு!'' என்றாள்.

நான் மேலே பேசவில்லை. ஜாக்கெட்டுக்கு மாட்சாகப் புடவை வாங்க இருநூறு ரூபாய் ஆகும். மௌனமாய் இருப்பது விவேகம் எனப் புரிந்தது.

இப்போது அபிராமி அந்தாதி நன்றாகப் பாடுகிறாள். ஸௌந்தரிய லஹரி அருமை யாகச் சொல்கிறாள். என் பிள்ளை பிரபு கூட அம்மா பாடுவதைக் கேட்டு பத்து சுலோகங்கள் வரை சொல்கிறான். இதை யெல்லாம் 'வரவு' கணக்கில் பற்று எழுத நினைத்த சமயம் எனக்கு ஒரு 'அடிஷனல் வேலை' வந்தது.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமை காலையும் எல்லோருமாக மீனாட்சி அம்மன் கோயிலில் போய், அபிராமி அந்தாதி, ஸௌந்தர்ய லஹரி சொல்லப் போகிறார்களாம். அன்று காலைச் சமையல் எனக்கு ஒதுக்கப் பட்டது.

''இங்கே பாடி என்ன பயன்?... அங்கே அந்த அம்பிகையின் முன்னால் சொல்லும் போது எப்படி உடம்பெல்லாம் சிலிர்த்தது?'' என்று வியந்து போனாள் அவள்.

கராத்தே பயிற்சி 18

பயிற்சியாளர்: டோனி பொன்னையா   படம்: உத்ரா   தயாரிப்பு: குன்றுமணி


சித்திரம்:



பக்கவாட்டில்



முன் புறம்



SIDE KICK

கராத்தேயில் Side Kick என்பது மிகமிக அவசியமானதும் முக்கியமானது மான உதையாகும்.

இம்முறை உதையினால் எவ்வளவு கனமான எதிரியையும் ஒரே உதையில் சாய்த்துவிட முடியும். இந்த உதையில் மிகச் சிலரே திறமைசாலிகளாக இருக்கிறார்கள். அதோடு இந்த உதைப் பயிற்சி மிக கஷ்டமான பயிற்சியும் கூட. இதை நன்றாகக் கவனித்துப் பயிற்சி எடுத்துக் கொண்டவர்கள் சண்டையிடும்போது மிக எளிதாக எதிரியை வீழ்த்தும் திறமை பெற்றவர்களாவார்கள். இதற்குக் கால்கள் மிக உறுதியாக இருக்க வேணும். அதோடு கால்கள் மேல் நோக்கி உதைப்பதற்கும் வளையாத் தன்மை பெறுவதற்கும் பயிற்சி செய்யவேணும்.

எனக்கு உடம்பெல்லாம் எரிந்தது. சமைக்கும்போது அத்தனை இடங்களில் கட்டுக் கொண்டு இருந்தேன்.

மாதங்கள் ஓடின. ஒவ்வொரு மாதமும் என்றால் ஐம்பது ரூபாய் மிச்சம் பிடிக்க முடிந்தது. இப்போது மாதம் இருபது ரூபாய் கடன் ஏறியது.

எங்கள் வீட்டில் பருப்புத் தட்டுப்பாடு. புளி இன்னும் நான்கு நாட்கள்தான் வரும். இன்று மாலை எண்ணெய் கட்டாயம் வாங்க வேண்டும். ஆனால் கீதா தயாரித்த நான்கு டின் ஜாம், பத்து பாட்டில் கிரஷ், இரண்டு புட்டி ஊறுகாய் இருக்கிறது. கம்பி, கோந்து, நார், பஞ்சு, 'பெயின்ட்', பிரஷ் ஒரு அலமாரியை அடைத்துக் கொண்டிருக்கிறது. கீதா பொம்மைகள் தயார் செய்ய வாங்கிய கச்சாப் பொருட்கள் இவை. அவள் செய்த பொம்மைகளை நான் இரவு வேளைகளில் பார்க்க மாட்டேன். இரவு தூக்கம் பிடிக்காது. குழந்தைகளைப் பயமுறுத்த உபயோகப்படும்.

கீதாவின் லேடீஸ் கிளப் ஆண்டு விழா அடுத்த மாதம். ஒரு மாதம் முன்னே நிகழ்ச்சி நிரல் தயாராகி விட்டது. மாலையில் பட்டி மன்றம். பொருள்: "சமூகத்தில் உயர்ந்தவர் பெண்ணா? ஆணா?" பெண் மணி கட்சிக்குக் கீதாதான் தலைவி.

அவள் காலேஜ்வரை நோட்ஸ் படித்துப் பாஸ் செய்தவள். இப்போது என்ன செய்வது? நான் பதினைந்து நாட்கள் லீவு போட்டிருக்கிறேன். லைப்ரரியில் போய் அலைகிறேன். திருக்குறளிலும் கம்ப ராமாயணத்திலும் மேற்கோள் தேடுகிறேன். ஆங்கில 'கொடேஷன்களுக்காக' அலைகிறேன்.

— உங்களால் எனக்கு உதவ முடியுமா?




சிவசைலம்

● ''ஜே'' விவசாயப் பண்ணைக்கு இளவரசர் சார்ல்ஸ் விஜயம் செய்தார். ''இந்திய-பிரிட்டிஷ்நல்லுறவுக்குமஒத்துழைப்புக்கும் டாஃபே நிறுவனமும் ''ஜே''பண்ணையும் எடுத்துக்காட்டுகள்'' என்று கூறி இளவரசரை வரவேற்றார்நிறுவனத் தலைவர் சிவசைலம். அங்கு நடக்கும் விவசாய ஆராய்ச்சிகளைக் கண்டு வியந்து, டிராக்டர்களையும் உபகரணங்களையும் பார்த்து மகிழ்ந்து இந்தியாவின் பல்வேறு மொழி பேசும் மாநிலங்களிலிருந்தும் வந்து பயிற்சி பெறுவோரிடம் பேசி, திறமைகளை உணர்ந்த பின் இளவரசர் அடித்த ஜோக்: ''இங்கே நடப்பனவற்றைக் கண்டு கேட்ட பிறகு உங்களிடம் குறைந்த பட்சம் நான்கு மொழிகளிலாவது பேச வேண்டும்போலிருக்கிறது!'' ஆனால் அது சுலபமில்லை என்று கை விட்ட சார்ல்ஸ், ''அற்புதமான பணி நடக்கிறது'' என்று பாராட்டினார் — ஆங்கிலத்தில்.

முத்துராமன்

● ஹீரோ ரோலிலும் சரி, காரெக்டர் ரோலிலும் சரி, தம் அனுபவ முத்திரையை நன்கு பதித்தவர் முத்துராமன். படங்களில் நடித்தும் படங்களைத் தயாரித்தும் வந்துள்ள இவர் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, முதன் முறையாக ஒரு தமிழ்ப் படத்தை டைரக்ட் செய்யப் போகிறார். தமது பதினைன்காவது வயதிலேயே நடிப்புத் துறைக்கு வந்த இவரின் பொழுது போக்கு பூப்பந்தாட்டம்தான். நேரம் கிடைத்தால் போதும் இன்றும் பூப்பந்தாட்ட மைதானத்தில் இவரைப் பார்க்கலாம்.





எஸ். ராமநாதன்

● பாரதிநூற்றாண்டு நெருங்குகையில் பாரதி அன்பர்களுக்கு ஒரு முக்கியமான செய்தி: பாரதியார் பாடல்கள் பலவற்றை பாரதியாரே எப்படிப் பாடினாரோ அதே விதமாகப் பாட வசதியாக சுவரப்படுத்தி வைத்திருக்கிறார் சங்கீத பூஷணம்திரு எஸ் ராமநாதன். மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு இதை சாதித்துள்ள ராமநாதன், ''வேறு மெட்டுக்களில் இசைக் கலைஞர்கள் பாடுவதானாலும் பாரதியார் கையாண்ட மெட்டுக்களைச் சரித்திர முக்கியத்துவம் கருதியேனும் பதிவு செய்து பாதுகாக்க வேண்டும்'' என்றார்.

பளிச்சிகள் செய்திகள்

அலர் மேல் வள்ளி

● அடுத்த மாதம் லண்டன் பி. பி. சி.யிலிருந்து சிலர் தமிழகத்துக்கு வந்து 'பரதமும் பாரதமும்' என்ற தலைப்பில் திரைப் படம் தயாரிக்கப் போகிறார்கள். இதில் நாட்டியமாடப் போகிறவர் குமாரி அலர் மேல் வள்ளி.

சில மாதங்களுக்கு முன்பு ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பினார். ''பதின்மூன்றாவது தடவையாக வெற்றிகரமான கலைப் பயணம் முடிந்துள்ளது'' என்றார்.

அலர்மேல் வள்ளி, அயல் தேச மொழிகளில் பிரெஞ்சும், இத்தாலியனும் சரளமாகப் பேசுகிறார்.

பேட்டி: ''சிக்கி''
ஏ. சுவாமிநாதன்



சாண்டில்யனின் 'கடல் ராணி' கம்பீரமாக, தளர்வில்லாமல், விரைவாகத் துறைமுகத்தை வந்தடைந்தது. 72 வாரங்கள் எப்படிச் சென்றன என்றே தெரியவில்லை. அருமையான சரித்திரக் கதை.
திருச்சி — இளைய பல்லவன்

காதலைப் போலத்தான் கடலும் கரையில்லாதது, முடிவில்லாதது என்ற தத்துவம் 'கடல் ராணி'க்கும் பொருந்தும்! 'கடல் ராணி' கல்கியில் முடிந்து விட்டாலும் எங்கள் இதயங்களிலெல்லாம் முற்றுமல் என்றும் ஓயாது அலை எழுப்பிக் கொண்டே இருக்கும்!
பெங்களூர்-53 — ''மலர் மடந்தை''

சாண்டில்யனுக்கு ஜவ்வு மிட்டாய் பரிசளிக்க விரும்புகிறேன். விலாசம் தரவும்.
சென்னை-88 — குருதேவன்

சாண்டில்யனின் முந்தைய சரித்திர நாவல்கள் இலக்கியத் தாயின் மணி மகுட வைரங்களென்றால், 'கடல் ராணி' அவற்றில் 'கோஹினூர்'!
வேலாயுதம் பாளையம் — எம். சம்பத்

எங்கள் நெஞ்சைக் கொள்ளை கொண்டது கடல் ராணி. 72 வாரங்களாக எங்களோடு உலாவிய அனந்த், ராணி, சாரு, வோடு மற்றும் பலரையும் நேரில் பார்ப்பது போல் தமது தூரிகையால் உயிரூட்டிய வினுவுக்கும் தரமான நீண்ட சரித்திர நாவலைத் தந்த கல்கிக்கும் நன்றி!
வேலூர் — ஜி. தீபன்.

பாத்திரங்களின் தன்மைகளிலும் அதன் உறவு முறைகளிலும் சிறிது குழப்பமிருந்தாலும், எழுத்துலகில் சரித்திர நாவல்களை எழுதத் தன்னை விட்டால் வேறு ஆள் இல்லை என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டார் சாண்டில்யன்.
கோவை — டி.–கே. கங்காராம்

'Kadal Rani' was not only a historical story but also a historical study.
Thanks to 'KALKI'
கிருஷ்ணகிரி — எஸ். வேங்கடேசன்


யவன ராணி, கடல் புறா, ராஜமுத்திரை ஜலதீபம் போன்ற மிகச் சிறந்த வரலாற்றுப் படைப்புக்களை வழங்கிய திரு சாண்டில்யன் தானா கடல் ராணியையும் எழுதியது என்று எங்களுக்குச் சந்தேகத்தை எழுப்பி விட்டது.
திருமலைராசபுரம் — அசோகன்.

72 வாரங்கள் பழகிய தோஷம் கதை முடியும்போது நெஞ்சை அடைத்தது. அனந்த் – சாண்டில்யனின் கைவண்ணத்தில் மிளிர்ந்த எந்தப் பாத்திரம்தான் சோபிக்காமல் இருந்திருக்கிறது?
சென்னை-44 — ஏ. கே. சங்கர்

சாண்டில்யனின் பல சரித்திர நாவல்களுக்கெல்லாம் ''கடல் ராணி'' மகுடமாய் அமைந்துள்ளது. 'குமுதம்' இதழில் 'ராஜ திலகம்' கடைசி அத்தியாயத்தில் ''ராஜ சிம்மன் சீனர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களுக்குப் புத்தர் கோயில் ஒன்றைக் கட்டி முடித்தான். அது ஒரு பெருங் கதை. ஆயுளும், சக்தியும் இருந்தால் அக்கதையைப் பின்னர் எழுதுகிறேன்'' எனக் கூறியுள்ளார். அந்நீண்ட கதையை வெகு விரைவில் கல்கியில் எழுதி என்போன்ற வாசகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வார் என எதிர்பார்க்கிறேன்.
வேலூர் — எஸ். சீனிவாசன்

சாண்டில்யனின் ''கடல் ராணி'' அவரது நாவல்களிலேயே சிறந்த படைப்பு எனக் கருதப்படும் அளவு அருமையாக அமைந்திருந்தது. கதைக்கு மேலும் மெருகூட்டியவை ''வினு'' அவர்களின் ஓவியங்கள்.
ஸ்ரீரங்கம் — எஸ். கிருஷ்ணன்

72 வாரங்களாக நல்ல விறுவிறுப்புடன் சென்று கொண்டிருந்த கடல் ராணியில் எல்லா நிகழ்ச்சிகளையும் கோவையாகக் கடைசி அத்தியாயத்தில் கூறி இருந்தது மிகவும் பயனுள்ளதாகவும் சுவையாகவும் இருந்தது. தனக்கே உரிய பாணியில் சரித்திர நிகழ்ச்சிகளைச் சுவைபடத் தந்து வாசகர் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதில் அவருக்கு நிகர் அவரே.
திருநெல்வேலி — கே. ருக்மணி





6. நினைத்ததை முடிப்பேன்

தென்றல் பறிபோனதில் வாழ்க்கை முழுவதையுமே இழந்து விட்டதைப் போன்ற பிரமை அவனுக்கேற்பட்டது. எப்படியாவது அதே பெயரில் ஒன்றை நடத்தியாக வேண்டும்.

ஒரு இழப்புக்குப் பின்னால் மேலும் சில இழப்புகளுக்கு வழிவகுத்துக் கொள்வது தானே அவனது பழக்கம். தென்றல் போனால் என்ன? இன்னொரு நஷ்ட வாய்க்கால் திறந்து கொண்டால் போயிற்று. அப்படி அவன் நினைவு வெறி பிடித்து அலைந்ததே தவிர அவனது உள் மனம் தென்றலுக்காக அழுதது. ஒரு பள்ளிக்கூடம் அல்லவா தென்றலோடு போய் விட்டது. 'கண்மணி தென்றல்' என்றொரு கவிதை எழுதித் தீர்த்துக் கொண்டான்.

அன்று இரவு அவன் ஆத்திரமிக்கவனானான். தன்னிடமிருந்த நாலைந்து பேர்களோடு தென்றல் அலுவலகத்திற்குள் நுழைந்தான். அப்போது அங்கு கூலிக்கு அமர்த்தப்பட்ட இரண்டொரு பேர்களே இருந்தார்கள். அவர்களைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்லி அவன் அந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டான். ஆனால் இந்தப் போலித்தனமான ஆக்ரமிப்பு எவ்வளவு நாள் நீடிக்கும்.

அன்றிரவே அந்தக் கூலிக்காரர்கள் மகா ஜனங்களைத் திரட்டிக் கொண்டு தென்றல் அலுவலகத்தை முற்றுகையிட்டார்கள். அவன் போலீசுக்கு டெலிபோன் செய்தான். என்ன பயன்? சட்டபூர்வமாகப் பத்திரிகையை இன்னொருவன் பேரில் மாற்றிக் கொடுத்த பிறகு சட்ட விரோதமான ஆக்கிரமிப்பு எப்படிச் செல்லுபடியாகும்?

அவனுடைய ஆட்கள் தென்றலிலிருந்து வெளியேற வேண்டியிருந்தது. அன்றிரவெல்லாம் அவனுக்குத் தூக்கமில்லை. எங்கே தொட்டாலும் ஏமாற்றம் காத்திருப்பது அவனுக்குப் புதியதல்லவே.

பொழுது விடிந்ததும் நாலைந்து கம்பெனிகளில் மொத்த மொத்தமாகப் பணத்தை வாங்கிக் கொண்டு ஒரு அச்சகம் வாங்குவதற்காக அலைந்தான். நாலைந்து நாட்கள் வரை ஒரு அச்சகமும் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஐந்து நாட்களுக்குமேல் ஒரு பணத்தை அவனால் பத்திரப்படுத்த முடியுமா? அத்தனை பணமும் வீணாகச் செலவழிந்து விட்டது.

பிறகு அவனது உடன்பிறந்த சகோதரரின் மகன் பஞ்சு அருணாசலம் சென்னை மவுண்ட் ரோடுக்கு அருகில் ஒரு சிறிய அச்சகத்தை விலைக்கு வாங்கினான். அந்தஅச்சகத்திலேயே ஒரு சிறிய பத்திரிகையை ஆரம்பிக்கும்படி அவன் கட்டளையிட்டான்.

அப்போது தென்றல் திரை என்ற பத்திரிகையை கே. ஆர். பாலன் என்பவர் நடத்திக் கொண்டிருந்தார். இந்தத் 'தென்றல் திரை' ஏற்கனவே அவன் ஆரம்பித்து நடத்திக் கொண்டிருந்த பத்திரிகைதான். இரண்டு வருட காலம் அவன் அதை நடத்தி சினிமா தொழிலில் ஏராளமான விரோதிகளைத் தேடிக் கொண்ட பிறகு சேலத்தைச் சேர்ந்த பத்மநாபன் என்பவருக்கு விற்று விட்டான். அவர் அதை கே. ஆர். பாலனுக்கு விற்று விட்டார்.

தென்றலுக்குப் பிறகு அதே பெயர் வேண்டுமென்பதற்காக அந்தப் பத்திரிகையை வாங்கும்படி அவன் பஞ்சு அருணாசலத்துக்கு யோசனை கூறினான். கே. ஆர். பாலன் அந்தப் பத்திரிகையையும் அதோடு சேர்ந்து ஒரு இறக்குமதி லைசென்சையும் பஞ்சு அருணாசலத்துக்குக் கொடுத்தார்.

அரசியலில் மீண்டும் அவன் கடுமையாகச் சிக்கி பொழுதையும், பொருளையும் வீணாக்கிக் கொள்ள அந்தப் பத்திரிகையும் நன்கு உதவிற்று.

பத்திரிகை ஆரம்பமான போது தனிப்பட்ட மனிதர்களைத் தாக்கி அதிகம் வம்புகளில் ஈடுபடவில்லை. ஓரளவுக்கு அமைதியான சூழல் இருந்ததால் மீண்டும் சினிமாப்படம் எடுக்கலாமே என்றவன் யோசித்தான்.

நிர்வாகத்திற்கு ஒழுங்கான ஆள் வேண்டுமே. அப்போது தமிழ் தேசிய கட்சியில் சில அன்பர்கள் இருந்தார்கள். கட்சித்தேர்த



இந்த வாரம் கல்கி வாசகர்களுக்காகத் துணுக்கு வேட்டையாடியவர் கொடைக்கானல் கூட்டுறவுப் பால் வழங்கும் ஒன்றியத்தின் தனி அலுவலர் திரு அ. சீனிவாசன். திண்டுக்கல்லைச் சேர்ந்த இவர் பொருளியல் பட்டம் பெற்றது ஜபல்பூரிலுள்ள டி. என். ஜெயின் காலைக் கல்லூரியில். மாலையில் அதே கல்லூரியில் சட்டப்படிப்பு நடைபெறுமாம். இந்த இதழில் "ஒரே கட்டிடம் மூன்று கல்லூரிகள்" என்ற துணுக்கைத் தேர்ந்தெடுத்த சீனிவாசன் சொன்னது: "ஒரே பெயரில் இரண்டு மூன்று விதமான கல்லூரிகள் இருப்பது வடக்கே சகஜம். ஆனால் ஒரே கட்டிடத்தில் வெவ்வேறு பெயர்கள் கொண்ட கல்லூரிகள் நடப்பது நானறிந்தவரை புதுமைதான்."

கர்நாடக இசையில் மிகுந்த விருப்பமுடைய இவருக்கு நிறையத் திரைப்படங்கள் பார்ப்பதிலும் ஆசை!

அமைப்பு : [illegible]

புகைப்படம் : ராயன் பிரதர்ஸ்

துணுக்கு வேட்டை

வில் தோற்று விட்டதால் அவர்கள் மிகவும் சோர்வுற்று இருந்தார்கள். அவர்களில் ஒருவர் சென்னை நகரில் த. தே. க. சார்பில் சட்டசபைக்குப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற கே. முருகேசன்.

அவர் மிகவும் நாணயமானவர், நேர்மையானவர். வாய் தவறிக் கூட ஒரு பொய் சொல்ல மாட்டார். அவரை அவன் பங்காளியாக ஆக்கிக் கொண்டான். எல்லாவற்றையுமே அவர் பொறுப்பில் விட்டிருந்தால் நிச்சயமாக அவனும் உருப்பட்டிருப்பான்.

ஆனால் தான் உருப்படாமல் போவதற்காக சில வேலைக்காரர்களை அவனே நியமித்தான். கைதேர்ந்த அந்த வேலைக்காரர்கள் முருகேசன் கண்ணிலும் மிளகாய்ப் பொடியைத் தூவித் திருட வேண்டிய அளவுக்குத் திருட ஆரம்பித்தார்கள்.

ஆரம்பத்தில் அவர்களுடைய திருட்டு அவனுக்குத் தெரியாது. (அவற்றைப் பின்னால் கூறுகிறேன்.)

அவன் பேரில் ஏராளமான வழக்குகள் இருந்ததால் எந்தப் பேரில் கம்பெனியை ஆரம்பிப்பது என்பது அவனுக்குக் குழப்பமாகவே இருந்தது.

அவனுடைய வக்கீல் "கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ்" என்ற பேரிலேயே ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதுதான் முறை என்றும் தர்ம உபதேசம் செய்து விட்டார். அது எவ்வளவு மடத்தனமான உபதேசம் என்பது படம் வளர்ந்த நாளில் இருந்து வெளியாகும் நாள் வரை தெரிந்து கொண்டே இருந்தது. காத்திருந்த கடன்காரர்கள் எல்லாம் படம் கொஞ்ச தூரம் வளரட்டும் என்று மவுனமாக இருந்தார்கள். அதுவும் அந்த மூடனுக்குத் தெரியாது.

படத்துக்குக் கதை வேண்டுமே! இரண்டு நண்பர்கள் வங்காளத்திலிருந்து "சேஷ் பரிச்சயா" என்ற வங்காளிப் படத்தை விலைக்கு வாங்கி யிருந்தார்கள். வாங்கினோர்களை தவிர அவர்களுக்கு அந்தக் கதை பிடிக்கவில்லை.

ஆனால் அவனுக்கும் வலம்புரி சோமநாதன் கே. முருகேசன், ஜி. ஆர். நாதன் ஆகியோருக்கும் அந்தக் கதை மிகவும் பிடித்திருந்தது. உடனே அதை விலைக்கு வாங்கி "வானம்பாடி" என்று தலைப்புக் கொடுத்தான். வம்பு தும்பில்லாத நடிகைகளை ஒப்பந்தம் செய்தான். கையிலிருந்த பணத்தைக் கொண்டே படத்தை ஆரம்பித்து விட்டான்.

திரு. முருகேசன் ஓர் அற்புதமான நிர்வாகி. அப்போது இரண்டு வேளையும் குடிக்கத் தொடங்கி விட்ட அவனுக்குத் தொல்லை கொடுக்காமல் எல்லாப் பொறுப்புகளையும் தாமே ஏற்று நடத்தினார். நிம்மதியாக நான்கு நாட்கள் பெங்களூரில் தங்கிவருவோம் என்று அவன் புறப்பட்டான். பெங்களூர் உட்லண்ட்ஸில் தங்கியிருக்கும் போதுதான் வானம்பாடியில் வரும் "கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும்" என்ற பாடலையும் "தூக்கணாங் குருவிக்கூடு" என்ற பாடலையும் "ஏட்டில் எழுதிவைத்தேன்" என்ற பாடலையும் அவன் எழுதினான்.

இசையமைப்பாளர் கே. வி. மகாதேவனிடம் ஒரு நல்ல பழக்கமுண்டு. ஒரு இலக்கியத்தையே தூக்கி அவர் கையில் கொடுத்து விட்டால் அதைக் கொஞ்சம்கூட மாற்றாமல் அவர் இசையமைத்து விடுவார். அது இடிக்கிறது. இது இடிக்கிறது என்று கூற மாட்டார்.

அவர் அவன் எழுதிவந்த பாடல்களுக்கு அப்படியே இசையமைத்து விட்டார். வள்ளல் எம். எம். ஏ. சின்னப்பா தேவர் படத்தை நல்ல விலைக்கு விற்றுக் கொடுத்தார். அவனுக்கு மீண்டும் தைரியம் வந்து விட்டது. தைரியமா, திமிர் வந்து விட்டது.

அந்த நேரத்தில் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக அவன் பஞ்சு அருணாசலத்தை அழைத்துக் கொண்டு விமானத்தில் கோவை

உங்கள் மகனை காணும்போது மனதில் தோன்றுவது அவனது ஒளிமயமான எதிர்காலமே!



உங்கள் கனவுகளை நனவாக்கவும்,
உங்கள் மகனின் ஒளிமயமான
எதிர்கால இலட்சியத்தை நிறை
வேற்றவும் சீரான முறையில்
நீண்டகாலத்திற்கு எங்களிடம்
உள்ள சிறப்பு சேமிப்புத் திட்டங்
களில் ஒன்றை தேர்ந்தெடுத்து
சேமிக்கத் தொடங்கிடுவீர்.
எங்களது சேமிப்புத் திட்டங்கள்
உங்கள் மகனின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக
இருப்பதைக் காண்பீர்கள்.

உங்கள் அருகாமையிலுள்ள எமது
கிளை நிர்வாகியுடன் இன்றே
தொடர்பு கொள்ளுங்கள்.

LVB

லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர் 639 001
நிர்வாக அலுவலகம்: சென்னை 600 086

என். வி. ஸ்ரீநிவாசன்
சேர்மன்

SUSAK/LVB/514

சென்றான். கோவை விமான நிலையத்தில் வரவேற்க நண்பர்கள் வந்திருந்தார்கள். அவர்களோடு அலங்கார் ஓட்டலுக்குப் போய் சேர்ந்ததும், 'இந்தியன் ஏர்-லைன்சிலிருந்து ஒரு டெலிபோன் வந்தது. உங்கள் சாமான்களோடு வேறு ஏதாவது சாமான் கலந்து வந்திருக்கிறதா?' என்று. அவன் இல்லை என்று கூறி விட்டான்.

கொஞ்ச நேரத்தில் பஞ்சு ஓடி வந்து ஒரு தோல் பை இருப்பதாகக் கூறினான். அதை அப்படியே எடுத்து ஒரு தொண்டனிடம் கொடுத்து இந்தியன் ஏர்லைன்ஸில் சேர்த்து விட்டான். பை போன பிறகுதான் நடுக்கம் நீங்கிய பஞ்சு கூறினான். 'அதிலிருந்தது அவ்வளவும் தங்கக் கட்டி' என்று. கூட இருந்த நண்பர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் அதை ஆமோதித்தார். சுமார் பத்து இலட்ச ரூபாய் பெறுமானமுள்ளது என்றார்.

அவனுக்குக் கோபம் வந்து விட்டது. அடப்பாவிகளா இதை ஏன் முன்பே சொல்லாமல் போனீர்கள். இந்தியாவில் தங்கம் கிடைத்தால் அரிச்சந்திரன் கூட பொய் சொல்லுவானே. அதுவும் தங்கத்தை அப்படியே விலைக்கு வாங்குபவர்கள் கோவையில்தானே இருக்கிறார்கள் என்றான் அவன். ஆனாலும் அவனுக்கொரு திருப்தி. தங்கத்தோடு போலீஸில் மாட்டிக் கொண்டிருந்தால் என்ன கதியாகி இருக்கும்!

அன்று மாலை நண்பர் கோவை செழியன் அவனைப் பார்க்க வந்தார். அவரும் த.தே.க. உறுப்பினர். தேர்தல் தோல்வியால் சோர்வுற்று இருந்தவர். தொழிற்சங்க வேலைகளில் மும்முரமாக இறங்கியிருந்தார்.

அவரைப் பார்த்ததும் அவனுக்கு இவரை வைத்து இன்னொரு சினிமா கம்பெனி ஆரம்பிக்கலாமே என்று தோன்றிற்று. காரணம் அவரும் ஒரு நல்ல நிர்வாகி.

அந்த யோசனையை அவரிடம் வெளியிட்டான். அவர் மட்டற்ற மகிழ்ச்சியோடு உடனே ஒப்புக் கொண்டார். அவரை உடனே சென்னைக்கு வரச் சொல்லித் தன் தாயார் பெயரில் ''விசாலாட்சி பிலிம்ஸ்'' என்ற கம்பெனியை துவக்கினான்.

அதற்கு மூலதனத்திற்காக அவர்களிருவரும் பழைய கோட்டை பட்டக்காரரும், பிரபல காங்கிரஸ்காரருமான நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியாரை அணுகினார்கள். அவர் ஒரு நல்ல தொகையைக் கடனாகக் கொடுத்தார்.

அந்தக் கம்பெனிக்கும் ஒரு கதையை வங்காளத்தில் பார்க்கலாமென்று அவனும், செழியனும் இன்னொரு நபரும் கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்கள். கல்கத்தாவில் அவர்கள் ஏராளமான படத்தைப் பார்த்தார்கள். எதுவும் சரியாக இல்லை. அங்கே அவர்கள் பார்த்த ஒரு நாடகம் தான் மறக்க முடியாததாக இருந்தது. ஆனால் அந்த நாடகம் திரைக்கு லாயக்கற்றது. ''சேது'' என்பது நாடகத்தின் பெயர். அவர்கள் பார்த்தது 217வது காட்சி.

சரி நம்ம ஊரிலேயே கதை பார்க்கலாம் என்று ரயிலில் புறப்பட்டார்கள். ரயிலில் ஒரு வேடிக்கை நிகழ்ந்தது.

ஒரு வங்காளத் தம்பதிகள். ஒரு ஸ்டேஷனில் அந்தத் தம்பதிக்கும் அவர்களுக்கும் சிறிய தகராறு வந்து விட்டது. அதிலிருந்து சென்னை வரும்வரை அவனும், செழியனும் தமிழிலேயே திட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தத் தம்பதி வங்காளியில் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

நல்ல வேளையாக ஒருவர் திட்டுவது இன்னொருவருக்குப் புரியவில்லை.

சென்னை வந்ததும் ''விசாலாட்சி பிலிம்ஸ்'' க்காக எல்டாம்ஸ் ரோடில் ஒரு கட்டிடத்தை எடுத்து ஒரு பிளைமவுத் காரையும், ஒரு அம்பாசிடர் காரையும் கொடுத்து கோவைச் செழியனை உட்கார வைத்தான் அவன்.

மன்றாடியார் கடனுக்கு அவனும், அவன் குடும்பமும் மட்டுமே கையெழுத்துப் போட்டிருந்ததால் கம்பெனியை ஒழுங்காக நிர்வகிப்பதாக செழியன் உறுதி கூறினார். அப்படியே நிர்வகித்தார்.

இந்த நிலையில் சென்னை மாநகராட்சிக்கான மேயர் தேர்தல் வந்தது. மாநகராட்சி உறுப்பினர்கள் சிலர் த. தே. க.வுக்கு வந்து விட்டதால் மாநகராட்சியில் தி.மு.க. அப்போது பலவீனமாக இருந்தது.

(தொடரும்)

கொலை - கனவு - விலங்கு

மகாராஷ்டிர மாநிலம் புனாவுக்கு அருகிலுள்ள மான்ரூட் கிராமம் - சந்திரகலா என்ற 25 வயது கர்ப்பிணிப் பெண் காலையில் தனது கணவனுடன் வயலில் வேலைக்குச் சென்றாள். மாலை கணவன் மட்டும் வீடு திரும்பினான். மனைவியைக் காணோம்! ''மாயமாய் மறைந்து விட்டாள்!'' என்று புலம்பினான் கணவன். போலீஸில் புகார் கொடுக்கப்பட்டது. ஒரு நாள் இரவு, சந்திரகலாவின் அண்ணன் ஒரு கனவு கண்டான். அலறியடித்துக் கொண்டு ஓடிப் போலீசாரிடம் தான் கண்ட கனவைச் சொன்னான். போலீசார் முதலில் நம்பவில்லை-ஆனால்- முடிவில் கனவு உண்மையாகவே இருந்தது! சந்திரகலா கனவில் அண்ணனிடம் தன்னைக் கொலை செய்து வீசியெறிந்த கால்வாய்க்கரையைக் குறிப்பிட்டாள். அதே இடத்தில் அவளது சடலம் கிடைத்தது! அவள் தன்னைக் கொலை செய்தது யார் என்றும் குறிப்பிட்டாள். போலீசார் லபக்கென்று அவனைப் பிடித்தனர். அவனும் குற்றத்தை ஒப்புக் கொண்டான். அவன் வேறு யாருமல்ல! சந்திரகலாவின் கணவனே தான்! காரணம், மனைவியின் நடத்தையில் சந்தேகம்.

- தஞ்சை மணியன்

ஆதாரம் : பிளிட்ஸ்





இசையுலகில் இரட்டையர்

எளிமையான மாடி அறை. சுவரில் சுற்றிலும் தெய்வப் படங்கள். ஓவியர் ராஜம் வரைந்த சத்குரு ஸ்ரீ தியாகராஜர் படம் பளிச்சென்று தெரிகிறது. அறையில் நுழைந்தவுடன் ஓரமாக உயரமான ஷெல்ஃப்களில் புத்தகங்கள் ... புத்தகங்கள். அத்தனையும் சங்கீத சம்பந்தமானவை. ஒருபுறம் மேசையில் ரேடியோ. அதற்கு நேர் எதிரே உயரம் குறைவாக (சிறு மேசையில் இன்னும் சில புத்தங்கள்) டெலிபோன். அதற்கு அருகே மரத்திலான சிறு மண்டபம். அதில் தெய்வத் திரு உருவங்கள். ஊதுவத்தி மணம் அறையெங்கும் கமழ்கிறது. உறையிலிட்ட வீணை ஒருபுறம்.

இந்தப் பின்னணியில்தான் இசைச் சகோதரர்கள் பி. வி. ராமன் — பி.வி. லட்சுமணன் அவர்களைச் சந்திக்கிறோம்.

உற்சாகமாக திரு ராமன் பேச ஆரம்பிக்க, திரு லட்சுமணனும் சிரித்தபடியே சம்பாஷணையில் கலந்து கொள்கிறார்:

● சங்கீதத்தில் சிறு வயது முதலே ஆர்வம் உண்டோ?

இல்லை. சங்கீதத் தொடர்பு தற்செயல் தான். ஆந்திரத்தில் டெபுடி கலெக்டராக இருந்த தகப்பனார் இறந்து போன பிறகு, பெங்களூரில் எங்கள் மாமா எஸ். டி. வெங்கட்ராமன் அவர்களுடன் வசிக்க நேர்ந்தது. மாமா பிரபல பத்திரிகையாளர்; சர் எம். விசுவேசுவரய்யாவின் உதவியாளர் வேறு. டைகர் வரதாச்சாரியாரின் ஆத்ம சிநேகிதர். அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவர் டைகர்தான். அவர் எங்களைப் பார்த்துவிட்டு, ஊருக்குப் போன பின், ''பையன்களை அனுப்புங்கள்'' என்று மாமாவுக்குத் தந்தி அனுப்பினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவருடனேயே குருகுல வாசம் போல் தங்கி, சங்கீதம் கற்றுக் கொண்டோம். சங்கீத பூஷணம் பட்டமும் வாங்கினோம்.

● முதல் கச்சேரி எப்போது?

சென்னையில் 1944ல் முதல் கச்சேரி செய்தோம். திரு எம். எஸ். ஜி.யின் சகோதரர் திரு எம். எஸ். அனந்தராமன் வயலின் வாசித்தார். அவருக்கும் அதுதான் முதல் கச்சேரி!

முன்பாக, 1942-ல் ஒரு கச்சேரி செய்திருக்கிறோம்.

● உங்கள் சங்கீத வாழ்க்கையில் மறக்க முடியாத அநுபவம் ஏதானும்—?

1970 என்று நினைவு. நெல்லூரில் ஸ்ரீ கோபாலஸ்வாமி கோயிலில் பாடிக்கொண்டிருந்தோம். ஆஹிரி ராகத்தில் நாராயண தீர்த்தர் சாகித்யமான 'வீக்ஷேதஹம் கதா கோபால மூர்த்திம்' என்று தொடங்கினோம். மிருதங்க வித்வான் வேடிக்கையாக, ''என்ன! ஆஹிரி பாடி விட்டீர்களே! ஆஹிரி பாடினால் சாப்பாடு கிடைக்காது என்று தெரியாதா?'' எனக் கேட்டார். ''அதெல்லாம் ரொம்ப பெர்ஃபெக்டாக பாடினால்தான் நிகழும். நாமென்ன அவ்வளவு சுத்தமாகவா பாடி விட்டோம்?'' என்று பதிலளித்தோம். கச்சேரி முடிவடைந்தது. கோவிலிலேயே சாப்பாடு ஏற்பாடாகியிருந்தது. பட்டர் எங்களுக்கென்று புளியோதரை முதலியன கொண்டு வருகையில், திடீரென்று ஒருவன் ஓடி வந்து பாத்திரத்தோடு பறித்துக் கொண்டு போய் விட்டான்! பட்டர் அவனைத் துரத்த, அவன் வேகமாக ஓட, கடைசியில் பாத்திரத்தில் உள்ளதை அப்படியே தன் மேல் துண்டிக்

கொட்டிக் கொண்டு, பாத்திரத்தை மட்டும் போட்டு விட்டு ஓடி விட்டான்.

''பார்த்தீர்களா, சாப்பாடு போயிற்று!'' என்று சிரித்தார் மிருதங்க வித்வான் திரு சீனிவாசன். கடைசியில் எப்படியோ ஒருவிதமாக உப்புமாவும் காபியுமாக உணவை முடித்துக் கொண்டோம்!''

● எப்போதாவது தனித்தனியே கச்சேரி செய்தது உண்டா?

துவக்கக் காலத்தில் உண்டு. அப்போது லட்சுமணன் புதுதில்லி கர்நாடக சங்கீத சபாவில் லெக்சரராக இருந்தார். ஆனால் 1957க்குப் பிறகு கிடையாது. திடீரென்று இருவரில் யாராவது ஒருவருக்கு உடல்நலம் சரியில்லையென்றால் கூட, கச்சேரித் தேதியை ஒத்திப் போட்டு விடுவோம்.

● இரட்டைப் பிறவியாக — பார்க்க ஒரே மாதிரி இருக்கிறீர்கள். கதைகளில் வருவது போல ஆள் மாறாட்டம் நிகழ்வது உண்டா?

எங்களுக்குள் 12—13 நிமிடங்கள்தான் வித்தியாசம். நிறையப் பேர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ரேடியோவில் பாடும்போது கேட்டுவிட்டு யார் பாடியது என்று கண்டு பிடிப்பது கஷ்டம். நேரில் கேட்டால் கண்டு பிடிக்கலாம். அப்படியும் கூட, நான் ஆலாபனை செய்தால், 'லட்சுமணன் ஆலாபனை சுமார்தான்!' என்று விமர்சனம் எழுதி விடுவார்கள்! இதே மாதிரி அவர் ஸ்வரம் பாடினால் என் பெயரைக் குறிப்பிட்டு விடுவார்கள்!

● இரட்டையர்களைப் பற்றி சினிமா வந்திருக்கிறது; செய்திகளும் வருகின்றன. ஒருவருக்கு உடம்பு சரியில்லையென்றால் மற்றவருக்கும் பாதிப்பு நிகழ்வது போல— இது உங்களைப் பொறுத்தவரையில் எப்படி?


பதினாறு வயது வரை எங்களுக்குள் அதே போல ஏற்பட்டதுண்டு — குறிப்பாக ஹெல்த் சம்பந்தப்பட்ட வரையில். எனக்கு உடல் நலம் குன்றினால், லட்சுமணனுக்கும் ஏதாவது வந்து விடுமோ என்று வீட்டில் கவலைப் படுவார்கள். அப்படியே நிகழ்ந்ததும் உண்டு. அதற்கப்புறம் குறைந்து விட்டது. பாடுகிற சமயத்தில் ஒரே மனநிலை ஏற்படுவதுண்டு. உதாரணமாக லட்சுமணன் ஒரு ராகத்தை எடுத்து ஆலாபனை செய்தால், 'அட இதையே நானும் பாட எண்ணியிருந்தேனே!' என்று நினைப்பதுண்டு. சில சமயம் ராகம் என்ன, கிருதிகூட ஒரேமாதிரி இருவருக்கும் தோன்றுவதுண்டு.

● தமிழ்ப் பாடல்கள் மேடையில் பிரபலமாக வழி என்ன?

இசைக்கு - குறிப்பாக கர்நாடக இசைக்கு மும்மூர்த்திகளின் சாகித்தியங்கள் அஸ்திவாரமாகவும் பொருத்தமாகவும் விளங்கின. ஆனாலும், பத்திரிகை வாயிலாக, தமிழிசை இயக்கம் துவங்கி சூடுபிடிக்கு முன்பே, 1942ல் எங்கள் குரு தமிழில் நிறைய வர்ணம் எழுதியிருக்கிறார். ('அன்னமே....' என்கிற ஆரபி ராக வர்ணம் பாடிக் காண்பிக்கிறார்கள்.) பிற்பகல் வேளைகளில், சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டவாறே வர்ணங்கள் பாடுவார் டைகர். அவற்றை அப்படியே அருகிலிருந்து நோட் பண்ணிக் கொள்ளுவோம்....

மும்மூர்த்திகளின் கீர்த்தனைகள் பரவக் காரணம், அவர்கள் இப்படித்தான் பாட வேண்டும் என்று மெட்டமைத்து, ஸ்வரப் படுத்தி வைத்தார்கள். ஆனால் தமிழில் அவ்வாறு இல்லையே! பாரதியார் பாடல்களை எடுத்துக் கொள்ளுங்கள். எப்படி வேண்டுமானாலும் பாடுகிறார்கள். ஸ்வாதித் திருநாள் கீர்த்தனைகளை முதலில் கோயில்களில் பாடிக் கொண்டிருந்த போது, முத்தையா பாகவதர்தான் வர்ண மெட்டெல்லாம் அமைத்து வெளிக் கொணர்ந்தார்கள். பிறகு திரு செம்மங்குடி அவர்களும் ஸ்வரப்படுத்தினார். திருவாய்மொழி, திருப்பாவைப் பாடல்களை திரு அரியக்குடி அவர்கள் மெட்டமைத்துப் பிரபலப்படுத்தினார். பாபநாசம் சிவன் பாடல்கள் நிச்சயம் காலத்தை வென்று நிற்கும். ஏனென்றால் அவரே மெட்டமைத்து வைத்திருக்கிறார். பாரதி பாடல்களையும் யாராவது ராகம் எழுதி, ஸ்வரப்படுத்தி வைத்தால் நல்லது. பாரதி நூற்றாண்டு விழா வருகிறதல்லவா?''

ரயிலுக்கு நேரமாகி விட்டதைத் தெரிவித்து, புறப்பட ஆயத்தமாகிறார்கள். அவர்களுக்கு அவசரம்தான் என்றாலும் இதற்குள் ஓவியர் நடனம் வரைந்து விட்ட கார்ட்டூன் சித்திரத்தைப் பார்த்து ரசிக்கச் சில நிமிஷம் எடுத்துக் கொள்கிறார்கள். சகோதரர்களிடமிருந்து விடைபெறுகிறோம். —தமயந்தி



மஞ்சள் புரட்சி!

கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் தட்டுப்பாட்டைக் குறைக்க 'சூரியகாந்தி எண்ணெய்' உற்பத்தியில் ஊக்கம் காட்ட 1971-72-ல் தமிழகத்தில் ஏற்பட்ட புரட்சிக்கு வேளாண் இலாகா கொடுத்த பெயர் ''மஞ்சள் புரட்சி.''

-ரமா ராமநாதன்

புதுமை புதுமை







திரைக்கதை தோன்றிய கதை

● எம். ஏ. காஜா தற்போது இயக்கி வரும் படம் வசந்த காலம்.

''வியட்நாம் வீடு படத்தில் பிரஸ்டீஜ் பத்மநாபன் ஒரு கதை சொல்கிறார். கதை இவ்வாறு முடிகிறது: ''எங்கப்பா உனக்குக் கஞ்சி ஊத்தற இதே மண் சட்டியில் நான் அவருக்குக் கஞ்சி ஊத்தி புத்தி புகட்டணும்னு நினைச்சேன். அது உடைஞ்சு போச்சேன்னு தான் வருத்தப்படறேன்'ன்னு சொன்னானாம் பேரன்! அந்தக் கருத்தை வைத்தே 'வசந்த கால'த்தைப் படைத்திருக்கிறேன். ஒரு படத்தில் வந்த சிறு குட்டிக்கதையின் கருத்தை வைத்து ஒரு திரைப் படம் எடுப்பது புதுமை தானே?'' என்கிறார் காஜா. பேட்டி: சலன்

வீடு தேடிய படலம்

● ஸி.என். ரங்கராஜன் தற்போது டைரக்ட் செய்துவரும் படம் மீண்டும் கோகிலா. ''இப்போதெல்லாம் படம் பிடிக்க ஸ்டுடியோப் பக்கம் யார் போகிறார்கள்? மீண்டும் கோகிலாவில் நடிக்க நான் மிகவும் கஷ்டப் பட்டுத் தேடியது ஒன்றுதான். ஆலந்தூர் அருகே அதைக் கண்டு பிடித்தேன். நான் கூறுவது ஒரு வீட்டைத்தான். எங்கள் கதைக்கேற்ப அழகான வீடு அமைவதற்குள் ரொம்ப சிரமமாகப் போய் விட்டது. இந்தப் படத்தில்தான் முதன் முறையாக ஸ்ரீதேவி பிராமணப் பெண்ணாக மடிசார் கட்டி நடிக்கிறார். கமலஹாசன்தான் அவரது ஜோடி'' என்கிறார் ரங்கராஜன்.





காலத்தை வென்ற கவிஞன்

வ. உ. சி. கப்பல் கம்பெனி துவக்கிய அன்றுதான் வரகவி பாரதியார் கவிதைக் கம்பெனியைத் துவக்கினார். இரண்டு கம்பெனிகளுக்கும் போடப்பட்ட மூலதனம் தேச பக்திதான்!

நினைத்தால் நெஞ்சு பொறுக்க முடியாத அவல நிலையில் நாடு இருந்தபோது அந்த நிலையை மாற்றியமைக்கப் பாரதி முயன்றானே, அதிலே அவன் வெற்றி பெற்றானா? காலம் தந்த அந்தக் கவிஞன் தனது கவிதைத் திறத்தால் காலத்தை வென்று காட்டினானா?

அவன் காலத்தில் வாழ்ந்த மகா கவிகள் இதைப் பற்றி என்ன சொல்கிறார்கள், பார்ப்போம்.

பாரதியார் பாண்டிச்சேரியில் தங்கியிருந்தபோது அவரோடு பழகிய பெருமையும் அவருக்குத் தாசனாகும் உரிமையும் பெற்றவர் பாவேந்தர் பாரதிதாசன். பாவேந்தரின் பாடல் ஒன்றைச் சொல்கிறேன், கேளுங்கள்.

வானேந்து மன்னர்களும்
 மானியம்கொள் புலவர்களும்
  மகிழ்வாய் அந்நாள்
தானேந்திக் காத்தநறும்
 தமிழ்மொழியைத் தாய்மொழியை
  உயிரை இந்த
நானேந்திக் காக்குனர்யார்?
 நன்னுனர் யாரென
  அயலார் நகைக்கும்போழ்தில்
தோளேந்திக் காத்தஎழில்
 சுப்பிரமணிய பாரதியார்
  நாமம் வாழ்க!

''தமிழ் மொழியை'' என்று சொல்லிவிட்டு ஆங்கில மோகம் கொண்டவர்களுக்கு உணர்த்த 'தாய்மொழியை' என்றும் சொல்கிறார். அத்துடன் நிற்க அவரால் முடியவில்லை. 'உயிரை' என்றும் கூறுகின்றார். தன்மானம் உள்ள தமிழனுக்கு 'உயிர் வேறு தமிழ் வேறு' என்றநிலை இருக்காது அல்லவா.

''வானேந்தும் மன்னர்களும், மானியம் கொள் புலவர்களும் காத்த தமிழை — உங்கள் தாய் மொழியை — உங்கள் உயிரை — இந்த நானேந்திக் காக்குநர் யார்? காப்பது கூடக் கிடக்கட்டும். அந்தத் தமிழ் மொழியை நன்னுநர் யார்?''

என்று அயலார் கேட்டார்களாம்! கேட்டதோடு நிற்காமல் 'வானேந்திக் காக்க மன்னர்கள் இல்லை; அந்த மரபையே அழித்து முடித்து விட்டோம். மானியம் கொள் புலவரில்லை. மெக்காலே கல்வித் திட்டத்தின் மூலம் புகழ் மிக்க அந்தக் கவிஞர் பரம்பரையை அழித்து முடித்துவிட்டோம் என்று இறுமாப்புடன் சிரித்தார்களாம் அந்த அயலார்!

அந்த நேரத்திலே துள்ளி எழுந்து, தன் தோள்களைத் தட்டிக் காட்டி, ''இதோ! என் தோள்கள் இருக்கின்றன, தமிழ்மொழியை — தாய் மொழியை உயிரைத் தாங்கிக் காப்பதற்கு என்று எட்டயபுரத்துக் கவிஞர் பாரதியார் இறுமாப்புடன் கூறினாராம். அதனால் அவரை வாழ்த்துகிறார் பாரதி தாசனார். ஆக பாரதி காலத்தை வென்ற கவிஞர் தானே!

அடுத்து பாரதி காலத்தை வென்ற கவிஞன்தானா என்று அவர் காலத்துக் கவிஞரான இராமலிங்கம் பிள்ளையைக் கேட்போம். இதோ, அவருடைய பாடல் ஒன்று.

'படித்தறியா மிகஏழைக்
 கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக்
 கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த
 தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடை
 சுருக்கிக் கட்டி,
'எடுத்தெறிய வேணுமிந்த
 அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே'
 என்றென்று ஆர்த்திங்கு
அடித்துரைத்தே ஆவேசம்
 கொள்வா னென்றால்
அப்பாட்டின் பெருமைசொல
 யாரே வல்லார்?

அந்தக் கவிதையிலே கவியரசர் பாரதியார் காலத்தை வென்று, தமிழ் ஞாலத்தை மாற்றிவிட்டார் என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

''படித்தறியா மிக ஏழைக் கிழவனும்'' என்று நாமக்கல் கவிஞர் கூறுவதால் பாரதியாரின் பாடல்கள் படித்தவர்க்கேயன்றி, எழுத்தறிவற்ற பாமரனுக்கும் தேச பக்தியை ஊட்டக் கூடியவை என்பது தெளிவாகும். பாமரனையும் தேச பக்தனாக ஆக்குவதற்காகத்தானே பழகு தமிழிலே தேச பக்திப் பாடல்களைப் புனைந்தார் பாரதியார்.

ஏழைக் கிழவனை நாமக்கல் கவிஞர் வருணிப்பதே அலாதியான சுவையுடையது. 'மிக' என்னும் அடைமொழியை ஏழை என்னும் சொல்லோடு மட்டுமின்றி, கிழவன் என்னும் சொல்லோடும் இணைத்துப் பொருள் காண வேண்டும். அப்படிக் கண்டால் 'பரம ஏழையான படுகிழவன்' என்ற பொருள் கிடைக்கும். அப்படிப்பட்டவனும் பாரதியின் தேசிய கீதங்களை யாரேனும் பாடக் கேட்டால் துடித்தெழுவானாம்! துடித்தெழுந்து மெலிந்த தோளைக் கொட்டிய மறு கணத்திலே, போருக்குப் புறப்படுவான் போல, தன் உடையை வரிந்து கட்டுவானாம். அது தொளைமிகுந்த கந்தல் உடையாதலால், வரிந்துக் கட்டாமல், சுருக்கிக் கட்டினான் போலும்! வரிந்துக் கட்டினால் 'விஷயம்' வெளிப்பட்டு விடுமல்லவா! (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டம் பாரதீய வித்யா பவன் சொற்பொழிவு)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

REGISTERED No. M. 4262
Registered as a Newspaper in Sri Lanka